# திருக்கோயில்

ஜனவரி 1981 ரூ. 1-25



இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு



ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டுக்கு வந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு வருகை தருதல், உடனிருப்பவர்கள்: மத்திய அமைச்சர் மாண்புமிகு ஆர். வி. சாமிநாதன், அறங்காவலர் குழுத்தலைவர் திரு. வி. என். சிதம்பரம், மற்றும் அறங்காவலர்கள் திரு. எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி, திரு. என். எஸ். சித்தன் முதலிய பெருமக்கள்.

K. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

முகப்பு:

அருள்மிகு பகவதி அம்மன்,

கன்னியாகுமரி

# திருக்கோயில்

ஆசிரியர்: ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

மாலை : 23 | திருவள்ளுவர் ஆண்டு 2012, இரவுத்திரி ஆண்டு-தை (சனவரி 1981) | மணி: 3

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப்படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ.25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப்பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

கருத்தரங்கத் தொடக்கச் சிறப்புரை
—மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள்

கம்பர் கவியமுதம்
—திருமுருக கிருபானந்தவாரியார்

இராமகிருஷ்ணரும் விவேகானந்தரும்
—டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள்

வரும் கன்றும், அரும் பசுவும்
—திரு. பண்டித நடேசனார், பி. ஏ., ஜே. பி.

திருமுறையின் திருப்புகழ்
—புலவர் நடேச நாராயணன், பி. லிட்.

திருவள்ளுவரும் திருக்குறளும்
—ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

சக்தி தோத்திரங்கள்
—திரு. மு. அருணாசலம்

தமிழ் மருத்துவ மாண்பு
—டாக்டர் சிற்சபை

குறள் காட்டும் வாழ்வு
—டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம்

பௌத்த மதத்தின் அடிப்படைப் போதனைகள்
—திரு. அ. லெ. நடராஜன்

செந்நின்ற மனப் பெரியார்
—திரு. கா. அ. ச. ரகுநாயகன், எம். ஏ.

சேதுபதி சிலை திறப்பு விழா

சோதிலிங்கத் தலங்கள்

ஆறுபடை வீடு
—திரு. கு. பழநிவேலு முதலியார்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# கருத்தரங்கத் தொடக்கச் சிறப்புரை*

மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள்
*அறநிலைய அமைச்சர்*

முன்னுரை

வைணவம் சைவம் என்னும் இருபெரும் சமயங்களும், தமிழ்நாட்டில் இரண்டு கண்கள்போலச் சிறந்து விளங்குவனவாகும். வைணவமும் சைவமும், மிக்க பழமையும் பெருமையும் வாய்ந்தனவாய், சங்ககாலத் திற்கும் மிக முற்பட்டுத் தோன்றி, தொன்னெடுங்காலமாக நிலவி வரும் சிறப்புடையனவாகத் திகழ்கின்றன.

**திருவேங்கடமும், சிலப்பதிகாரமும்**

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, சங்க காலத்தில், திருவேங்கடம் என்னும் இத் திருப்பதியில், பெருமாள் நின்ற திருக்கோலத்தில் விளங்கிக் காட்சிதரும் சிறப்பு, சிலப்பதிகாரத்தில் எழிலுற இனிது விளக்கப்பெற்றுள்ளது.

''வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலையத்து உச்சி மீமிசை,
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
இருமருங்கு ஓங்கிய இடைநிலைத் தானத்து,
மின்னுக்கோடி யுடுத்து விளங்குவிற் பூண்டு,
நன்னிற மேகம் நின்றது போலப்,
பகையணங் காழியும், பால்வெண் சங்கமும்
தகைபெறும் தாமரைக் கையில் ஏந்தி,
நலங்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு,
பொலம்பூ ஆடையிற் பொலிந்து தோன்றிய,
செங்கண் நெடியோன் நின்ற வண்ணம்''

என்று, திருவேங்கடத்தில் வேங்கடேசப் பெருமாள், அழகுற எழுந்தருளி வழங்கும் இனிய காட்சியினை, இளங்கோவடிகள் புகழ்ந்து போற்றித் துதித்திருக்கின்றார். இதனால் 2000 ஆண்டுகளுக்கும் முன்னரே, வைணவ சமயம் தமிழ்நாட்டில் தழைத்து ஓங்கியிருந்த தன்மையும், தொன்மையும் புலனாகின்றன.

சைவ வைணவ சமரசம்

முதலாழ்வார்களுள் ஒருவராகிய பேயாழ்வார், சிவபெருமானும் திருமாலும் பிரிவறக் கலந்து பிணைந்து, இணைந்து, இத் திருவேங்கடமலையின்கண் ஒருருவாய்க் காட்சி தருதலை,

''தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும்
சக்கரமும்,
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்,—
சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து''

என்று அழகுறப் பாடியருளியிருக்கின்றார். இதனால் பண்டைக்காலத்தில் தமிழக மக்களிடையில் பரவி நிலவியிருந்த சைவ வைணவ சமரச மனப்பான்மை தெளிவுறத் தெரிகின்றது.

**சமயம் மக்களைப் பிரித்தல் கூடாது**

ஆனால், இக்காலத்தில் அத்தகைய சமரசப் பொதுமை நோக்கம், போதிய அளவு நம்மிடையில் உள்ளதா? என்பது ஐயமாகவே உள்ளது. ''நாம் ஒருவரை ஒருவர் வெறுப்பதற்குப் போதிய சமயங்களைப் பெற்றிருக்கின்றோம். ஆனால் ஒருவரை யொருவர் விரும்புவதற்கு உரிய முறையில் போதிய சமயங்களை நாம் பெற்றிருக்கவில்லை'' (We have enough religion to hate one another but not enough to love one another) என்று ஜொனாதன் ஸ்விப்ட் (Jonathan Swift) என்னும் ஆங்கில அறிஞர் ஒருவர் குறிப்பிடுகின்றார். சமயங்கள் தம் கொள்கைகளால் மக்களைப் பலவகைகளில் பிரித்துவிடாமல், அனைவரையும் ஒன்று சேர்த்து ஒற்றுமைப்படுத்த முயலுதல் வேண்டும் என்று, அவர் விரும்புகின்றார்.

---

* திருப்பதித் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில், தமிழ்த்துறையின் சார்பில் நிகழ்ந்த **"நம்மாழ்வாரும், மாணிக்கவாசகரும்"** பற்றிய கருத்தரங்கத்தினைத் தொடங்கிவைத்து, நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு **இராம. வீரப்பன்** அவர்கள் ஆற்றிய சிறப்புரை, இங்கு வெளியிடப் பெறுகின்றது. (24-1-81).
—ஆசிரியர்.

த்தரங்கம்

அத்தகையதொரு சிறந்த நல்ல விருப்பத்துடனும், குறிக்கோளுடனுமே, ''நம்மாழ்வாரும் மாணிக்கவாசகரும்'' பற்றிய இக் கருத்தரங்கு நடைபெறுகிறது என்று அறிந்து, நான் பெரிதும் மகிழ்கின்றேன்: இக் கருத்தரங்கை ஏற்பாடு செய்தவர்களை, நான் பெரிதும் அன்புடன் பாராட்டுகின்றேன்.

நம்மாழ்வார்

நம்மாழ்வார், பாண்டிய நாட்டில், திருநெல்வேலி மாவட்டத்தில், தாமிரபரணி நதிக்கரையில், திருக்குருகூர் என்னும் தலத்தில், காரியார் என்னும் வைணவப்பெருஞ் சான்றோருக்கும், உடைய நங்கையார் என்னும் அம்மையாருக்கும் மைந்தராகத் தோன்றியருளினார். ஆழ்வார்கள் அனைவருமே சிறப்புடையவர்களாயினும், அவர்களுள்ளும் மிகவும் சிறப்புடையவராகப் பெரிதும் போற்றப் பெறுபவர், நம்மாழ்வார். அனைவராலும் நம்முடைய ஆழ்வார் என்று உரிமை கொண்டாடிப் புகழ்ந்து போற்றப்பெறும் சிறப்பு அமைந்ததனால், அவருக்கு நம்மாழ்வார் என்னும் காரணச் சிறப்புப் பெயர் ஏற்பட்டது. ''நம்பெருமாள் - நம்மாழ்வார் - நம்சீயர்-நம்பிள்ளை என்பர், அவரவர்தம் ஏற்றத்தால்'' எனவரும் உபதேச ரத்தினமாலைச் செய்யுள், நம்மாழ்வாரின் ஒப்புயர்வற்ற பெருமாட்சிமையினை இனிது உணர்த்துகின்றது. திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்னும் நான்கு நூல்களை, நம்மாழ்வார் அருளிச் செய்துள்ளார்.

மாணிக்கவாசகர்

பாண்டிய நாட்டில், மதுரைக்கு அருகில் உள்ள திருவாதவூர் என்னும் தலத்தில், சம்புபாதாசிரியர் என்பவருக்கும், சிவஞானவதி என்னும் அம்மையாருக்கும் மைந்தராகத் தோன்றியவர், மாணிக்கவாசகர். அவர் இளமையிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து, அரிமர்த்தனன் என்னும் பாண்டிய மன்னனின் முதலமைச்சராக விளங்கினார். திருவாசகம், திருக்கோவையார் என்னும் இருபெரு நூல்களை இயற்றியருளினார்.

ஒப்புமைகள்

நம்மாழ்வார், மாணிக்கவாசகர் என்னும் இவ்விருபெருஞ் சான்றோர்களும், வேறு வேறு இடத்தில், வேறுவேறு சமயத்தைச் சேர்ந்தவர்களாகத் தோன்றியிருப்பினும், ''சான்றோர் சான்றோர் பாலர் ஆவர்'' என்று புறநானூறு பாடுவதுபோல், தம்முள் பலவகைகளில் ஒப்புமைத் தன்மைகள் உடையவராகத் திகழ்கின்றனர். அவ்வொப்புமைத் தன்மைகளுள் ஒரு சிலவற்றை மட்டும் ஈண்டுக் காண்போம்.

(1) ஆன்மீக வளர்ச்சி

''ஆன்மீக வளர்ச்சியின் பலவேறு படிநிலைகளையும், உணர்ச்சித் திறன்களையும் திருவாசகம் அழகிய பாடல்களினால் விளக்கிக் காட்டுகின்றது'' (Thiruvasagam depicts in beautiful hymns the various stages in the evolution of the soul) என்று பேரறிஞர் ஜி. யூ. போப் (Dr. G. U. Pope) முதலிய பேரறிஞர்கள் கூறுவர். அம்முறையில் நம்மாழ்வார் பாடிய திருவாய்மொழியும்கூட, ஆன்மீக வளர்ச்சியின் பலவேறு படிநிலைகளையும், உணர்ச்சித் திறன்களையும், அழகிய இனிய பாடல்களினால் அருமையான சொல்லோவியங்களாக அமைத்து விளக்கிக் காட்டுகின்றது. ''ஆசாரிய இருதயம்'' என்னும் அரும்பெரும் வைணவத் திறனாய்வு நூல், இதனை அழகுற ஆராய்ந்து விரிவாக விளக்குகின்றது.

(2) நூல்களின் சிறப்பு

நம்மாழ்வார் பாடிய திருவாய்மொழியையும், மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவாசகம் திருக்கோவையார் என்பனவற்றையும், பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் பெரிதும் போற்றிப் புகழ்ந்து வியந்து துதித்துள்ளனர்.

''ஆயிரம் மாமறைக்கும் அலங்காரம்;
அருந் தமிழ்க்குப்
பாயிரம்; நாற்கவிக்குப் படிச்சந்தம்,
பனுவற்கு எல்லாம்
தாய்; இரு நாற்றிசைக்கும் தனித் தீபம்;
தண்ணம் குருகூர்ச்
சேய், இரு மாமரபும் செவ்வியான்,
செய்த செய்யுட்களே''

என்று நம்மாழ்வாரின் நூல்களைப் பெரியோர்கள் புகழ்ந்து போற்றியுள்ளனர். இவ்வாறே மாணிக்கவாசகரின் திருவாசகம், திருச்சிற்றம்பலக்கோவையார்என்னும் நூல்களையும், பண்டைய பெரியோர்கள் பலரும் பாராட்டிப் போற்றியுள்ளனர்.

''ஆரணம்காண் என்பர் அந்தணர்;
யோகியர் ஆகமத்தின்
காரணம்காண் என்பர்; காமுகர்
காம நன்னூலது என்பர் ;
ஏரணம்காண் என்பர் எண்ணர் ;
எழுத்துஎன்பர் இன்புலவோர் ;
சீரணங்குஆய சிற்றம்பலக்
கோவையைச் செப்பிடினே''

என்னும் ஒரு பழைய சிறந்த பாடல், மணிவாசகரின் திருக்கோவையார் பற்றிப் பெரிதும் புகழ்ந்து போற்றுகின்றது. இத்தகைய பல பாடல்களால், நம்மாழ்வார்ன் நூல்

களும், மணிவாசகரின் நூல்களும் எத்துணைச் சிறப்பு வாய்ந்தவை என்பதை யாவரும் இனிதுணரலாம்.

### (3) அர்த்த பஞ்சகம்

நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழியில், ஐந்துவகையான சிறந்த பொருள்கள் விளக்கப்பட்டுள்ளன என்று, வைணவப் பெருஞ்சான்றோர்கள் கூறுவர். அந்த ஐந்து பொருள்களும் ''அர்த்த பஞ்சகம்'' எனப்படும். அவையாவன இறைவனது தன்மை, உயிரின்தன்மை, உயிர்கள் இறைவனின் அருளைப்பெறும் நெறியின் தன்மை, உயிர்கள் அருளைப் பெறவொட்டாமல் செய்யும் தடையின் தன்மை, அருளால் எய்தும் பேரின்பத்தின் தன்மை, என்னும் ஐந்து பொருள்களை, நம்மாழ்வார் தம்முடைய திருவாய்மொழியின் ஆயிரம் பாடல்களால் விளக்கி அருள்கின்றார்.

''மிக்க இறைநிலையும், மெய்யாம்
உயிர்நிலையும்,
தக்க நெறியும், தடையாகித்-தொக்கியலும்
ஊழ்வினையும், வாழ்வினையும், ஓதும்
குருகையர்கோன்
யாழின்இசை வேதத் தியல்''

என்று, பட்டர் அருளிச் செய்த தனியன் என்னும் செய்யுளால், திருவாய்மொழி விளக்குகின்ற அர்த்தபஞ்சகம் என்னும் ஐம்பொருள்களையும், நாம் ஐயமறஉணரலாம். மணிவாசகரின் நூல்களிலும்கூட இறைவனின்நிலை - உயிரின்இயல்பு-தளையாகிய பாசங்களின் தன்மை-அருள்நலம்-பேரின்பம் என்னும் இந்த ஐந்துவகைப் பொருள்கள், ஆங்காங்கே அழகுற விளக்கப் பெற்றிருக்கக் காண்கின்றோம். இவ்வாறே மணிவாசகர் பாடல்களில் இறை உயிர் தளை (பதி பசு பாசம்) எனப்படும் மூன்று பொருள்களும், நம்மாழ்வாரின் பாடல்களில் சித்து அசித்து ஈசுவரன் என்று வழங்கப்பெறும்.

### (4) தத்துவக் கொள்கைகள்

நம்மாழ்வாரின் பாடல்களில் வைணவ சமயத்திற்குரிய தத்துவக் கொள்கைகள் பலவும் பெரிதும் நிறைந்திருக்கும். நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழி முதலிய திவ்வியப்பிரபந்தப்பாடல்களை, அடிப்படையாகக் கொண்டே, வைணவ சமய தத்துவக் கொள்கைகள் அனைத்தும், தொகுத்து வடித்துத் தரப் பெற்றுள்ளன. வேதாந்த தேசிகர் கூறுவது போல், தெளியாத மறைநிலங்கள் தெளிவதற்கு நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி முதலிய திவ்வியப்பிரபந்தப் பாடல்கள், பெரிதும் துணைபுரிகின்றன. எம்பெருமானார் என்னும் இராமாநுசர், வைணவ சமயத்திற்குரிய தத்துவக்கொள்கையினை, விசிஷ்டாத்துவைதம் என்னும் பெயரில் தொகுத்து விளக்கியருளினார். விசிஷ்டாத்துவைதம் என்னும் மிகப்பெரிய தத்துவ மாளிகைக்கு, அவர் அடிப்படையாக எடுத்து அமைத்துக் கொண்டது, நம்மாழ்வார் அருளிய,

''உடல்மிசை உயிர் எனக்
கரந்து எங்கும் பரந்துளன்''

என்னும், திருவாய்மொழிப் பாடலின் ஒரு வரியேயாகும். இந்த ஒரு வரியை அடிப்படையும் ஆதாரமுமாகக் கொண்டே, விசிஷ்டாத்துவைதம் என்னும் பெரு மாளிகை, இராமாநுசரால் எழுப்பப்பெற்றது எனின், நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியின் பெருமையை நாம் சிந்தித்து உணரலாம்.

இவ்வாறே, மணிவாசகர் அருளிய திருவாசகமும், சைவசித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கைகள் பலவற்றிற்கு அடிப்படையும் ஆதாரமுமாக அமைந்தது என்பது சிந்தித்து உணர்ந்து இன்புறுதற்குரியது. சிவஞானபோதம் என்னும் சைவசித்தாந்த சாத்திரத்தில்,

''ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்
தெனத்,
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த
விட்டு,
அந்நியம் இன்மையின் அரன்கழல் செலுமே!

எனவரும் எட்டாம் சூத்திரம், "இறைவனே குருவாக வருவான்; குருவும் இறைவனும் வேறல்லர்; இறைவனும் குருவும் ஒன்றே" என்று கூறுவதற்கு, மணிவாசகர் அருளிய திருவாசகப் பாடல்களே, சிறந்த அடிப்படையும் ஆதாரமும் ஆகும்! இவ்வாறு தத்தம் சமய தத்துவக் கொள்கைகளை விளக்கும் திறனிலும், நம்மாழ்வாரும் மாணிக்கவாசகரும் தம்முள் ஒப்புமைபெரிதும் உடையராகத் திகழ்கின்றனர்.

### (5) பக்தி, பிரபத்தி

நம்மாழ்வார் தம்முடைய பாடல்களிலும் நூல்களிலும், இருவகை நெறிகளை உலகுக்கு உணர்த்தியருளுகின்றார். அவையாவன: ஒன்று பக்தி; மற்றொன்று பிரபத்தி. இவற்றுள் பக்தியானது, இறைவனிடத்து உயிர்கள் செய்கின்ற அன்பின் மிகுதி. பிரபத்தியாவது, இறைவன்பால் சரணாகதி அல்லது அடைக்கலம் புகுதல். நம்மாழ்வாரின் பாடல்களில், இவ்விருவகை நெறிகளையும் பரக்கக் காணலாம். இவ்வாறே மணிவாசகப்பெருமானின் பாடல்களிலும் பக்திநெறி, பிரபத்திநெறி ஆகிய இரண்டும், ஆங்காங்கு வற்புறுத்தப் பெற்றிருக்கக் காண்கின்றோம்.

''மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து,
உன்விரையார் கழற்குஎன்
கைதான் தலைவைத்து, கண்ணீர்
ததும்பி, வெதும்பி, உள்ளம்

பொய்தான் தவிர்த்து, உன்னைப் போற்றி
சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன்; உடையாய்,
என்னைக் கண்டுகொள்ளே!''

எனவரும் திருவாசகப் பாடல் போல்வன, பத்திநெறியை உணர்த்துகின்றன.

''மாவடு வகிரன்ன கண்ணி பங்கா!
நின் மலரடிக்கே
கூவிடுவாய்; கும்பிக்கே இடுவாய்;
நின்குறிப்பு அறியேன்;
பாவிடை ஆடு குழல்போல், கரந்து
பரந்தது உள்ளம் ;
ஆகெடுவேன் உடையாய், அடியேன்
உன் அடைக்கலமே''

என்பன போன்றுவரும் அடைக்கலப்பத்துப் பாடல்கள் பலவும், நம்மாழ்வார் விளக்கும் பிரபத்தி நெறியை உணர்த்துவதாதல் காணலாம்.

## (6) குருட்டா மிலைத்தல்

நம்மாழ்வார், மாணிக்கவாசகர் என்னும் நம் இருபெரும் தமிழகச் சான்றோர்களின், உள்ளமும் உணர்வும், நோக்கமும் குறிக்கோளும், சொல்லும் பொருளும் ஆகியன எல்லாம், ஒன்றினொன்று முரணாமல், பெரிதும் ஒத்தியைந்து காணப்படுகின்றன. ''பெரிய உள்ளங்கள் ஒத்த நிலையிலேயே நினைக்கும்'' (Great minds think alike ) என்று அறிஞர்கள் கூறுவர். அறிவியல் அறிஞர்களின் கருத்துக்களும் கொள்கைகளும் கண்டுபிடிப்புக்களும், பெரும்பாலும் ஒன்றோடொன்று முரண்பட்டு நிற்கும். ஆனால் அருளாளர்களின் கருத்துக்களும் கொள்கைகளும், என்றும் எங்கும் மாறுபடுவதில்லை; அவைகள் எந்தநாட்டிலும் எந்தக் காலத்திலும் ஒரு தன்மையனவாகச் சிறிதும் முரண்படாமல் ஒன்றாகவே விளங்கும். இத்தகைய பற்பல ஒப்புமைகளை நம்மாழ்வார், மணிவாசகர் பாடல்களில் நாம் காண்கின்றோம்.

''கண் தெரியும் பிற பசுக்கள் எழுப்பும் குரல் ஒலியைக் கேட்டு, கண் தெரியாத ஒரு குருட்டுப் பசுவும்கூட, தனது குரல் ஒலியை எழுப்புவது போல, உன் அருள் பெற்ற அடியவர்கள் உன்னைப் பாடித் துதித்தலைப் பார்த்து, உன்அருள் பெறாத யானும் ஏதோ சில பாடல்களைப் பாடி, உன்னைத் துதிக்க முயல்கின்றேன்'' என்னும் கருத்து அமைய,

''எப்படி ஊர்ஆ மிலைக்கக்
குருட்டா மிலைக்கும் என்னும்
அப்படி யானும் சொன்னேன்,
அடியேன் மற்று யாது என்பனே''

என்று நம்மாழ்வார் பாடுகின்றார். அப்பாடலைப் போலவே,

''ஊர்ஆ மிலைக்கக் குருட்டா மிலைத்தாங்கு,
உன் தாளிணை அன்புக்கு
ஆராய், அடியேன் அயலே
மயல்கொண்டு அழுகேனே''

R. RAJU
Dy. Commissioner, H.R.&C.E. Administration

எனவரும் மாணிக்கவாசகர் பாடலும் அமைந்திருத்தல் ஒப்புநோக்கி உணரற்பாலது. இங்ஙனம் மேலும் பலப்பல ஒப்புமைச் சொற்கள், சொற்றொடர்களை இருவரின் பாடல்களிலும், நாம் மிகுதியாகக் காணலாம்.

## (7) நாயக நாயகி பாவம்

(தலைவன் தலைவி யுணர்வு)

நம்மாழ்வார்க்கும் மணிவாசகர்க்கும் இடையே காணப்படும் பலவகை ஒப்புமைத் தன்மைகளுள், மிகவும் தலையாயது -பெரிதும் சிறந்தது, இவ்விருவரும் இறைவனைத் தலைவனாகவும், தம்மைத் தலைவியாகவும் கருதி உணர்ந்து அனுபவித்து இன்புற்றிருத்தலேயாகும். ஞானத்திலும் பக்தியிலும் சிறந்த இவ்விரு பெருமக்களின் பாடல்களும், இறைவன்மாட்டு அடியவர்கள் கொள்ளும் மிக மேலாகியசிறந்த பேரன்பின் திறனை உணர்த்தும் ''நாயக நாயகி பாவம்'' (Bridal Myticism) கொண்டு விளங்குகின்றன. அறிவின் முதிர்ந்த நிலை ஞானமாகின்றது; அந்த ஞானத்தின் முதிர்ந்தநிலை. அன்பின் முதிர்ச்சி நிலையாகிய பிரேமம் ஆகின்றது. பிரேமம் என்னும் பேரன்புநிலை தலைப்படுங்கால், பக்தர்கள் பெண்மை நிலை அடைகின்றனர். இறைவனை நாயகனாகவும், தங்களை நாயகியாகவும், அவர்கள் கொள்ளுகின்றனர். ''இறைவனின் உறவில் உயிரானது எப்போதும் பெரும்பாலும் பெண்மைநிலை உடையதாகவும், செயலிழந்ததாகவுமே திகழ்கின்றது'' என்று 'நித்தியத் தத்துவம்' (Perennial Philosophy ) என்னும் நூலில், ஆல்டஸ் அக்சிலி (Aldous Huxley) என்னும் அறிவியற் பேராசிரியர் கூறுகின்றார்.

அதற்கு ஏற்ப, இறைவனின் உறவில் ஈடுபட்டுத் திளைக்கும் நம்மாழ்வாரும், மணிவாசகரும் பெண்மை நிலை அடைந்து, ஒரு தலைவியின் உள்ளமும் உணர்வும் எய்தி, இறைவனைத் தமது நாயகனாகவும், ஆருயிர்த் தலைவனாகவும் கொண்டு, அவன்பால் கொள்ளும் காதல் உணர்வில் தம்மை மறந்து, தம்மை இழந்து, பரவசமுற்று இன்பத்தில் ஆழ்ந்து திளைக்கின்றனர். ஞானநிலையில் பாடும் பாடல்களைத் தம் பேச்சாகவும், பிரேமம் என்னும் பேரன்பு முதிர்ந்தநிலையில் பாடும் பாடல்களைப் பெண்பேச்சாகவும், இருவரும் பாடுகின்றனர்.

திருவாய்மொழியில் வரும் நம்மாழ்வாரின் பாடல்கள் தாய்கூற்று, தோழி கூற்று, தலைவிகூற்று என்று மூவகைப்படும்பெண்

பேச்சாக அமைந்துள்ளன. அதனாலேயே ''ஆசாரிய இருதயம்'' என்னும் அரும் பெரும் திறனாய்வு நூல்,

''ஞானத்தில் தம்பேச்சு
பிரேமத்தில் பெண்பேச்சு''

என்று அழகுற ஆராய்ந்து அறுதியிட்டு உரைக்கின்றது.

## (8) பெண்பேச்சு

இவ்வுண்மையை வலியுறுத்தும் வகையில் திருவாசகத்தில் முதல் நான்கு அகவல்கள், மற்றும் திருச்சதகம் நீத்தல்விண்ணப்பம் என்பன, மணிவாசகரின் ஞான நிலையில் தன்பேச்சாக அமைந்துள்ளன. ஆனால், அவற்றை அடுத்துவரும் திருவெம்பாவை திருவம்மானை திருப்பொற்சுண்ணம் திருக்கோத்தும்பி திருத்தெள்ளேணம் திருச்சாழல் திருப்பூவல்லி திருவுந்தியார் திருத்தோள்நோக்கம் திருப்பொன்னூசல் அன்னைப்பத்து குயிற்பத்து என்பன, பிரேமம் முதிர்ந்த பெண்மைநிலைப் பேச்சாக அமைந்திருக்கக் காண்கின்றோம். நம்மாழ்வார்க்கும் மணிவாசகர்க்கும் இடையே எத்தகைய ஒப்புமைத் தன்மைகள் காணப்படுகின்றன என்பதற்கு, இப்பாடல்கள் சான்று பகரும்.

## (9) காதலின் எழுவகை நிலைகள்

ஒரு பெண்ணின் உடல் வளர்ச்சி, உள வளர்ச்சிகளைக் கருதி, அவளுக்குப் பேதை பெதும்பை மங்கை மடந்தை அரிவை தெரிவை பேரிளம்பெண் என்று ஏழுவகையான பருவங்கள், தமிழ் இலக்கியங்களில் கூறப்பெறும். அதுபோல, இறைவன்பாற் கொள்ளும் காதலன்பின் மிகுதியால் பக்தர்கள் எய்தும் பெண்மை நிலையும் ஏழு வகையாகக் கூறப்பெறும். அவைகளாவன:

1. அபிலாஷை
2. சிந்தனை
3. அனுஸ்மிருதி
4. இச்சை
5. ருசி
6. பரபக்தி
7. பரமபக்தி

பெண்மையானது பேதை பெதும்பை மங்கை மடந்தை அரிவை தெரிவை பேரிளம்பெண் என்னும் எழுவகைப் பருவங்களை உடையதாதல் போல், இறைவன்பால் அடியவர்கள் கொள்ளும் அன்பின் பெருக்கமாகிய பக்தியும், மேற்குறித்த ஏழுவகையான படிநிலைகளை உடையதாகும் என்று, ஆசாரிய இருதயம் என்னும் வைணவப்பெருநூல் குறிப்பிடுகின்றது. முதன்முதலில் கண்ட அளவிலேயே உண்டாகும் இயற்கையான அன்பு, **அபிலாஷை**. அங்ஙனம் கண்ட ஒருவரை மீண்டும் நினைவுகூர்தல் **சிந்தனை**. அந்நினைவு இடையறாது தொடர்ந்து மேலும் மேலும் பெருகி வளர்ந்து, அவரை மீண்டும் மீண்டும் நினைவுகூரப்பெறுதல் **அனுஸ்மிருதி**. அந்நினைவின் மிகுதியால் அவரை எங்ஙன மேனும் கூடிக்கலந்து மகிழ்ந்து இன்புறுதல் வேண்டும் என்று பெருகிஎழும் விருப்பம் **இச்சை**. அவ்விருப்பம் வேறு எதனாலும் மாற்றி நீக்க இயலாதபடி மேன்மேல் பெருகி முதிர்ந்து நிற்கும் தன்மை **ருசி**. அத்தகையவர் ஒருவரைக்கூடுதலே இன்பமாகவும், பிரிதலே துன்பமாகவும் நிகழும் உணர்வு **பரபக்தி**. அன்பிற்குரியவரைப் பிரிந்த அளவில், அல்லது பிரிய நேருமோ என்னும் உணர்வு நிகழ்ந்த அளவிலேயே, மூர்ச்சையுற்று மயங்கி உயிர் துறக்கும் பேரன்புநிலை **பரமபக்தி**.

## (10) பரமபக்தி

இப் பரமபக்தியே, அன்பு அல்லது பக்தியின் முடிவான பெருநிலை எனப் போற்றப்படும். பரமபக்தி என்னும் சிறந்த இந்நிலையை விளக்குவதற்கு நீரினை விட்டுச் சிறிது பிரிய நேர்ந்தாலும், துடிதுடித்து வருந்தி உயிர்துறக்கும் மீன், உவமையாக எடுத்துக் காட்டப்பெறும். நீரிற் பிரிந்ததும் துடிதுடித்து உயிர்துறக்கும் மீனின் நிலை, பிரேமம் என்னும் பேரன்பின் முதிர்ச்சி நிலைக்கு, உவமையாக எடுத்துக் காட்டப்பெறுதல், மிகவும் பொருத்தம் வாய்ந்த தொன்றாகும். நம்மாழ்வார்க்கு வாய்த்திருந்த இப் பரமபக்தி நிலை, மணிவாசகப் பெருமானுக்கும் வாய்த்திருந்தமை,

''பெருநீர் அறச்சிறு மீன்துவண்
டாங்கு, நினைப்பிரிந்த
வெருநீர்மையேனை விடுதிகண்டாய்;
வியன் கங்கைபொங்கி
வருநீர் மடுவுள் மலைச்சிறு தோணி
வடிவின், வெள்ளைக்
குருநீர் மதிபொதியும் சடை
வானக் கொழுமணியே''

என்று திருவாசகம் நீத்தல் விண்ணப்பத்தில் வரும் செய்யுளால் செவ்விதிற் புலனாகும்.

## (11) நம்மாழ்வாரின் திருவிருத்தமும், மணிவாசகரின் திருக்கோவையாரும்

நம்மாழ்வாரும் மணிவாசகரும், நம் தமிழகத்தில் தோன்றி வாழ்ந்த தலைசிறந்த ஞானப்பெருஞ் செல்வர்களாவர். இன்று தோன்றி நாளை மறைந்தொழியும் நம்மைப் போன்றில்லாமல், எத்துணையோ பல நூற்றாண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய அவர்கள், இன்றளவும் மக்களிடையில் அளவில்லாத அழியாத செல்வாக்குப் பெற்று விளங்குகின்றனர். இனியும் நம் தமிழ் உள்ளளவும், என்றென்றும்,

அவர்களின் செல்வாக்கும், சிறந்த புகழும் நின்று நிலைபெற்றிருக்கும். இத்தகைய இவர்கள் இருவரும் முறையே அருளிச் செய்துள்ள திருவிருத்தம், திருக்கோவை யார் என்பன,

''ஐந்திணை உறுப்பின் நாற்பொருள் பயக்கும்
காமம் சான்ற ஞானப் பனுவல்கள்''

ஆகும். இவ்விரு பெரும் சிறந்த நூல் களிலும், அகப்பொருள்துறை அமைந்த பல பாடல்களில், ஒத்த கருத்துக்கள் பல காணப்படுகின்றன.

வண்டுகளோ! வம்மின்! நீர்ப்பூ
நிலப்பூ மரத்திலொண்பூ
உண்டு களித்துழல் வீர்க்கொன்
றுரைக்கியம்; ஏனமொன்றாய்
மண்துக ளாடி வைகுந்தம் அன்
னாள்குழல் வாய்விரைபோல்,
விண்டு,கள் வாரும், மலருள
வோநும் வியலிடத்தே?

என்று, நம்மாழ்வார் அருளிய திருவிருத் தம் என்னும் நூலில் வரும் செய்யுளும்;

கூம்பலங் கைத்தலத் தன்பரென்
பூடுரு கக்குனிக்கும்
பாம்பலங் காரப் பரன்,தில்லை
யம்பலம் பாடலரின்
தேம்பலஞ் சிற்றிடை யீங்கிவள்
தீங்கனி வாய்கமழும்
ஆம்பலம் போதுள வோ?அளி
காள்நும் அகன்பணையே!

என்று மணிவாசகப்பெருமான் அருளிய திருக்கோவையாரில் வரும் செய்யுளும், ''நலம்புனைந்து உரைத்தல்'' என்னும் அகப்பொருள்துறை அமைந்து, பெரிதும் ஒப்புமை உடையதாகத் திகழ்தல் காண லாம். ''வண்டுகளே! இப்பெண்ணின் கூந் தலில் உள்ள வாசனையைப்போல், வாசனை வீசுகின்ற மலரை நீங்கள் எங் கேனும் கண்டதுண்டோ? ''என்று தலை வியைத் தலைவன்புகழ்தல், இவற்றின் கருத்தாகும்!

முடிவுரை

நம்மாழ்வார்க்கும் மணிவாசகர்க்கும் இடையே உள்ள,இத்தகைய எத்தனையோ பல ஒப்புமைத் தன்மைகளை ஆராய்ந் துணர்ந்து பயன்பெறுவதே, இக்கருத் தரங்கின் நோக்கம் என்று எண்ணுகின் றேன். இங்ஙனம் ஒப்புநோக்காய்வு (Comparative Study) செய்வதனால் அறிவு வளரும்; அன்பு பெருகும்; சமய சமரச, சமாதான உணர்வுகள் தழைக்கும்; மக்கள் ஒற்றுமைப் பட்டு மகிழ்வர்; சம யங்களின் பூசலும் பிணக்கும் நீங்கும். யாவரும் அன்பினால் ஒன்றி இன்புற்று வாழ்வர். ஆதலின் ''நம்மாழ்வாரும் மணி வாசகரும்'' என்னும் பொருள் பற்றிய, இந்தச் சிறந்த ஆராய்ச்சிக் கருத்தரங் கினை, நான் மகிழ்ச்சியுடன் தொடங்கி வைக்கிறேன்!

நன்றி, வணக்கம்!

---

## திருவிருத்தம்

சிதைக்கின்றது ஆழி என்று, ஆழியைச்
தீறித், தன் சீறடியால்
உதைக்கின்ற நாயகம் தன்னொடு,
மாலே! உனது தண்தார்
ததைக்கின்ற தண்ணந் துழாய் அணிவான்,
அதுவே மனமாய்ப்
பதைக்கின்ற மாதின் திறத்து;
அறியேன் செயற்பற்பாலதுவே! (1)

புலக் குண்டலப் புண்டரீகத்த போர்க்
கெண்டை வல்லி ஒன்றால்,
விலக்குண் டுலாகின்று; வேல்விழிக்
கின்றன; கண்ணன்கையால்
மலக்குண் டமுதம் சுரந்த
மறிபடல் போன்று, அவற்றால்
கலக்குண்ட நான்று கண்டார், எம்மை
யாரும் கழறலரே! (2)

—நம்மாழ்வார்

## திருக்கோவையார்

ஆழி திருத்தும் புலியூர் உடையான்
அருளின் அளித்து,
ஆழி திருத்தும் மணற்குன்றின் நீத்து
அகன்றூர் வருகென்று,
ஆழி திருத்திச், சுழிக்கணக்கு ஓதி
நையாமல், ஐய!
வாழி! திருத்தித் தரக்கிற்றியோ?
உள்ளம் வள்ளலையே! (1)

சேணிற் பொலிசெம்பொன் மாளிகைத்
தில்லைச் சிற்றம்பலத்து
மாணிக்கக் கூத்தன் வடவான்
கயிலை, மயிலை, மன்னும்
பூணிற் பொலி கொங்கை ஆவியை,
ஓவியப் பொற்கொழுந்தைக்
காணிற் கழறலை; கண்டிலை
மென்தோட் கரும்பினையே! (2)

—மாணிக்கவாசகர்

# கம்பர் கவியமுதம்

"அருள்மொழியரசு"
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

கவிச்சக்கரவர்த்தி கம்பநாடர் தமிழிலே செய்த இராமாயணம், பெரிய அமுதக் கருவூலமாகத் திகழ்கிறது. அதில் ஒரு பாடலை மட்டும் இங்கு நினைவு கூர்வோம்.

கார்காலம் போனவுடன் வருகிறேன் என்று சென்ற சுக்கிரீவன், வந்தானில்லை. இருசியமூகப் பருவதத்தில் தங்கியிருந்த இராமர் தம் தம்பியை நோக்கி, ''தம்பி! சுக்கிரீவன் சொன்ன சொல்லை நிறைவேற்றத் தயங்குகிறான் போலும். அவன் மனதை அறிந்து வா!'' என்று, கட்டளையிடுகிறார். அங்கே ஒரு பாடல்:—

''நஞ்சமன் னவரை நலிந்தா லது
வஞ்ச மன்று மனுவழக் காதலால்
அஞ்சிலம் பதில் ஒன்றறி யாதவன்
நெஞ்சில் நின்று நிலாவ நிறுத்துவாய்''
—கம்பர்.

பாடலின் முதல் அடிக்கு இரண்டு பொருள்கள்:- நஞ்சம் அன்னவரை-விஷம் போன்ற கொடியவர்களை நாம் கொன்றால், அது குற்றமன்று; அரச கர்மமே யாகும். பயிரைக் கெடுக்கிற புல்லைப் பறித்து எறிய வேண்டும். களையெடுக்கா தொழியின் பயிர் அழியும்.

மற்றொரு பொருள் வருமாறு:-நைஞ்ச மன்னவரை-தருமத்தை விட்டு நலிந்த சிற்றரசரை அடக்குவது பேரரசருக்கு உரிய கடமைதான்; அது மனு வழக்கு.

மூன்றாவது அடிக்குப் பொருள்: 1. அஞ்சிலம் பதில் ஒன்று அறியாதவன்-அஞ்சில் அம் பதில் ஒன்று அறியாதவன். அஞ்சிலும் அறியான், ஐம்பதிலும் அறியாதவன்.

2. அஞ்-சிலம்பு-அதில் ஒன்று-அழகிய மலையில் வாழும் விலங்குகளில் ஒன்று தானே குரங்கு என்று பொருள். (சிலம்பு-மலை.)

3. அஞ்சு-இல்-அம்பு-அதில்-ஒன்று-அறியாதவன்:- அஞ்சுதல் இல்லாத பல அம்புகள் உண்டு. வாலியைக் கொன்ற அம்பு போல் பல உள்ளன. அவற்றில் ஒன்றையும் அறிந்தானில்லை.

4. அஞ்சு-இல்-அம்பு அதில் -ஒன்று-அறியாதவன்: இல்-மனைவி, அம்பு-கண்ணீர். அஞ்சுகின்ற இல்லாளாகிய சீதைவடித்த கண்ணீர்த் துளிகளில் ஒன்றையேனும் அவன் அறிந்தானில்லை. 'விழியம்பு ஒழுக மெத்திய மாதரும் வீதிமட்டே' என்ற பட்டினத்தார் பாடலும் அறிக.

5. அஞ்சிலம்-பதில்-ஒன்று அறியாதவன்: வாலிக்கு நம்மைத் துணை பற்றியது போல், நம்மை வெல்ல ஒருவனைத் துணை பிடித்தாலும் பிடிப்பான். ஆகவே அதற்கு நாம் அஞ்சிலம்-அஞ்சமாட்டோம். பதில் ஒன்று அறியாதவன் -செய்த உபகாரத்திற்குப் பதில் நன்றி செலுத்தத் தெரியாதவன்.

6. அஞ்சு-இல்-அம்பது-அதில் ஒன்று அறியாதவன்: தமிழ்க் கணக்கில் ஐம்பது'ருய'. அஞ்சு-'ரு'. இது இல்லையானால்.'ய' இது பத்து. அஞ்சில்லாதது, பத்து. பத்தில் ஒன்று-தசாவதாரத்தில் ஒன்று என்பதை அறியவில்லை. வெறும் மனிதனாக என்னை அவன் நினைக்கில், யான் தசாவதாரத்தில் ஒன்று என்பதை உணர்த்துவாய்.

7. அஞ்சு-இல்-அம்பது; அஞ்சு இல்லாத அம்பு-(45) நாற்பத்தைஞ்சு. அது ஒரு மண்டலம். இந்த மண்டலத்தில் ஒன்றும் அறியாதவன். அறியாதவனுக்கு அறிவிப்பது நமது கடமை.

8. அஞ்சு-இல்-அம்பது: அஞ்சு'ரு' இல்லையானால். 'ய' என்பது ஆக்ஞா ஸ்தானம். மூலாதாரத்தில்-ஓம். சுவாதிட்டானத்தில் -ந. மணிபூரகத்தில்-ம. அநாகதத்தில்-சி. விசுத்தியில்-வ. ஆக்ஞையில்-ய.

எனவே 'ய' என்ற எழுத்துள்ள ஆக்ஞை புருவநடு; அறிவு உள்ள இடம். அந்த இடம் பழுதுபடுமானால், உணர்த்துதல் வேண்டும். ஆகவே அவனுக்கு நீ சென்று உணர்த்து.

9. அஞ்சு இல்-அம்பது-அஞ்சு'ரு'. அது இல்லையானால், ய. ந-ஆணவ மலம். ம-திரோத மலம். சி-சிவம். வ-அருள். ய-ஆன்மா. ஆன்ம வர்க்கத்துடன் ஒருவனாகிய அவனுக்குச் சென்று அறிவுறுத்து.

10. அஞ்சில்-அம்பதில்-ஒன்று-அஞ்சும் அம்பதும் ஒன்றும் சேர்ந்தால் 56; பிரபவ முதல் ஆண்டுகளை எண்ணினால் 56-வது ஆண்டு துந்துபி. துந்துபி என்ற எலும்பை லட்சுமணர், காலால் எற்றி விண்ணளவு அகற்றியதையும், அவன் அறிந்தானில்லை. அதனை அவனுக்கு நினைவு செய்.

***

# இராமகிருஷ்ணரும், விவேகானந்தரும்

R. RAJU, Dy Commissioner H.Qrs. (Retired) HR&CE Administration Dept

'சிலம்புச் செல்வர்'
டாக்டர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள், M.L.C.,
மேலவைத் தலைவர்

பகவான் இராமகிருஷ்ணர், ஆன்மிகம் என்ற மிகப்பெரிய உண்மைக்கு விளக்கமாக அவதரித்தார். தெய்வம் மனிதனாக அவதரிக்கிறது என்று சாத்திரங்களில் சொல்லப்பட்டிருக்கும் கருத்து, நவீன காலத்தில் இராமகிருஷ்ணதேவரின் வருகையால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அவ்விதம் அவர் அவதார புருஷர்தாம் என்பதனை அவருக்கு வாய்த்த தர்மபத்தினியான சாரதாதேவியின் வரலாறும், பெறற்கரிய சீடர் விவேகானந்தரின் வரலாறும் உறுதிப்படுத்துகின்றன.

அன்னை சாரதா தேவியாரைப் பற்றியும், சுவாமி விவேகானந்தரைப் பற்றியும் நினைக்கும்போது, அவர்கள் இருவரும் இராமகிருஷ்ண பரமஹம்சரின் கூறுகளாக அவதரித்தவர்கள் என்றே சொல்லத் தோன்றுகிறது.

இதிகாச காலத்தில் இராமபிரானுக்கு ஒரு சீதாபிராட்டி அமைந்ததைப்போல, நாம் அறிந்தவரை வரலாற்று ரீதியில் இராமகிருஷ்ணருக்குத்தான் ஒரு சாராதா பிராட்டி அமைந்திருக்கிறார். இராமகிருஷ்ணருக்கு வாய்த்த மனைவியைப் போல, வேறு எந்த ஞானிக்குமே மனைவி வாய்த்ததாகத் தெரியவில்லை. ஞானிகளுக்கே அத்தகைய மனைவி அமையாதபோது, அஞ்ஞானிகளுக்கு அப்படி மனைவியர் அமைவர் என்று எப்படி எதிர் பார்க்க முடியும்?

நரேந்திரர் இராமகிருஷ்ணரை அடைந்தார். நரேந்திரரை அதட்டி உருட்டியோ, கவர்ச்சி முதலியவற்றைக் காட்டியோ, குருதேவர் தமது சீடராக ஆக்கிக்கொள்ளவில்லை. அத்தகைய வித்தைகள் செல்லுபடி ஆகக்கூடியவராகவும் நரேந்திரர் இல்லை. நரேந்திரர்தாம் தமது ஐயம் அகற்றிய ஐயனைத் தாமே தமது குருநாதராக ஏற்றுக் கொண்டார்.

இராமகிருஷ்ணர் புத்தகப்படிப்புப் பெற்றதில்லை. கலாசாலை சென்று கற்றதில்லை. பொதுவாக, நாம் நினைப்பது போன்று ஆசானிடம் கல்வி கற்கவில்லை. இதை முன்னிட்டு அவரைச் சரியாகப் புரிந்துகொள்ளாத சிலர் எழுத்தறிவற்றவர் என்று அவ்வப்போது குறிப்பிடுகிறார்கள். கல்வி என்பது பள்ளிக்கூடப் பாடத் திட்டத்தில் அமைந்த பாடங்களில்தான் இருக்கிறதா? அதிலேயே எல்லாம் முடிந்துவிடுகிறதா? சொல்லப்போனால், தற்காலப் பள்ளிக்கூடப் பாடத்திட்டத்தில்தான், கல்வி என்பதற்கு உரிய அர்த்தத்தையே காணோம் என்று விஷயம் அறிந்த சான்றோர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இராமகிருஷ்ணர் பள்ளியில்பெறும் கல்வியைப் பெறவில்லைதான். அவரதுபள்ளியறிவு, ஏதோ ஒருவிதமாக எழுதப்படிக்கத் தெரியும் என்று சொல்லக்கூடிய வகையில் தான் அமைந்தது. வங்காளி இராமாயணத்தை அவர் பார்த்து எழுதியதுண்டு. அவற்றுள் சில பகுதிகளைப் பேலூரிலுள்ள இராமகிருஷ்ண மடத்தில் இப்போதும் பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள்.

இராமகிருஷ்ணரின் பள்ளியறிவு, பெயரளவில் இருந்தது என்பதைக்கூடச் சிறிது தயக்கத்தோடுதான் சொல்லவேண்டியிருக்கிறது. ஆனால் கேள்விஞானமும், ஆன்மிக அனுபவஞானமும், எல்லையற்றுக் கடல் போன்று அவருக்கு இருந்தன.

நூலளவில் சாத்திரங்களைக் கற்ற பெரும் மேதைகள், சாத்திரங்கள் குறிப்பிடும் உண்மைகளை அனுபவத்தில் கண்ட மகான்கள், ஆகியோரிடமிருந்து நேரிடையாக இராமகிருஷ்ணர் பல விஷயங்களைக் கேட்டிருக்கிறார். அந்த வகையில் அவருக்கு இருந்த கேள்விஞானம் மிகமிக அபாரமானது. தாம் கேள்வி ஞானமாகத் தெரிந்து கொண்டதோடு நில்லாமல் அவற்றைப் பழுத்த சுய அனுபவஞானமாகவும் அவர் பெற்றார். அதுதான் அவரைப் பிறரிடமிருந்து பிரித்து 'ஞானிக்கும் இவர் ஞானி' என்று காட்டுகிறது.

இராமகிருஷ்ணரின் அருள்வாக்குகளைப் படித்தவர்கள் 'இந்தியாவில் தோன்றிய அத்தனை ஆன்மிகக் கருத்துக்களும் இராம கிருஷ்ணருக்கு அத்துபடியாக இருந்திருக் கின்றன' என்பதைப் புரிந்து கொள்வார் கள். இந்தியாவில் மகிமை பொருந்திய தத்துவ தரிசனங்களும், துவைதம், விசிஷ் டாத்துவைதம், அத்வைதம் போன்றகருத் துக்களும், பரிபாஷை, குழூஉக்குறிபோன்ற சொற்கள் இன்றி மிகவும் எளிய முறையில் அவர் விளக்கியதனாலோ என்னவோ, மக்கள் அவர் சொன்ன கருத்துக்களின் ஆழத்தை உள்ளபடியே புரிந்துகொள் ளவோ பாராட்டவோ இயலாதவர்களாக இருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண் டும். இராமகிருஷ்ணரின் அருள்வாக்கில் இந்தியாவில் தோன்றிய அத்தனை ஆன் மிகச் சிந்தனைகளும் நேரிடையாகவோ மறைமுகமாகவோ ஏதாவது ஓர் இடத்தில் இடம்பெற்றுள்ளன. அவற்றைப் படிக்கும் போது, அவரது கேள்விஞானம் எவ்வ ளவு பரந்து இருந்திருக்கிறது என்பதை நாம் ஊகிக்க முடிகிறது.

இராமகிருஷ்ணரின் உபதேசங்கள் எளி மையானவை. ஆனால், அதே சமயத்தில் அவை ஆழமானவை. மேலோட்டமாக எளிய உதாரணம் மட்டும் காண்பவர்கள் அதன் ஆழமான கருத்தை உணரத் தவறி விடுகின்றனர். எனவே ஒரு விதத்தில் இராமகிருஷ்ணரின் கருத்துக்கள் சுலப மானவை என்று சொன்னாலும், அப்படி சொல்வதில் உண்மை இருக்கிறது என்பது உண்மையானாலும், அவரது உபதேசங் கள் எவ்வளவு எளிமையோ அவ்வளவு கடினமானவை என்று எனக்குச் சொல்லத் தோன்றுகிறது.

ஓர் அவதார புருஷர் தோன்றுவதற்கு முற்றிலும் அவசியமாக இருந்த 19ஆம் நூற்றாண்டில் இராமகிருஷ்ணர் அவதரித் தார். ஆங்கிலமோகம் காரணமாக நமது நாட்டு மக்களின் தலைசுழன்று நிலைதடு மாறிக் கொண்டிருந்த காலத்தில் அவ ரது அவதாரம் நிகழ்ந்தது. எந்த ஆங்கிலத் திற்கு மக்கள் அடிமைப் பட்டிருந்தார் களோ, அந்த ஆங்கில மோகத்திற்கு விவே கானந்தர் தாம் அடிமையாகாமல், ஆங் கில மொழியைக் கொண்டே அவர் ஆன் மிகத்தை விளக்கி உலகை வென்றார்.

இராமகிருஷ்ணர்தாம் கர்த்தா. அவரது ஒப்பற்ற கல்வி, சுவாமி விவேகானந்தர் பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், வள்ள லார் கண்ட சுத்த சன்மார்க்க சங்கம், மற் றும் 19, 20ஆம் நூற்றாண்டுகளில் தோன் றிய எந்த ஆன்மிக இயக்கமும் பெறாத மகத்தான வெற்றியை, இராமகிருஷ்ண ரைப் பின்பற்றிய இயக்கத்தினர்தாம்பெற் றார்கள் என்பதனை எவரும் மறுத்தல், மறுத்தல் இயலாது. ஆயிரம், எண்ணூறு, எழுநூறு, ஐந்நூறு, நானூறு, இருநூறு ஆண்டுகளாக இருக்கிறோம் என்று சொல் லிக் கொள்ளக்கூடிய மடங்கள் இந்தியா முழுவதிலுமே இருக்கத்தான் செய்கின்றன. அத்தனை ஆண்டுகள் இருந்தும் அந்த மடங்கள் செய்யாத தொண்டைச் சுமார் 75 ஆண்டு காலத்திற்குள், இராமகிருஷ்ண மடத்தினர்தாம் செய்திருக்கிறார்கள்.

இலட்சக்கணக்கில் பணம் குவிந்திருக் கும் மடங்கள் இருக்கின்றன. அவற்றைக் கொண்டு, இராமகிருஷ்ண மடங்களைப் போன்று பொதுப்பணிகளில் அந்த மடங் கள் ஈடுபடுமானால், நம் நாட்டிற்கு எவ் வளவோ நன்மை ஏற்படக்கூடும். ஆனால் அவர்கள் பணியோ 'காலையில் அரைமணி நேரம் பூசை. பகலில் ஐந்து பிராம்மணர் களுக்குப் போசனம் செய்துவைப்பது' என்ற அளவில்தான், வருந்தத்தக்க வகை யில் இருந்து கொண்டிருக்கிறது. மாத வருமானமே மூன்று லட்சம், மூன்றரை இலட்சம் ரூபாய் வருமானம் இருக்கும். பிராம்மணரல்லாத மடங்களின் நிலைமை இதுவென்றால், பிராம்மண மடங்களின் நிலைமையோ இன்னும் மோசம்; அவர் கள் பிராம்மணரல்லாதார் ஐந்துபேர் களுக்குப் போசனம் செய்விக்கும் பணியை யாவது செய்கிறார்களா என்றால், அதை யும் அவர்கள் செய்வதில்லை.

சாதி வெறி பிடித்த ஒரு கூட்டத்தின் கூடாரமாகத்தான்அவைகள்இருக்கின்றன. இத்தகைய மடங்களின் மீது மக்களுக்கு எப்படிப் பக்தி வரமுடியும்! இவற்றை யெல்லாம் பார்க்கும்போது ஆன்மிகத்தில் உண்மையான ஈடுபாடு கொண்டிருக்கும் நவீன கால மக்கள் ''ஒன்று பழமையில் ஊறிய இந்த மடங்கள் இராமகிருஷ்ண மடங்களைப் போன்று இயங்கவேண்டும்; அல்லது இலட்சக்கணக்கான ரூபாய் சொத் துக்களை வைத்துக்கொண்டு ஐந்து பிராம் மணர்களுக்குப் போசனம் செய்விக்கும் பணி ஒன்றையே செய்துவரும் இந்தமடங் களின் சொத்துக்களை அரசாங்கம் எடுத் துக்கொண்டு தேசிய மயமாக்கவேண்டும்'' என்று சிந்திக்கிறார்கள்.

சுயநலமியான தனியொரு மனிதன் 'மற்றவர்கள் எப்படிப் போனாலும் பரவா யில்லை; நான் வாழ்ந்தால் போதும்' என்ற எண்ணத்தில் சொத்து சேர்க்கிறான். பொதுத்தொண்டு செய்யாமல் சொத்து சேர்ப்பது மட்டும்தான் மடங்களின் லட் சியமானால், சுயநலமியான அந்த மனித னுக்கும் மடங்களுக்கும்தான் என்ன வேறு பாடு இருக்கிறது?

இப்படி நான் சொல்வதனால், மடங் களிடம் எனக்கு ஏதோ தீராப்பகை இருப் பதாக நீங்கள் நினைத்துவிடக் கூடாது. உலக மக்கள் நன்றாக இருக்க வேண்டு மானால், நமது நாட்டு மக்கள் நன்றாக இருக்கவேண்டுமானால், நமது மதம் நன் றாக இருக்கவேண்டும். நமது மதம் நன் றாக இருக்கவேண்டுமானால், நமது மடங்

கள் நன்றாக இருக்கவேண்டும். எனவே பெரிய மரத்திற்கு வேர் ஆதாரமாக இருப்பதைப்போன்று, சமுதாயத்தில் தோன்றும் எல்லா நன்மைகளுக்கும் மதம்தான் ஆதாரமாக இருக்கவேண்டும் என்ற விவேகானந்தரின் கருத்தைக் கொண்டவன் நான். அந்தக் காரணத்தினால் நமது மடங்களின் தொண்டு சிறந்தோங்க வேண்டும் என்று உள்ளூர நான் ஏங்குபவனாக இருக்கிற காரணத்தினால், இவ்விதம் கூறுகிறேன். மற்றபடி தனிப்பட்ட முறையில் இராமகிருஷ்ண மடத்தினிடம் எனக்கு ஈடுபாடு இருப்பது உண்மையானாலும், மற்ற மடத்தினரிடம் எனக்கு வெறுப்பு இல்லை என்பது நூற்றுக்கு நூறு உண்மையாகும்.

கிறித்தவ மதத்தினர் பல நிறுவனங்களின் மூலம் பல்வேறு பணிகளை ஆற்றி வருகிறார்கள். அவர்களுக்கிடையில் பூசல்களும் பிணக்குகளும் இல்லாமல் இருக்கின்றனவா என்றால், அவர்களிடம்தான் அவை நம்மிடம் இருப்பதைவிடப் பல நூறு மடங்கு அதிக அளவில் மலிந்து கிடக்கின்றன. ஆனால் அவர்கள் அவற்றைப்பற்றி வெளிப்படையாகப் பேசுவதும் இல்லை; வெளியே தெரியவிடுவதும் இல்லை. கிறித்தவ மதத்தினரைப் போல, நம் பிரச்னைகளை நமக்குள் நாமே பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டுமே தவிர, அவற்றைப் பெரிதுபடுத்திப் பேசிக் கொண்டிருப்பது கூடாது. நான் மேலே குறிப்பிட்ட பண்டைய மடங்களின் சிற்சில குறைபாடுகள் காரணமாக, அவற்றை நாம் தாழ்த்திப் பேசுவதும், மதிக்காமற் போவதும் இருக்கக்கூடாது. ஏனென்றால் மடங்களுக்கு மரியாதை காட்டுவது நமது தாய்நாட்டிற்கும் ஆண்டவனுக்கும் மரியாதை காட்டுவதே யாகும். மடத்திற்கு மரியாதை காட்டுவது-நம்மைப் படைத்த, நம்மை வாழ்விக்கிற, நாம் சென்று நிரந்தரமாக அடங்க இருக்கிற ஆண்டவனுக்குக் காட்டும் மரியாதையேதான் என்பதை, இதயத்தில் நாம் நன்றாகப் பதியவைத்துக் கொள்ளவேண்டும்.

மேலும் மற்றொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்; சிற்சில குறைபாடுகள் இருப்பதாக நாம் கருதுகிற மடங்களில் ஒரு காலத்தில் வழிபாட்டுக்கு உரிய மகான்கள் இருந்திருக்கிறார்கள்; எதிர்காலத்தில் அத்தகைய ஞானிகள் அங்கு இருப்பதற்கு உரிய வாய்ப்பும் இருக்கிறது. எனவே இடைப்பட்ட தற்சமயத்தில் சிலர் பொருத்தமாக அமையவில்லை என்பதனால் மடங்களையே புறக்கணிப்பது, தலையில் உட்கார்ந்த ஈயை விரட்ட ஆளையே அடித்துக் கொன்றதைப்போல ஆகிவிடும். அத்தகைய தவற்றுக்கு நாம் ஒருபோதும் இடம் கொடுத்துவிடக்கூடாது.

இராமகிருஷ்ணரை அனுபூதிமான்களுக்குள்ளும் அனுபூதிமான் என்று சொல்வது முற்றிலும் பொருந்தும். காரணம், அவர் சர்வசமய சமரசத்தை அனுபூதியில் பெற்றிருந்தார்; அதே அனுபூதி நிலையிலிருந்து சமய சமரசத்தைப் போதித்தும் இருக்கிறார்.

தாம் எப்படி உலகில் ஆன்மிகத் தொண்டு புரிய வேண்டும், தமக்குப் பின் வரும் தமது பரம்பரையினர் எத்தகைய வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பவற்றுக்கு உரிய ஆதேசத்தை விவேகானந்தர், பரமஹம்சரிடமிருந்தே பெற்றார்.

இராமகிருஷ்ணரையும் விவேகானந்தரையும் முறையே மூலவர் உற்சவர் என்றாலும் சரி; காகிதத்தின் இரு வேறு பக்கங்கள் என்றாலும் சரி; இரு உடல்களில் வாழ்ந்த ஒரு தத்துவம், இருவருக்கு இடையில் வேறுபாடில்லை என்றாலும் சரி; வரலாற்று ரீதியில் பார்க்கும் நமக்கு ஒருவரால் ஒருவர் பெருமை பெற்றார்கள் என்பது புலப்படுகிறது. விவேகானந்தரை உலகிற்குத் தமது நன்கொடையாக வழங்கியதனால் இராமகிருஷ்ணர் பெருமை பெற்றார்; இராமகிருஷ்ணரைக் குன்றின்மேல் இட்ட விளக்காக உலக அரங்கில் ஏற்றி வைத்ததனால், விவேகானந்த வள்ளலுக்குப் பெருமை சேர்ந்தது.

நமது மதத்தில் சமீபகாலத்தில் சேவா மதத்தை இராமகிருஷ்ணரும் விவேகானந்தரும் தோற்றுவித்திருக்கிறார்கள். அவர்கள், நாம் பிறந்த இந்த மண்ணில், இந்து மதத்தில், பத்தொன்பதாம் நூற்றாண்டில் அவதரித்தது நமது பாக்கியமாகும்.

# "வரும் கன்றும், அரும் பசுவும்"

"மகாவித்துவான்"
திரு. பண்டித நடேசனார், B.A., J.P.

''மடி சுரந்து பொழி தீம்பால் வருங்கன்று மகிழ்ந்துண்டு
படி நனைய வரும் பசுவும் பருவரல் நீங்கியதன்றே''
—பெரியபுராணம்.

மனுநீதிச் சோழன் மகன் உலா வருகையில், இளங்கன்று ஒன்று தேரின் பின் காலில் அகப்பட்டுச் செத்தது. தாய்ப்பசு தூங்கியிருந்த ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் தட்டியெழுப்பியது. உண்மையை உணர்ந்த சோழன் பசுவின் துயரத்தைத் தானும் ஏற்று அனுபவிக்கத் தன் ஒரே மகனைக் கன்றிறந்த இடத்தே கிடத்தி அவனது மார்பின்மேல் தேர்ச்சக்கரத்தைச் செலுத்திப் பழிக்குப் பழி வாங்கினான். சிவனருளால் இறந்த அரசிளங் கன்றும் ஆன்கன்றும் அமைச்சரேறும் உயிர்பெற்று எழுந்தனர். இவ்வரிய காட்சியினைத் தெய்வச் சேக்கிழார் காட்டும் சொல்லோவியம் காண்க!

அடி பணிந்த திருமகனைச் சோழன் ஆகமுற எடுத்து அணைத்தான்: நெடிது மகிழ்ந்தான்: பொறுக்க் முடியாத அருந் துயரத்தினின்றும் விடுதலை பெற்றான். இஃது அரசனது அருநிலை. அரும்பசுவின் நிலையையும் உயிர்பெற்று வரும் அருங் கன்றின் நிலையையும் கூறுமாறு போற்றற் குரியது. கன்று சென்று உயிர் பெற்று வருகிறது; தாயிடம் வருகின்றது. ''பல்லாவுள் உய்த்துவிடினும் குழக்கன்று வல்லதாம் தாய் நாடிக் கோடலை'' என்பது கன்றின் இயல்பு. ஆனால் இங்கே தாய்ப் பசு, கன்றும் காவலனும் இருந்த இடம் நோக்கிச் செல்லுதலைக் குறிக்கச் சேக்கிழார் பெருமான் ''வரும் பசு'' என்றார். ஆனால் திருமகன் தன் தந்தையிடம் சென்றதுபோல, அரும்பசு தன்னை நாடிவரும் கன்றினிடம் சென்றது. பசுத்தாயின் தாய்மையை விளக்குதலாகும் இது. 'மகவினை இழந்த தாய்க்கும் தந்தைக்கும் அருந் துயர் ஒன்றே! இறந்த மகவு உயிர் பெற்றெழின் அவ்விருவர்க்கும் மகிழ்ச்சியும் ஒன்றே! உடல் வேறு, உயிர் ஒன்றே.

'ஆவின் மகிழ்ச்சியையும் தாயின் அன்பினையும் கன்று கண்டு, உண்டு எஞ்சிப் பூமியை நனைக்குமாறு பால் பொழிந்தது என்றார் ஆசிரியர். தாய்ப்பசு மகிழ்ந்தது போன்று கன்றும் களித்தது என்பார் ''வருங் கன்று மகிழ்ந்து உண்டு'' என்றார். ஈண்டு ''வருங்கன்று'' என்பது திருவாரூர்த் திருவாளர் திருவருளால் ''உயிர்பெற்று வருங்கன்று'' என்று பொருள்படும். ''படி நனைய வரும் பசு'' எனும் தொடரில் கன்றினைத்தேடி வரும் பசு எனப் பொருள் படும். அதனைவிட சிறப்புப்பொருள் 'வரும்பசு' எனும் முதற் பதத்திலுள்ள'வ' கரத்தை உடம்படு மெய்யாக்கி ''அரும் பசு'' எனக் கோடலே அருமையாம். தெய்வச் சேக்கிழார் பெருமான் மனுவின் சிறப்பினையும் நீதியின் அவசியத்தையும் சோழனின் பெருமையையும் தோற்றுவித்த, தெய்வத் தன்மையுடைய இப்பசுவினை ''அருமையான பசு'' என்றுகாட்ட ''அரும்பசு'' என்றே பாடினார் எனலே நயமுடையது.

பசு மணி அடித்ததால் மனுநீதியும் சிவனருளும் வெளிப்பட்டன. எனவே, வரும் பசு அரும்பசு ஆனது. இவ் அரும்பசுவினது பண்பினை வியந்தே இளங்கோவடிகள் தம் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில் 'வாயிற் கடைமணி நடுநா நடுங்க ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத் தான் தன் அரும்பெறற் புதல்வனை ஆழியில் மடித்தோன்'' எனக் குறித்துள்ளார். 'கறவை முறை செய்தோன்' என்றும், 'கறவை முறை செய்த காவலன்' என்றும் மனுநீதிச் சோழனைப் போற்றிப் புகழ்ந்தார். 'சதபத பிராமணம்' எனும் நூலில் ''ஐலா''(பசு) மனுவின் குமாரத்தி என்று குறிப்பிட்டுள்ளது. ஐலா ஒரு பெருஞ் சக்தியுடைய தேவி என்று இருக்கு வேதத்தில் குறிக்கப்பட்டுள்ளது. ஊர்வசியுடனும் நதிகளுடனும் ஐலா சேர்த்துச் சொல்லப்படுகின்றது. இவள் மந்தைகளின் தாய் என்றும் கூறுகின்றது; அஃலியும் புரூரவர்களும் ஐலாவின் புத்திரர்கள் என்றும் மொழிந்துள்ளது. ஆரிய வேதத்தில் ஐலாவைப் பசுவோடு சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளது. ஐலா, ஐல்லா என்பன பூதேவிக்கும் பசுதேவிக்கும் உரிய பெயர்கள். இட (இடு) எனும் தமிழ்ப்பதம் மண்கட்டியையும் பூமியைத் தோண்டுதலையும் குறிக்குமாம். எனவே, இடாதேவி வணக்கம்திராவிடத்தைச் சார்ந்தது ஆகலாம் என்பர். 'இடா' தேவிக்குக் கணவன் 'எது'எனக் கொண்டு கிரேக்கரும் அக்கேடியரும்உரோமரும் வணங்குகின்றனர். வேத காலத்தில் சரசுவதி, மதி அல்லது பாரதி, இடா மூன்றும் ஓர் இனமாகும் தேவிமார்கள்.

பசு மக்களுக்கு உபயோகமுள்ள பிராணி. இருக்கு வேத ஆரியர்கள் அதனைப் புனித வடிவமாகக் கொண்டு கோமாதா எனப் பக்தி பூண்டனர். ஆனால் சிந்துவெளி நாகரிகம் போற்றிய திராவிடர், காளை மாட்டினையே (நந்தி) போற்றி, வழிபட்டனர். வேத காலத்து நூல்களில் பசு சம்பந்தமுடைய பல தாய்க் கடவுளர் உண்டு. இருக்கு வேதத்தில் (1.92 1) பாலை மேட்டுநில நீரோட்டத்தைப் பசுவாக உருவகப்படுத்தியுள்ளது. விண்ணுலகினையும் மண்ணுலகினையும் இரண்டு பசுக்களாகக் கொண்டு விளித்துள்ளார்கள் வைதீகர்கள். விண்ணையும் மண்ணையும் நீரினையும் காக்கும் தேவியாகப் பசுவினைக் கனம் பண்ணி வழிபட்டனர். அதர்வண வேதத்தில் பசுத் தாயைத் தோத்தரிக்கும் சுலோகங்கள் உண்டு. பசுவினைப் பாடிப் பள்ளியெழுப்ப, திருப்பள்ளியெழுச்சியைப் போன்ற 'காலைப் பாட்டு' உண்டு. மேகம் தண் ணீர் கொடுப்பது; பசு பால்கொடுப்பது என்று வேதகாலத்தில் இந்தியரும் அயல்நாட்டாரும் பசுத்தாயைப் போற்றினர் எனில் 'வரும் பசுவை'ச் சேக்கிழார் 'அரும்பசு' என்று கூறாரோ?

பசு ஒரு வீட்டு மிருகம்: சாந்தமுடையது. சாதாரண புல்லும் கொள்ளும்தின்று பிழைப்பது. எளிய வாழ்வுக்கும் தியாக வாழ்வுக்கும் எளிய புத்திக்கும் எடுத்துக் காட்டாக விளங்குவது. காணமுடியாத அருமையும் பெருமையும் உடையது. ஆச்சரியமும் அற்புதமும் இணைந்த இரசாயன உடம்பினைப்பெற்ற பசு, தான் குடிக்கும் தண்ணீரைப் பாலாக மாற்றியருளுகின்றது. தாய்ப்பசு கன்று ஈன்றே பால் தருகிறாள்; கன்றின்றிப் பால் அருளாள். எனவே, பால் தாய்மைக்கு அடையாளம். எங்கெங்கு பால் உள்ளதோ அங்கெல்லாம் தாய்மை உண்டு. முடிவற்ற மனிதர், மிருகங்கள், பறவைகள், உயிருள்ள சீவராசிகள், தாவரங்கள் போன்றவள் பசுத்தாயுமாவள். பிறப்புக்குரிய செய்முறை எல்லா உறுப்புகளமைந்த பிராணிகளுக்கும் ஒரே மாதிரி தான்.

ரோமர் என்ற கிரேக்கக் கவிஞனின் நடையிலுள்ள வீறுடைய ''ஹேரா'' எனும் அம்பாளுக்குப் பசுமுகம் உண்டு. அவளது கணவன் பெயர் ''ஜீயஸ்''. நந்தி மணம்புரிந்த பசுவாகவே இன்னும் கிரேக்கரும் ரோமரும் வழிபடுகின்றனர். எகிப்து தேசத்தில் மகாமாதாவாக வணங்கப்படுவது பசுத்தலை பெற்ற ''ஹேதர்'' எனும் அம்பிகையே. இவ்வம்பிகையின் சின்னம் பசுமுத்திரையே. ''ஆஜீல்'' என்பவரும் பசுத்தேவியே. 'ஹேதர்' பசுக்களுக்கு வணக்கம் செய்யும் தேவாலயங்களும் கட்டப்பட்டுள்ளன. ஆனால் இந்தியாவில் கோபூசை புரிகின்றனரே அன்றிக் கோமாதா கோயில்களில்லை. பசுமுகத்துடன் கடவுளர் சிலையும் இல்லை. காமதேனு மணப்பெண் முகமுடைய பசு வாகனமாகச் சிவசத்திக்கு உண்டு. திருப்பாற்கடலில் உதித்த இவளே பசுக்களின் தாய் என்பர். பசுபூசித்த தலங்கள் இந்தியாவில் உண்டு. பசுத் தாய்க்குத் தனி ஆலயம் இல்லை. நந்தி பூசித்த இடமுண்டு. நந்திக்கும் தனிக் கோயில் இல்லை.

கிறித்து பிறப்பதற்கு முன்னரே இருந்த பாபிலோனில் அகழ்ந்தெடுத்த ஒரு ஜாடி மேல் பசு முத்திரையுள்ளது. அப்பசுவே பாபிலோனியர் வணங்கிய ''இஷ்டர்'' தேவியின் அடையாளம் என்பர். ஹேதர் தேவியின் அவதாரமே பசு என்றும் கூறினர். ''அஸ்டோரெத்'' எனும் தேவிக்கும் பசுத்தலையுடைய விக்கிரகம் உண்டு. பூமி தேவியைப் பசு என்றே போற்றினர். ''வாசா'' ''கோ'' ''தேநு'' என்றும் பசுவுக்குப் பெயரிட்டனர். அவள் பிறப்பால் பசுவாக உள்ளாள். பூமியைப் போல் பசுவும் அதிதியே. பூதேவி மக்களுக்கும் மாக்களுக்கும் தேவையான உணவினை உதவுகிறாள்; மேகக் கடவுள் தண்ணீர் உதவுகிறாள்: கோமாதா பால் கொடுத்துப் பாதுகாக்கிறாள். உழவுக்கும் தொழிலுக்கும் இயந்திர சக்தி உதவி புரியும் நந்தி வழிபாடு திராவிடர்க்கும்--காளையும், கன்றும் உதவும் பசுவழிபாடு ஆரியர்க்கும் உரியன எனலாம். உலகெலாம் போற்றும் தாய்ப் பசுவை ''அரும்பசு'' என்றார் சேக்கிழார் என்பதில் வியப்பில்லை.

பசுவே கர்ப்பிணிகளையும் கருவுற்ற மிருகங்களையும் காக்கும் கடவுள் என்ற நம்பிக்கை எகிப்து தேசத்தில் உண்டு. ''ஆதார்'' அல்லது 'ஹேதார்' எனும் கோமாதாவே (உஷாதேவி) விடியற்காலைத் தேவதை என்றும், அவளே சூரியனின் தாய் என்றும், குழந்தையாக இருந்த சூரியனைத் தன் மடியிற் கிடத்தி வளர்த்த செவிலி என்றும், அவளது இரு கொம்புகளுக்கிடையே பாலசூரியனுக்குத் தங்க இடம் கொடுத்தாள் என்றும் எகிப்தியர் கூறுவர். எகிப்தியர் பசுவின் வயிற்றில் சுழிகளும் சக்கரங்களும் காணப்பட்டால் அதுவே உத்தம இலக்கணமுடைய கோமாதா என்று சொல்லுகின்றனர். இப்பசுவே மோட்சநெறி காட்டும்சின்னம் என்று ரஷியர் ,இந்தியர் பிறர் கூறுவர்.

பசுவின் சிறுநீரும் (கோசலமும்), மலமும் (கோமயமும்), இந்திய ஆரியர்களுக்குப் புனிதமானவை. பஞ்சகவ்யம் இன்றும் இந்துக்களுக்கு அரிய செல்வமாகும். பசுவின் சாணத்தை மந்திரம் சொல்லி எரித்த சாம்பல் விபூதியாகும். தினசரி சைவரிடும் திருநீறாகும். ஆண்டிற்கு ஒரு முறையாகிலும், கிருத்துவரும் (மேனாட்டினரும்) மகமதியரும் விபூதியை அணிவர், பூசவர். யூதர்கள் தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ளச் சிவப்பு நிறமுடையதும் கன்று ஈனாததுமாகிய இளம் பசுவின் சாம்பலைப் பூசிக் கொள்ளுகின்றார்கள். ரோமாபுரி

யினர் முதற்கன்று ஈனும்போது இறந்த பசுவின் சாம்பலைப் பூசிக் கொள்ளுகின்றனர். இச் சாம்பலை (திருநீறு அவரைக் கொடியாலும் காம்பாலும் சூழப்பட்ட இக் கோயிற் சாம்பலை), தங்கள் பாவங்களைப் போக்கச் செய்யும் கழுவாய்ச் சடங்குகளில் உபயோகிக்கின்றனர்.

மேகங்களை இந்திரனது பசுக்கள் என்றும், இந்திரன் மழைக்குரிய தெய்வம் என்றும் வேதங்கள் மொழிகின்றன. ஒருகாலத்தில் பசுக்களைத் திருடிக்கொண்டு போய் ஒரு குகையில் ஒளித்து வைத்தனர் அசுரர் என்றும் கூறுப உலகில் குருமார் பசுக்களைப் பலியிட அனுமதித்ததே இல்லை. இந்தியாவில் பசுக்கொலை நரகம் புகுத்துமென உணர்ந்து, பசுவினைத் தம் உயிர் போலும் கண்போலும் நேசித்தனர் இந்தியர். பேய், பிசாசு, தீயசக்தி, கெட்ட காற்றுள்ள இடங்களில் பூதேவியாகிய பசுவினைத் தொழுது அழைப்பதைப் பாரசீக 'மஜ்டியர்' நிறுத்தினர். பசுக்களைக் காப்பாற்றும் தெய்வத்திற்கு 'இடையன்' என்று பெயர். தோல்கன்று, இடையன் என்னும் தமிழ் வார்த்தைகள் இன்றும் ஐரோப்பிய மொழிகளிற் காணலாம். ஆடு மேய்ப்பவர் பேச்சு மொழியாகவும் உள்ளன. 17.10.1980 இரவு 10 மணிக்குத் திருவொற்றியூர் தியாகரையும் வடிவாம்பிகையையும் தரிசித்த 'எடின்பர்க் பிஷப்பும் எழும்பூர் மாதாகோயில் பாதிரி, பீட்டர் மில்லரும், தோல்கன்றும் விபூதியும் ஸ்காட்லாண்டில் செய்முறைகளை எனக்கு விளக்கினார்கள். ஆங்கில நாட்டினர் பசுவின் சாணத்தைச் சாம்பலாக்குவதை விட்டு, ஒலிவ மரத்தின் குச்சிகளை எரித்துச் சாம்பலாக்கி, ஆண்டுதோறும் வரும் சாம்பல் திருநாள் (பரிசுத்தமாக்கும் நாள்) அன்று கோயிலில் குருமார் கொடுக்கக் கிறித்தவர்கள் பயபக்தியுடன் கைகளிற்பெற்று, நெற்றியில் சிலுவை மாதிரி அணிவார்கள் என்றார்கள். மேலைநாட்டினரும் போற்றும் பசுவினைச் சேக்கிழார் ''வருங்கன்றும் அரும் பசுவும்'' என்றார் எனக் கொள்ளின் பசுவினது சீர்மை விளக்கமுறும்.

ஐந்து பசுக்கள் பாற்கடலில் தோன்றின. அவை சர்வ உலகத்துக்கும் உதவின. தேவாபிஷேகத்திற்கும் துணைபுரிந்தன. கோ தரும் பொருட்கள் பரிசுத்தத்தையும் சர்வ சித்தியையும் தருவன. சிவப்பிரிய வில்வமரம், கோமயத்தில் (சாணம்)பிறந்தது. லட்சுமியும் அதனில் வாழ்கிறாள். வெள்ளைப் பசுவினைப் பிராமண ஜாதி என்றும், சிவப்பு நிறப் பசுவினை க்ஷத்திரிய ஜாதி என்றும், பொன்னிறப் பசுக்களை வைசிய ஜாதி என்றும், காராம் பசுவினைச் சந்திர ஜாதி என்றும், வேதகால மக்கள் பிரித்தனர். பசுமடியிலுள்ள நான்குகாம்புகளுக்கும் பெயரிட்டனர். அவையாவன: சுவாஹாகாரம், சுவதாகாரம், வஷ்டாகாரம், ஹந்தாகாரம். சுவாஹாகாரக் காம்பில் வெளியாகும் பாலினைத் தேவரும், சுவதாகாரப் பாலினைப் பிதுர்க்களும், வஷ்டாகாரப் பாலினைப் பூதேசுவரரும், ஹந்தாகாரப் பாலினை மனிதரும் புசிக்கின்றனராம். பஞ்ச கௌவ்யம் என்பன கோமூத்திரம், கோமயம், பால், தயிர், நெய். கோஜலத்துக்கு வருணனும், கோமயத்திற்கு அக்கினியும், பாலுக்குச் சந்திரனும் தயிர்க்கு வாயுவும், நெய்க்கு விஷ்ணுவும் தேவதைகளாக ஸ்மிருதிகள் கூறுகின்றன. சிவப்புநிறப் பசுவின் கோமூத்திரம் வெள்ளைப் பசுவின் கோமயம், பொன்னிறப் பசுவின் பாலினையும், நீலநிறப் பசுவின் தயிரினையும், கருநிறப் பசுவின் நெய்யினையும் கொள்ளின் நலம் பயக்கும் என்பர் பெரியோர். கோமூத்திரம் கோமயத்துடன் கலந்து ஆறு மாத்திரை எடையும் நெய்யும் பாலும் கலந்து மூன்றுமாத்திரை எடையும், தயிர் பத்து மாத்திரை எடையும் கொண்டு, இவையாவும் மந்திரபூர்வமாகக் கலந்து தெய்வ சந்நிதியில் உண்டவன் சகல பாபத்தினின்றும் நீங்கிச் சுத்தமடைகின்றார் என்பது சாத்திரம்.

தெய்வப் பசு தன் உடலில் அக்னிக்கு இடம் தந்ததால் தேவர்களால் புண்ணியம் பெற்றது. திருப்பாற்கடலில் பிறந்து நந்தி மாதேவரை விரும்பியது. பசு ஐவகை: கபிலநிறமுடையது நந்தை, கருநிறமுடையது கபத்திரை அல்லது சுபத்திரை, வெள்ளைநிறமுடையது சுரபி, புகைநிறமுடையது சுசீலை, தாமிர நிறமுடையது சுமனை. தேவர்கள் பசுவின் உடலில் விரும்பி வாழ்வர். கொம்புகளின் அடியில் பிரம்ம விஷ்ணுக்கள் இருக்கின்றனர். கொம்புகளினின்று நுனியில் எல்லாப் புண்ணிய தீர்த்தங்களும் இருக்கின்றன.

தலையில் சிவமூர்த்தியும், நடுநெற்றியில் சக்தியும், மூக்கின் நுனியில் கந்தமூர்த்தியும்; இரு கண்களில் சூரியனும் சந்திரனும் உளர் என்ப. ஒரு ரிஷியின் சாபத்தால் பசுவின் முகத்தில் மூதேவி வாசமும், பின்புறத்தில் திருமகள்வாசமும் உண்டு என்பர் முன்னோர். மேலும் கோமாதாவின் மேன்மை காணக் கோகுல சதகம் வாசிக்கலாம். 'பச்' எனும் பகுதிக்குக் கட்டுதல் என்பது பொருள். கோவிந்தனும் கோபாலனும் கம்பத்தில் கட்டிவிட்டால் அவர்கள் வந்து அவிழ்க்கும்வரை கட்டுப்பட்டே நடக்கும் பசு. சுதந்திரமற்றே வாழும் பசு. அதுபோல் ஆணவம், கன்மம், மாயையால் கட்டுப்பட்ட மனிதனும் பசுவே. அக்கட்டை (பாசத்தை) அவிழ்ப்பவன் பசுபதியாம். பசுவுக்கும் பதிக்கும் இடையே தடையாகவுள்ளது பாசமே. இத்துணைப் பெருமைகளையுணர்ந்தே தெய்வச் சேக்கிழார் பெருமான் ''படி நனையவரும் அரும் பசு'' என்றார். இவ்வரும் பசு இல்லையெனில் மனு நீதி சோழன் கதையே இல்லை எனலாம். உடம்பாடு மெய்யாக வரும் பதத்தில் ''வ''கரத்தை அகரமாகக் கொள்க. ***

# திருமுறையின் திருப்புகழ்

திரு. புலவர்: நடேச நாராயணன், பி.லிட்., மானாம்பதி.

### வெண்பா

1. வாய்மை தவம், அறிவு வண்மை புகழ், இன்பம்
தாய்மை மிளிரன்பே சார்தலினுல்—தூய்மையுறு
சைவநலம் மண்மீதில் சால்புடைத்தாம் என்றமையால்
உய்வமே ஓம்பியதை ஓர்ந்து.

### அறுசீர்விருத்தம்

2. எழுத்தைந்தே உயிராக
எழில் நீறே உடம்பாக
இணைந்து தோன்றிக்
கழுத்தினிலும் சிரசினிலும்
கவின்செய்யும் சிவமணியே
கட்டும் தூசாய்,
வழுத்து 'திரு முறை' மொழியாய்
வாய்த்தஎழிற் சைவமகள்
வாழ்வில் நம்மைப்
பழுத்தபழச் சுவையருளால்
பாலிப்பாள் அன்னாளைப்
பணிவோம் நாமே

### எண்சீர்விருத்தம்

3. மண்ணினிலே நல்லவண்ணம் வாழ்ந்திடுதற் காக
வழிகாட்டும் காரணத்தால் திருமுறைகள் எல்லாம்
எண்ணிடிலே மனிதர்க்கு 'வாழ்வியல்நூல்' என்றே
ஏற்றமுடன் இயம்பிடலாம்; இதில்ஐயம் இல்லை.
விண்ணினிலே சுடர்இருந்து வியனுலகத்(து) இருட்டை
விலக்கிடல் போல், திருமுறைகள் அனைத்தையுமே நந்தம்
கண்ணினிலே பாவையெனக் கருத்தினிலே கொண்டால்
கடிதோட்டும் அகத்திருட்டைக் களிப்பூட்டும் நன்றே

4. திருமுறைகள் வாழ்வளிக்கும்எனும் உண்மை தன்னைத்
தேவாரப் பதிகங்கள் அனைத்திலுமே ஈற்றில்
திருஞான சம்பந்தர், சுந்தரர்தாம் நன்றே
திருக்கடைக்காப் பிசைத்ததனால் தெளிந்திடலாம் அன்றோ?
தெருளுடைய வாழ்வுக்காம் கருத்தடைவு நூலாம்
தெய்வமணம் கமழ்கின்ற திருமுறைகள் தாமே,
அருளினையும் பொருளினையும் அனைத்தினையும் என்றும்
அடைந்திடலாம்; திருமுறையை அறிந்தோதி னாலே!

5. அன்பூட்டும் அருளூட்டும் அறந்தானும் ஊட்டும்
அகந்தூய்மை பெற்றிடவே பண்பனைத்தும் ஊட்டும்
தென்பூட்டும் திறமூட்டும் தீரமதும் ஊட்டும்
தெளியாத மனத்திற்கும் தெருளூட்டும் கண்டீர்!
துன்பூட்டும் பிறவியெனும் துயர்க்கடலைத் தாண்டும்
தோணியையும் ஊட்டும், உடன் தோற்றமுறும் வீடாம்;
இன்பூட்டும் அனைத்தையுமே இசைந்தூட்டும் என்றும்
இறவாத திருமுறைகள் இயைந்தோது வோர்க்கே!

## அறுசீர்விருத்தம்

6. ஐந்தெழுத்தைப் படைக்கலமாய்
அருள்நெறியை நல்லுணவாய்
அளித்துத் தக்க
மைந்தளித்து மகிழ்வளித்து
மாசகல மருந்தளித்து
வாழ்வளிக்கும்
பைந்தமிழின் திருமுறையைப்
பகுத்தறியும் மக்களெலாம்
பணிந்து பாடின்
உய்ந்திடுவர் உலகினிலே
உயர்நிலையும் எய்திடுவர்
உண்மை யீதே

## எண்சீர்விருத்தம்

7. கயிறறுந்து தனித்திழிந்த காற்றாடி யாகி,
கடிவாளம் அறுந்திட்ட பரியாகி, மத்தால்
தயிருடைந்து கலங்குதல்போல் உள்ளமுடைந் தெங்கும்
தாவுகின்ற எண்ணத்தால் தகுகொள்கை யற்றுச்
செயிருறைந்த செயல்பலவும் நாடோறும் ஆற்றிச்
செகத்தினிலே துயருற்றும் சிறிதும் உணராது
வயிறடைக்கும் மக்களெலாம் மனமடங்க நன்றே
வழுத்துவரேல் திருமுறையை, வளரும்இன்பம் தானே !

8. முன்னோரிங் (கு) அன்பறனே இல்வாழ்க்கை என்றால்
முகிழ்க்க அவை அறிவுறுத்தும் திருமுறைகள் நன்றே;
இன்னாச்சொல் அவாவெகுளி அழுக்காறு நான்கும்
இழுக்காக இயன்றதுதான் அறவாழ்வு என்றால்,
பின்னாக அவைஒழிய அறிவுரைகள் கூறிப்
பேருலகில் வாழ்வாங்கு வாழ்ந்திடச்செய் தெங்கும்
மன்னாக விளங்குகிற தெய்வத்துள் வைத்து
மதித்திடவும் செய்திடும்நல் திருமுறைகள் தாமே !

9. நிறைமொழிசேர் மாந்தரவர் ஆணையினில் தோன்றி
நிலைத்ததிரு முறைகளெனும் மந்திரத்தி னாலே
குறைமதியோ னிடமிருந்தே நிறைமதியை ஈர்த்துக்
கொள்கின்ற திறம்பெறலாம் ; நாயன்மார் தம்மை
உறைகயிறாம் திருமுறையின் பிணைப்பின்றேல் மேலே
உயர்ந்துபறந் துலாவந்த ‘பட்டம்’ ஒத்த மக்கள்
திறமின்றிக் கீழிழிந்து வீழ்ந்திடுவர் கண்டீர்
செப்பிவிட்டேன்; இனியேனும் திருமுறைகற் றுய்வீர் !

10. ஏரியினுக் கருகிலுள தரிசுநிலம் தானும்
ஏற்றவயல் ஆவதுபோல், விண்ணகத்தே மேவும்
சூரியனைக் காண்கின்ற வெறுநிலவு தானும்
சுகமான ஒளிதன்னைப் பெற்றிடுமாப் போலே,
ஊரினையே சார்ந்திருக்கும் கோயில்களின் தெய்வம்
உற்சவமாம் திருவிழாவுக்(கு) உரித்தாதல் போலே,
சீரமையாப் பாமரரும் திருமுறைகள் கற்றால்,
சிறப்புறுவர் சத்தியமாய்ச் செப்பிடுவேன் யானே !

—o—

# திருவள்ளுவரும், திருக்குறளும்*

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

R. RAJU,
Dy Commissioner
(Retired)
HR&CE Administration Dept

திருவள்ளுவர்

திருவள்ளுவர் ஒரு சிறந்த பெருங் கவிஞர்; ஒப்புயர்வற்ற நீதிநூல் ஆசிரியர்; மிகச் சிறந்த தத்துவஞானி; இணையற்ற இலக்கியப் பேராசிரியர்; அரும்பெரும் அரசியல் நுண்ணறிஞர்; பொருவிலாப் பொருளியல் மேதை; தன்னிகரற்ற பல்கலைக் குரிசில்; உலகம் முழுவதற்குமே ஒருபெரும் வழிகாட்டி! காலமும் இடமும் கடந்து, சாலவும் நிலைபெற்று, ஞாலமே புகழ்ந்து வியக்கும் திருக்குறள் என்னும் செந்தமிழ்த் தெய்விக அறநெறிப் பெரும் பனுவலை, இயற்றி அளித்த அரும்பெரும் வள்ளல் அவர்! பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும், அவர்தம் அருளுரைகள் அமைந்து பொலிந்து விளங்குகின்றன.

உலகப் பெரும் சமயத் தலைவர்களும், சான்றோர்களும் கூறியுள்ள கருத்துக்கள் எல்லாம், திருக்குறளில் செறிந்து கிடக்கக் காண்கின்றோம். திருவள்ளுவர் எல்லாச் சமயத்தவரும் ஒப்புக் கொள்ளத் தக்க வகையில், என்றும் மாறாத அடிப்படை வாழ்வியல் உண்மைகளை, நடுவு நிலை பிறழாமல் நன்கினிது சுவைமிக விளக்கியருளுகின்றார். அவர்தம் நூல், நவில்தொறும் நயம் பயக்கின்றது. தொட்டனைத்தூறும் மணற்கேணிபோலக் கற்றனைத்தூறும் நற் கருத்துக்களை உடையதாக மிளிர்கின்றது. ஒருநாடு-ஒருகாலம்-ஒருமொழி - ஓர்இனம் என்பவற்றிற்கே உரியதாகி விடாமல், எல்லாக் காலமும்-எல்லா நாடும் - மொழியும்-இனமுமாகிய வற்றைச் சேர்ந்த மக்கள் அனைவருக்குமே உரிய, மாபெரும் பொதுமறை நூலாகத் திருக்குறள் திகழ்கின்றது.

வாழ்க்கையின் ஒவ்வொரு கூறு பற்றியே, நூல்களெல்லாம் பொதுவாக விளக்கும். ஆனால் வாழ்க்கையின் பல திறக் கூறுகளையும் முழுவதாக ஒருசேர, முன்னொடு பின் முரண்படாமல் விளக்கும் திறனில், திருக்குறளுக்கு இணையாக ஒரு நூலும் இல்லை எனத் துணிந்து கூறலாம். இல்லறத்தான் துறவறத்தான், அரசன் அமைச்சன், நண்பன் பகைவன், போர் வீரன், தூதுவன், கற்றான் கல்லான், கள்ளுண்பான், கவறாடுவான், இரவலன் புரவலன், ஆண்கள் பெண்கள், முதலிய அனைவருக்குமே, ஏற்றபெற்றி அறிவுரைகள் கூறும் அரும்பெறற் சமுதாயப் பெருநூலாகத் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள், தலைசிறந்து திகழ்கின்றது. அறம் பொருள் இன்பம் என்னும் முப்பெருந் தலைப்பில், எப்பெரும் பொருளையும் உள்ளடக்கிக் குறைவிலா நிறைவாய் விளக்கும் முறையில், தெய்வப் புலவர் திருவள்ளுவருக்கு நிகராவார் பிறர் எவருமே இலர்.

அறன் வலியுறுத்தல்

திருவள்ளுவர் காலத்திலும், அதற்கு முற்பட்டும் இருந்த மக்களிற் பெரும் பாலோர், ''இன்பமே வாழ்க்கையின் முதன்மையான குறிக்கோள்; அதனை எம்முறையாலேனும் அடையலாம்'' என்னும் கொள்கையுடையவராக இருந்தனர் போலும்! பண்டைக்கால மக்களுள் ஒரு சாரார் அறத்தினும் இன்பமே பெரிதும் முதன்மையுடையதெனக் கருதியிருத்தல் கூடும் என்பது, ''இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்'' எனவரும் தொல்காப்பிய நூற்பாவானும் புலனாகின்றது. அதனை உடன்படாமல், அந்நிலையை மாற்றி, அறமே இன்பத்தினும் முதன்மையுடையது என்றும், 'அறத்தான் வருவதே இன்பம்' என்றும், வலியுறுத்திய பெருமை திருவள்ளுவர்க்கே உரியது. தனி மனித வாழ்வினும், ஒருபெருஞ் சமுதாய வாழ்வின் நலத்திற்கு அறமே முதன்மை என்று கண்டு, அறத்திற்கு முதலிடம் அளித்தவர் திருவள்ளுவரேயாவர். ''சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்து வழிப்படூஉம் தோற்றம்போல'' எனப்

* மதுரை மாநகரில் நிகழ்ந்த, ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின்கண் நடைபெற்ற திருக்குறட் கருத்தரங்கில், திருக்குறளார் திரு. வீ. முனிசாமி, B.A.,B.L. அவர்கள் தலைமையில் நிகழ்த்திய, சொற்பொழிவினைத் தழுவியது. *(6.1.81.)*

புறநானூறு பாடியது, திருவள்ளுவர் நிகழ்த்திய புரட்சியின் விளைவேயாகும். ''வடுவிலா வையத்து மன்னிய மூன்றில் நடுவணது எய்த இருதலையும் எய்தும்'' எனப் பொருளுக்குப் பிறர் அளித்த சிறப்பை உடன்படாமல், ''அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம் புல்லார் புரள விடல்'' எனப் பணித்தருளியவர் திருவள்ளுவரேயாவர்!

### பெண்ணிற் பெருந்தக்க யாவுள?

பண்டைக்கால மக்களிடையே பெண்களைப் பற்றிப் பலவகைப் பொருந்தாக் கருத்துக்கள் நிலவி வந்தன. அவற்றுள், 'பெண்கள் பாவப் பிறவிகள்; ஆண்களை விடத் தாழ்ந்தவர்கள்; அவர்களுக்கு வீடு பேறு இல்லை' என்பன போல்வனவும் சில. சமணரும் பௌத்தரும் பெண்களை இழிவாகவே கருதி நடத்தி வந்ததாகத் தெரிகின்றது. புத்தர்பிரான் பௌத்த மடங்களிற் பெண்களைச் சேர்த்துக் கொள்ள எளிதில் இசைவு அளித்திலர். இசைந்த பின்னரும் பிட்சுணிகளுக்குப் பலப்பல கட்டுப்பாடுகள் விதிக்கப் பெற்றன. துறவு நெறியையே மிகவும் வற்புறுத்தி நின்ற பௌத்த, சமண நூல்களில் பெண்களைக் கடிந்துரைக்கும் பகுதிகள் நிரம்பக் காணப்படும். பெண்களைப் பல்லாற்றாலும் இழித்துப் பழித்து இகழ்வாக நடத்துவது, அக்காலத்துச் சமுதாய நிலையாக இருந்து வந்தது. திருவள்ளுவர்க்கு இன்னோரனையவை உடன்பாடல்ல. ''பெண்ணிற் பெருந்தக்க யாவுள?''(54) என அறைகூவி வினவி, அதற்குப் ''பெண்ணிற் பெருந்தக்கது இல்''(1137) எனத் தாமே விடையும் கூறிப் பெண்ணின் பெருமையினை உலகறிய நிலை நிறுவியவர், திருவள்ளுவர் பெருந்தகையே எனலாம்.

### பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்

திருவள்ளுவர் காலத்திலும், அதற்கு முன்னரும், பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் சாதி வேறுபாடுகள் முதலியன, பெரிதும் நிலவி வந்தன. இன்றளவும் அவை இருந்தே வருகின்றன. சமணசமயம் அவற்றை ஒழிக்க, முதலில் ஓரளவு முயன்றது. எனினும் பிற்காலத்தில் அவற்றை ஏற்றுக் கொண்டு விட்டது. மனுமிருதி போன்ற வைதிக மத நூல்கள், சாதி வேற்றுமைகளைப் பாராட்டி, அவைகள் வளர்வதற்குரிய வழிகளும் வகுத்தன. திருவள்ளுவர்க்கு இவை உடன்பாடுஅல்ல. ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்று புரட்சிப் பெருமுழக்கம் செய்து, ''மேலிருந்தும் மேல்அல்லார் மேலல்லர்; கீழிருந்தும் கீழல்லார் கீழல்லவர்'' எனச் சிறந்த தீர்ப்பும் அளித்தவர் திருவள்ளுவர் பெருமான்!

### கவுடில்யர்

திருவள்ளுவரின் மாட்சி, அவரை வேறு பிற ஆசிரியர்களோடு ஒப்பிட்டுக் காண்பதனாலும், மிகவும் நன்கினிது நமக்குப் புலப்படும். திருக்குறளின் பொருட்பாலைக் கவுடில்யரின் அர்த்த சாத்திரத்திற்கும், காமத்துப்பாலை வாத்ச்யாயனரின் காமசூத்திரத்திற்கும், சிலர் ஒப்பிடுவதுண்டு. அஃது ஒருபுடை ஒப்புமையாகுமேயன்றி, முழுவதும் ஏற்புடைத்தாகாது. கவுடில்யரின் அர்த்தசாத்திரத்தில் உழவுக்கும் உழவருக்கும் ஒரு சிறிதும் முதன்மையளிக்கப்படவில்லை. அரசன் குடிமக்களை அச்சுறுத்தியும் வற்புறுத்தியும், தனது வருவாயைப் பெருக்கிக்கொள்ளலாம் என்று கூறி, நீண்டதொரு வரிப் பட்டியலையும் அர்த்தசாத்திரம் வகுத்துத் தந்துள்ளது. வருணாச்சிரம சாதிப் பாகுபாடுகளை அடிப்படையாகக் கொண்டே, அர்த்தசாத்திரம் அமைந்துள்ளது. 'நீதி நெறி பிறழாமல்தான் ஒருவன் பொருளீட்டுதல் வேண்டும்' என்று கூறும் குறள் நெறிக்கும், பொருளீட்டுதலில் நீதிபற்றி ஏதும் நினைக்க வேண்டுவதில்லை எனப் போதிக்கும் இயல்பிற் செல்லும் அர்த்த சாத்திரத்திற்கும், உள்ள இடையீடு மிகப் பெரியது.

குடிமக்களின் கரவின்மை, அறியாமை, மூடநம்பிக்கை, சமயவுணர்வு ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொண்டு, ஓர்அரசன் தன் பணப்பெட்டியை நிரப்பிக்கொள்ளலாம் எனக் குறிப்பிற் புலப்படுத்தி, அதற்குரிய வழிவகைகளையும் கவுடில்யர் தமது நூலில் வகுத்துரைக்கின்றார். மேலும் கட்குடி இணைவிழைச்சு என்பன போன்ற இழிசெயல்களுக்கும் ஊக்கம் அளித்து, அவ்வாற்றாலும் அரசன் தன் வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம் என்பது அதன் கொள்கை. இவையெல்லாம் திருவள்ளுவர்க்குச் சிறிதும் உடன்பாடு அல்ல. இங்ஙனமே, அறநெறியைப் பொருட்படுத்தாமல் புறக்கணித்துத் தீய சூழ்ச்சித் திறங்கள் பலவற்றைக் கூறும் மாக்கியவெல்லி ( Machiavelli ) யின் கொள்கைகள் பலவும், திருவள்ளுவர்க்கு உடன்பாடு உடையன அல்ல. ஓர் அரசன் நரியைப் போன்ற சூழ்ச்சித் திறம் மிக்கவனாதல் வேண்டும் என்பது மாக்கியவெல்லியின் கொள்கை. அரசன் அரிமாப்போன்ற பெருமித இயல்புடையனவனாகப் பிறங்குதல் வேண்டும் என்பது, திருவள்ளுவரின் கொள்கை. இதுவே இவ்விருவருக்கும் உள்ள இடையீட்டின் அளவை, நம்மனோர்க்குப் புலப்படுத்தப் போதியதாகும்.

### வாத்ச்யாயனர்

இவ்வாறே திருவள்ளுவரும், வாத்ச்யாயனரும் ஒருவரோடொருவர் நெடுந்தொலைவினர். திருவள்ளுவர் தூய தெய்விகக் காதலை விளக்கினர், வாத்ச்யாயனர் தீய இழிந்த காமத்திறன் பற்றி விரித்துரைத்தனர். பாலுணர்ச்சியைத் தூண்டிவிடுவது, வளரச்செய்வது, நீடுநிலைபெறுத்துவது பற்றியெல்லாம் வாத்ச்யாய

னரின் காமசூத்திரம் விவரிக்கின்றது. ஆண் பெண்சேர்க்கையில்நிகழும் பலதிறச்செயல்கள், நிலைகள் (Postures) பற்றியெல்லாம் வாத்ச்யாயனர் வருணிப்பர். பிறன் மனைவியை மயக்கிக் கெடுப்பதற்குரிய வழிவகைகளையுங்கூடக் காமசூத்திரம் கட்டுரைக்கும். பரத்தைமைப் பண்பும் செயல்களும் பற்றிக்கூட, அது பாரித்துரைக்கக் காணலாம். இன்னோரனைய இழிதகவுகள் எதுவும் திருக்குறளிற் காணப்படமாட்டா.

## பிளேட்டோ

திருவள்ளுவர்க்கு மேலைநாட்டுப் பேரறிஞர்களான பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றவர்களும், சிறிதும் ஈடாகமாட்டார்கள். பிளேட்டோ கண்ட குடியரசு அளவாற் சிறியது. நகர-அரசு (City-State ) எனத்தக்கது. குடிமக்களின் தொகையிலும் செல்வநிலையிலும் வளர்ச்சியற்ற தேக்கமுடையது. பேச்சுரிமைக் குறைப்பு முதலிய பலவகைக் கட்டுப்பாடுகள் அங்கு உண்டு. தனிநிலையிற் குடும்ப வாழ்வின் இன்பமும், குழந்தை வளர்ப்பு உரிமையும் அங்கே அனுமதிக்கப் பெறமாட்டா. கவிஞர்கள் அங்கே மதிக்கப் பெறார். மெலிந்தோர் நலிந்தோர் புறக்கணிக்கப்படுவர். மனைவியரும் குழந்தைகளும் அங்கே பொதுவாக்கப் படுவர். திருவள்ளுவர் கூறும் கற்பு முதலிய பண்புகளுக்குப் பிளேட்டோவின் குடியரசில் இடமில்லை.

## அரிஸ்டாட்டில்

அரிஸ்டாட்டிலின் கருத்தின்படி, அடிமை முறை இன்றியமையாதது; உயர்வு தாழ்வுகள் இயல்பானவை; இழிநிலை பிறவியிலேயே அமைந்தது; குடியாட்சி என்பது கிரேக்கர்களுக்கு மட்டுமே யுரியது. ஏனையரெல்லோரும் நாகரிகமற்ற இழிசினரே (Barbarians) ஆவர். செல்வம் தேடுதற்கும், நீதிநெறி முறைகளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. இத்தகைய கருத்துக்களெல்லாம், திருவள்ளுவர் சிறிதும் உடன்படாதவை. இவைகளெல்லாம் திருக்குறளில் ஒருசிறிதும் காணப்படமாட்டா.

உலகப் பேரறிஞர்கள் பலர், மிகப் பழங்காலத்தில் எழுதிய எத்துணையோ கருத்துக்கள், இன்றைய உலகின் நடைமுறைக்கு ஒவ்வாமலும், அறிவுக்குப் பொருந்தாமலும், எள்ளி நகையாடும் வகையிலும், மாறிப் போதலை நாம் கண்டு வருகின்றோம். அரிஸ்டாட்டில் போன்ற பேரறிஞர்கள் பலர் எழுதியுள்ள கருத்துக்கள் பலவற்றைப் பிழையுடையனவாக மறுத்து, 'அறிவுத்துறைக் குப்பைகள்' (Intellectual rubbish) என்று இகழ்ந்து ஒதுக்கிப் ,பேரறிஞர் திரு. பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் எள்ளி நகையாடுகின்றார் (1).

அங்ஙனமெல்லாம் இன்றி, நூற்றுக்கு நூறு விழுமிய கருத்துக்களே பொருந்தி, ஒதுக்கித் தள்ளத்தக்கது எதுவும் இன்றி, ''காழில் கனி'' எனக் கட்டுரைக்கலாம்படி, கவின்மிகச் சிறந்து, காலம் இடம் இனம் நாடு மொழி முதலிய எல்லைகளையெல்லாம் கடந்து, அறிவுக்கும் இயற்கைக்கும் நடைமுறைக்கும் உண்மைக்கும் அணுத்துணையும் பிறழாமலும், தன்னிலையிற் றாழாமலும் நிலைபேறுற்று, நிகரின்றித் திகழ்கின்றது நம் திருக்குறள்! இஃது எண்ணுதொறும் நமக்கு மிகவும் இறும்பூது பயப்பதன்றோ?

## முடியாட்சியும் குடியாட்சியும்

திருவள்ளுவரின் காலத்தில் 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்னும் கொள்கை நிலவி வந்தது. அந்நாளில் முடியுடை மன்னர்களே நாடாளுவது இயல்பாகவும் மரபாகவும் இருந்து வந்தது. ஆயினும் திருவள்ளுவர் தமது திருக்குறளில், முடியாட்சியை மட்டுமின்றி, இந்நாளைய குடியாட்சி முறைக் கருத்துக்களையும் ஏற்றபெற்றி விளக்கியிருக்கின்றார். ''இறைமாட்சி'' என்னும் அதிகாரத்தில் வரும் பத்துக் குறள்களில், நான்கு குறள்களில், அரசருள்ஏறு, வேந்தன், பண்புடை வேந்தன், முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் என்னும் சொற்றொடர்களால்,முடியுடை மன்னர்களைக் குறிப்பிடுகின்றார். நான்கு குறள்களில் முடிமன்னரா குடியாட்சித்தலைவரா என்று பிரித்தறிய முடியாதபடி இருக்கும் பொதுவான சொற்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லன், இன்சொலால் ஈத்தளிக்க வல்லான், கொடை அளி செங்கோல் குடிஓம்பல் நான்கும் உடையான், நிலனாள்பவன் என்னும் சொற்றொடர்கள், முடிமன்னர் குடியாட்சித் தலைவர் ஆகிய இருவருக்குமே உரிய பொதுமைநிலையில் விளங்குதல் காணலாம். இரண்டு குறள்களில் (384, 395) 'அரசு' என்னும் பொதுச் சொல்லே கையாளப்பட்டுள்ளது.

திருவள்ளுவரின் அரசியலில் குடிமக்கள் வறிதே ஆளப்படுபவர் அல்லர். ஆட்சியிற்

(1) "Aristotle, in spite of his reputation, is full of absurdities. He says that children should be conceived in the winter when the wind is in the North, and that if people marry too young the children will be female. He tells us that the blood of females is blacker than that of males : that the pig is the only animal liable to measles: that an elephant, suffering from insomnia should have its shoulders rubbed with salt, olive oil, and warm-water; that woman have fewer teeth than men, and so on . . .''

—Dr. Bertrand Russel

பங்கு கொள்பவராகவும் விளங்குகின்றனர். 13 அதிகாரங்கள் கொண்ட ஒழிபியலில், ஒரு முறையேனும் அரசன் அல்லது மன்னன் என்னும் சொல் வந்திலாமை, இவ்வுண்மையினை வலியுறுத்தும். 'குடிதழீஇக் கோல்ஒச்சும் மன்னன்' என்ற தொடர், திருக்குறள் இந்நாளைய பாராளுமன்றக் குடியாட்சி முறையினையே (Parliamentary Democracy ) சிறந்ததாகக் கூறுகின்றது என்பதனை யுணர்த்தும்.

ஒப்புரவு

திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட மிகப் பழைய நூலேயாயினும், இந்நாளைய புதுமைக் கருத்துக்களையும் கூட, ஏற்றபெற்றி இனிது விளக்குந்தகையதாகத் திகழ்கின்றது. இந்நாளில் உலகமெங்கணும் பரவிப் பெருகிவரும் பொதுவுடைமைக் கொள்கை (Communism), சமவாய்ப்பியற் கொள்கை (Socialism) போல்வனவற்றையும்கூட, ஒருவகையில் திருக்குறள் உணர்த்துகின்றது எனலாம். திருக்குறளில் வரும் 'ஒப்புரவு அறிதல்' என்னும் அதிகாரம், ஒருவகையில் இன்னோரனைய புதுக் கருத்துக்களையும், இனிது ஏற்றுத் தழுவிக்கொண்டு விளக்குகின்றது எனல் கூடும். சோஷியலிசம் அல்லது சமதர்மம் எனப்படும் சொற்களால் குறிக்கப்பெறும் கருத்தினையே 'ஒப்புரவு' என்னும் திருக்குறட் சொல் குறிக்கின்றது எனக் கொள்ள இடனுளது.

(1) ''ஊருணி நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு'' (2) ''பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம் நயனுடையான் கட்படின்'' (3) ''மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம் பெருந்தகையான்கட் படின்'' என்னும் குறள்கள், இவ்விருவகைப் புதிய கொள்கைகளுக்கும் செவ்விய நல்ல முன்னோடி எனலாம்.

சீர்திருத்தச் செந்நெறி

திருவள்ளுவர், ஒரு சிறந்த சீர்திருத்தக்காரரும் புரட்சியாளருமாவர். மக்கட் சமுதாயத்தைச் சீர்திருத்தி, அவர்களை வையகத்து வாழ்வாங்கு வாழ்விக்க வந்த மாட்சிமை யுடையவராதலின், திருவள்ளுவர் அக்காலத்துச் சமுதாய வாழ்வில் நிலவியிருந்த பலவகைக் குற்றங் குறைகளைக் கடிந்து கூறித் திருத்துவதற்குச் சிறிதும் தயங்கிற்றிலர். அக்காலத்தில் பெருக நிகழ்ந்து வந்தனவாகத் தெரிகின்றகொலை வேள்விகளைத் திருவள்ளுவர் பெரிதும் வெறுத்து மறுத்துள்ளார். ''அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று'' எனவும், ''நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக் கொன்றாகும் ஆக்கம் கடை'' எனவும், திருவள்ளுவர் கொலை வேள்விகளைக் கடிந்துரைத்திருத்தல் காணலாம்.

கொல்லாமையை ஒரு பெரும் கொள்கையாகக் கூறிக்கொண்டு, தாம் உயிர்களை நேரே கொல்லாமல், பிறர் கொன்றுகொண்டு வந்து தந்த புலாலைப் பலர் அக்காலத்தில் உண்டு வந்தனர். புலால் உண்ணுதலை ஒரு குற்றமாக அவர்கள் கருதிற்றிலர். அவர்களை மறுத்துத் ''தினற் பொருட்டாற் கொல்லாது உலகெனின் யாரும் விலைப் பொருட்டால் ஊன் தருவாரில்'' எனவும், ''கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்'' எனவும், திருவள்ளுவர் அருளிச் செய்தனர். திருவள்ளுவர்,

''சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருள்இது என்றவர்''

ஆதலின், பண்டைக் காலத்துச் சமயவாதிகளில், பலர் தலைமுடியை மழித்தல்-நீட்டல்-பறித்தல் (கேசலோசனம்) முதலிய போலி வேடங்களைப் பூண்டு, புரிந்து வந்த கூடாவொழுக்கச் செயல்களைப் பெரிதும் கடிந்துரைத்தார். ''வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்புலியின்தோல்போர்த்துமேய்ந்தற்று'' ''வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்'' என்பன போன்ற திருக்குறள்கள், திருவள்ளுவரின் சீர்திருத்தச் செந்நெறியினைத் தெற்றென உணர்த்தும்.

காமம் சான்ற ஞானப் பனுவல்

திருவள்ளுவரின் மாட்சிமை, அறத்துப் பாலிலும் பொருட்பாலிலும் மட்டுமேயன்றி, காமத்துப்பாலிலும் கவின்மிக்குச் சுடர்விட்டு ஒளிர்கின்றது. காமம் என்னும் சொற்கேட்ட துணையானே, அதனை மிக இழிந்ததாகக் கருதி வெறுத்து ஒதுக்கிவிடுபவர் பலருண்டு. அத்தகைய இழிந்த காமத்தினையும்கூட, நம் திருவள்ளுவர் மிக உயர்ந்த சிறந்த புனிதப் பொருளாக மாற்றிப் போற்றியுள்ளார். அகப்பொருள் நூல்களில் பொதுவாகவும் இயல்பாகவும் ''குல் தொடர் அல்''போன்ற சில சொற்கள் அடிக்கடி போதருவதுண்டு. அனைய சொற்கள் எதுவும் ஒரு சிறிதும் விரவாமல், மிகவும் அரிய இனிய அழகிய முறையில், காமத்துப் பாலைத் திருவள்ளுவர் இயற்றியருளியுள்ள திறன், மிகப்பெரிதும் வியக்கற்பாலது. மாணிக்கவாசகரின் திருச்சிற்றம்பலக் கோவையாரும், நம்மாழ்வாரின் திருவிருத்தமும் போன்ற ''காமம் சான்ற ஞானப் பனுவல்கள்'' தோன்றுவதற்கு வழிவகுத்தருளிய பெருமை, திருவள்ளுவரையே சாரும் எனக் கூறுதல் பொருந்தும்(2).

---

"The spousal love spoken of in Saiva-Vaishnava literatures is entirely a-sexual and corresponds to the greek 'agape' and differs from worldly love signified by the word 'eros' or 'erotos'."

— S. N. Das Gupta,
Indian Philosophy, Vol. III.

### கவியரசர்

தெய்வப்புலவர் திருவள்ளுவர் இயற்றியருளிய திருக்குறளுக்கு எத்துணையோ பலதிறச் சிறப்புக்கள் உண்டு. திருக்குறள் இயற்றப்பெற்று, எத்தனையோ பற்பல நூற்றாண்டுகள் ஆகியும், அஃது இன்றும் கூட, எளிய பாமர மக்களுக்குப் புரியக் கூடிய நிலையில், எளிய இனிய நடையில் இயன்றுள்ளது(3).

''எவர்ஒருவர் எளியநல்ல
இனிய எழிற் சொற்களினால்,
சுவைபெருகப் பொருள்பொதுளத்
துயர்போக்கி மகிழ்வுறுத்தி,
நவைநீக்கும் கவிதைகள்தாம்
நலந்திகழப் பாடுவரோ,
அவர்கவிஞர்; கவிஞருளே
அரசர்எனத் திகழ்ந்தொளிர்வோர்!(4)

—ந.ரா.மு.

அம்முறையில், பெரும்கவியரசர் பெருமான் ஆகிய நம் திருவள்ளுவர், திருக்குறளை எளிய இனிய நடையில், எல்லோருக்குமே தெளிவுறப் புரியும்வண்ணம் இயற்றியிருக்கும் திறன், மிகப் பெரிதும் வியக்கற்பாலது!

### எளிமையும் அருமையும்

ஆயினும், திருக்குறள் எளிமைப் பண்பு மட்டுமே உடையதாக இருந்திருப்பின், அஃது இத்துணைச் சிறப்பும் மாட்சிமையும் பெற்றிருத்தல் இயலாது. ஒரு நூலானது எளிமைப்பண்பு ஒன்றுமட்டுமே பெற்றிருப்பின், பாமர மக்கள் மட்டுமே அதனைப் போற்றுவர்; அதன்கண் அறிஞர்கள் வியந்து சுவைத்து மகிழத்தக்க அருமைப்பண்பும் அமைந்திருத்தல் வேண்டும்.

''வித்தகப் பொருளின் மாட்சி,
வியத்தகு சொல்லின் ஆட்சி,
மெய்த்திறம் திட்பம் நுட்பம்
விளக்கம்மற் றியாவும் மேவி,
உய்த்துணர் **எளிமைப்** பண்பால்,
உணர்வரும் **அருமை** மாண்பால்,
தித்திக்கும் பாடல் தானே,
சிறந்தநற் கவிதை ஆகும்!''

ந.ரா.மு.

என்றபடி, ஒவ்வொரு நூலுக்கும் சொல், சொல்நடை முதலியவற்றில் எளிமைத் தன்மையும், பொருளின் திட்பம்-கருத்தின் நுட்பம்-அழகுற விளக்கும் திறன் முதலியவற்றில் அருமைப்பாடும், இன்றியமையாதன. அருமையும் எளிமையும் ஒருங்கே அழகுற அமைந்த கவிதை அல்லது நூல் தான், மிகவும் சிறப்புடையதாகும். நமது ஒப்புயர்வற்ற திருக்குறள் நூலின்கண், இவ்விரு பெரும் பண்புகளுமே செவ்வி தின் அமைந்து திகழும் சிறப்பினை,

''ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி,
வேதப் பொருளாய் மிகவிளங்கித்—தீதகற்றி
உள்ளுதொறும்உள்ளுதொறும் உள்ளம்
உருக்குமே,
வள்ளுவர் வாய்மொழி மாண்பு''

எனவரும் திருவள்ளுவமாலைச் செய்யுள் இனிது உணர்த்துதல் காணலாம். திருக்குறள் எத்துணைப் பொருள் நுணுக்கம் வாய்ந்த அருமைப்பாடு உடையதாகத் திகழ்கின்றது, என்பதனை விளக்குதற்கு, இங்கு இரண்டொரு சான்றுகளை மட்டுமே காண்டல் அமையும்.

### மறைமலை அடிகளார்

இந்நூற்றாண்டில், தமிழகப் புலமை வானில் ஓங்கியுயர்ந்து, ஒருபெரும் ஞான ஞாயிறு எனப் பேரொளி வீசித் திகழ்ந்து வைகியிருந்து, அண்மைக்காலத்தில் (கி.பி. 1876-1950) மறைந்த, அருட்டிரு மறைமலை அடிகளார், ஒப்புயர்வற்ற தமிழ்ப் பெருஞ்சான்றோராவர். தமிழ், ஆங்கிலம், வடமொழி என்னும் மும்மொழிகளிலும், ஆழ்ந்து நுணுகி முதிர்ந்த பெரும்புலமை மிக்கவராக, மறைமலை அடிகளார் விளங்கியிருந்தார். ''தென்சொற் கடல்கடந்து, வடசொற்கு எல்லை தேர்ந்து, ஆங்கிலத்தின் கரை கண்டவர்'' என்று நாம் ஒரு வகையில் அடிகளாரைக் குறிப்பிடுதல் பொருந்தும். திருத்தக்க தேவர் சீவக சிந்தாமணியில் பாடுமாறுபோல, ''நாமகள் நலத்தையெல்லாம் நயந்துடன் பருகித் திகழ்ந்தவர்'' அடிகளார் எனலாம்.

''யாவதும்
கற்றோர் அறியா அறிவினர்; கற்றோர்க்குத்
தாம் வரம்பு ஆகிய தலைமையர்''

எனத் திருமுருகாற்றுப்படையில், ஆசிரியர் நக்கீரனார் பாடிய வரிகள், அடிகளார்க்கு மிகவும் ஏற்புடையனவாகும். சிலப்பதிகாரத்தில் ''இமிழ் கடல் ஞாலம் முழுவதும் விளக்கும் தமிழ் முழுது அறிந்த தலைமையர்'' என இளங்கோவடிகள் பாடிய வரிகளும், அடிகளார்க்குப் பெரிதும் பொருந்தி நிற்கும்.

செந்தமிழ்த் தென்றல் **திரு. வி. கலியாண சுந்தரனார்** அவர்கள், ''மறைமலை ஒரு பெரும் அறிவுச் சுடர்; தமிழ்நிலவு; சைவவான். தமிழே சிவமாகவும், சிவமே தமிழாகவும் அடிகளுக்குத் தோன்றுகின்றன என்று யான் கருதுகின்றேன். இரண்டையும் ஒன்றாகக் கண்டவர் திருஞானசம்பந்தர். திருஞானசம்பந்தரிடத்து மறைமலை அடிகள் கொண்ட காதற்கு ஓர் அளவில்லை. தென்னாடு பன்னெடுங்காலம் தன்னை மறந்து உறங்கியது. அவ்வுறக்கம் போக்கியபெருமை மறைமலை அடிகளுக்கு உண்டு'' என்கின்றார். அம்மட்டோ! ''மறைமலையாரின் தமிழ்ப்புலமையும், வடமொழிப்புலமையும், ஆங்கிலப் புலமையும், ஆராய்ச்சியும், பேச்சும், எழுத்

---

(3) "The Tamil words that are more than seven thousand years old have not undergone any change in the mouths of the latter. The sacred KURAL written two thousand years ago, is intelligible even now to an illiterate rustic. Does not this indicate the great vitality of Tamil?''

—Maraimalai Adigal.

(4) "They shall be accounted poet-kings
who simply tell the most heart-easing things''.

—John keats

தும், தொண்டும் தென்னாட்டை விழிக்கச் செய்தன. தென்னாடு அடிகளால் விழிப் புற்றது என்று மண்ணும் முழங்கும்; மரமும் முழங்கும். அடிகள்பேச்சு, பல பேச் சாளரைப் படைத்தது; எழுத்து, பல எழுத் தாளரை ஈன்றது; நூல், பல நூலாசிரியன் மாரை அளித்தது. 'அடிகளே தென்னாடு தென்னாடே அடிகள்' என்று கூறல் மிகையாகாது'' என்றும்; ''அற்றை நக்கீர னாரும், பிற்றைச் சிவஞான முனிவரும், இற்றை மறைமலை அடிகளார் ஆகத் திரண்டு ஓர் உருக்கொண்டு வந்துள்ளனர்'' என்றும்; செந்தமிழ்த்தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்களே புகழ்ந்து வியந்து போற்றிச் சிறப்பிப்பாராயின், மறைமலை அடிகளார் மாட்சிமை எத் தகையதென்று, நாம் எண்ணியுணரலாம்.

தமிழில் இலக்கணம், இலக்கியம், தருக் கம், தத்துவம், கவிதை, உரைநடை, வர லாறு, கல்வெட்டு, உரைவரைதல், மறுப் பெழுதுதல், மொழிபெயர்ப்புச் செய்தல், புதினம் புனைதல், நாடகம் இயற்றல் முத லிய பற்பல துறைகளிலும், அடிகளார் தமது அறிவு இலச்சினைகளைப் பொறித் தருளியுள்ளார். ஆலிவர் கோல்டுஸ்மித் என்னும் அறிஞரைப் பற்றிச் சாமுவேல் ஜான்சன் என்பவர் கூறியதுபோல், அடி களார் ''தாம் தொட்ட எந்தத் துறையினை யும், அழகுபடுத்திப் பொன்வண்ணம் ஆக் கினார்; அவர் ஒருதேவனைப் போல எழுதினார்; இனிய கிளியைப் போலப் பேசி னார்.'' (He touched nothing which he did not adorn; he wrote like an angel and talked like sweet poll"). மெக்காலே பிரபுவைப் பற்றி, வில்லியம் மாக்பீஸ் தாக்கரே என்பவர் குறிப்பிடுவதுபோல, அடிகளாரும் ''ஒரு சிறு சொற்றொடர் அமைப்பதற்குக் குறைந் தது இருபது நூல்களை நுண்ணிதின் ஆராய்ந்தார். இயற்கை எழிற் புனைவு உரையாக ஒரு வரி எழுதுவதற்குக் குறைந் தது நூறு கல் தொலைவு பயணம் செய் தார்(5)'' எனலாம்.

தமிழில் முதன் முதலில் இக்கால ஆராய்ச்சி நெறி முறைகளைத் தழுவி, அரிய பெரிய நூல்கள் இயற்றியவர் அடி களாரே யாவர். இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரேயே, அடிகளார் முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, பட்டினப் பாலை ஆராய்ச்சி, குறிஞ்சிப்பாட்டு ஆராய்ச்சி, திருக்குறள் ஆராய்ச்சி, சிவ ஞானபோத ஆராய்ச்சி, சாகுந்தல நாடக ஆராய்ச்சி என்பன போன்ற ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டிருத்தல், அடிகளா ரின் நுண்மாண் நுழைபுலத்தினை விளக்கப் போதியதாகும். அடிகளாரின் ஆராய்ச்சி நூல்களும் கருத்துக்களும், பழமை நலமும் புதுமை எழிலும் பொலிந்து, பயில் வார்க்குப் பெருநலம் பயப்பனவாகும்!

(5) ''To write a line of description he travelled hundred miles, to write a single sentence he consulted atleast twenty books !''

மறைமலை அடிகளார் அஞ்சாத நெஞ் சுடைய சிந்தனையாளர்; மூலமுதல் முன் னோடியான ஆராய்ச்சி அறிஞர்; முன் னைய பிழைக் கொள்கைகளைக் கடிந்து களைந்தொழித்த சீர்திருத்தப் புரட்சி நெறிச் செம்மலார்; அவர்தம் நூல்கள் ஒவ்வொன்றும் ''ஆயிரம் அறிஞர்களைச் சிந்திக்கச் செய்யும்; பதினாயிரம் நாவலர் களைப் பேசவைக்கும்; குறைந்தது ஒரு நூறாண்டுக் காலம் ஆற்றல் மிக்க எழுத் தாளர்களை எழுதுமாறு ஊக்கி இயக்கு விக்கும் என்பது திண்ணம்(6)''.

தனித்தமிழ் இயக்கத் தந்தை!
சைவசித் தாந்தச் சான்றோர்!
முனைத்தநற் கொள்கை வீரர்!
மும்மொழிப் புலமை வேந்தர்!
மனித்தருள் தெய்வம் போன்ற
**மறைமலை அடிக ளார்தம்**
எனைப்பல சிறப்பும் போற்றி,
இனிதவர் நெறிநின் றுய்வாம்!

—ந. ரா. மு.

என்று, அவ்வப்போது அடிகளாரை நினைவு கூர்ந்து போற்றித் துதிப்பது எனக்கு வழக்கம். அடிகளார் வாழ்ந்திருந்த பல்லவ புரம் மாளிகைக்கு அவ்வப்போது சென்று கண்டு, அவரைப் பணிந்து வணங்கி, அவர் தம் அன்பும் ஆசியும் பெற்ற எளிய இனிய மாணவனாக இருக்கும்பேறு எனக்கு வாய்த்திருந்தது. அடிகளார்பால் சென்று தரிசித்து, அவர்கள்பால் நான் கேட் டுணர்ந்த அரிய பெரிய அறிவுரைகள், அரு ளுரைகள் மிகப்பல. அடிகளார்பால் யான் கேட்டுணர்ந்த திருக்குறள் தொடர்புடைய இரண்டொரு செய்திகள் (Anecdotes) பற்றிமட்டும், ஈண்டுக் குறிப்பிடுதல் சாலும்.

**'' கற்றபின் நிற்க ''**

மறைமலையடிகளார் இயற்றியுள்ள ஆராய்ச்சி நூல்கள் பலவற்றுள், ''தென் புலத்தார் யார்'' என்பது ஒன்று. அது வடிவாற் சிறியதாயினும் பொருளாற்பெரி யது. மிகவும் சிறந்தது. அதன்கண் ''தென் புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை'' என்னும் திருக்குறளில்வரும் 'தென்புலத் தார்' என்னும் சொல்லுக்குப் பரிமேலழ கர், பிதிரர் எனப் பொருள் உரைத்து, ''பிதிரராவார் படைப்புக் காலத்து அய னாற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி'' என விளக்க உரை வரைந்திருப் பதை, அடிகளார் மறுத்து எழுதியுள்ளார். ஆதலின் அதனை நினைந்து, ஒருமுறை அடிகளாரிடம் தங்களுக்குப் பரிமேலழ கரைப் பிடிக்காதா? அவர்மீது உங்களுக்கு வெறுப்பா? என்று, யான் என் சிறுபிள்ளைத் தன்மையால் விளையாட்டாக வினவினேன்.

(6) "His works are sure to set a thousand minds a-thinking, ten thousands a-talking, and atleast a century of able pens a-writing''.

—Prof. M. S. Purnalingam Pillai.

அப்போது அடிகளார் புன்னகை பூத்த முகத்தினராய், ''அற்றன்று, ஏதோ ஒரு கருத்திற்காக ஓரிடத்தில் ஒருவரை மறுத்தால், அவர்மீது வெறுப்பு என்று எங்ஙனம் கொள்ளலாம்? பரிமேலழகர்பால் எமக்கு மிக்க மதிப்பும் ஈடுபாடும் உண்டு. தமிழ்நூல் உரையாசிரியர்களில் அவர் தலைசிறந்தவர். யாம் அவருடைய உரையினை எம் இளமைக்காலத்தில் மிகவும் ஊன்றிக் கற்று மனப்பாடம் செய்து பயின்றுள்ளேம். எம்முடைய தனித்தமிழ் உரைநடை வளத்திற்குப் பரிமேலழகரின் உரைநடை பெரிதும் வழிவகுத்துக் காட்டித் துணை புரிந்துள்ளது. நுட்பமும் திட்பமும் அமைய உரை எழுதுவதில் பரிமேலழகர் இணையற்றவராவர். சிவப்பிரகாசர், சிவஞானமுனிவர் போன்ற மாபெருஞ் சான்றோர்கள் எல்லோரும்கூட, பரிமேலழகரின் உரையினை நுணுகிஆழ்ந்து கற்று மதித்துப் போற்றியுள்ளனர்'' என்றெல்லாம், அடிகளார் விவரித்து உரைத்தார்.

அப்போது 'கற்க கசடறக் கற்பவை, கற்றபின் நிற்க அதற்குத்தக' என்னும் குறளைக் கூறுமாறு பணித்து, அதன்கண் வரும் 'கற்றபின்' என்னும் தொடரைச் சுட்டிப் பொருள் யாது? என வினவினார். அந்தோ! யான் என் அறியாமையால், கற்ற-படித்த, பின்-பிறகு என்று பொருள் கூறினேன். 'எளியபொருள்தானே இது? இதுகூடவா எனக்குத் தெரியாது?' என்பது போல, யான் மிகவும் பெருமிதமாக, அத்தொடருக்குப் பொருள் கூறினேன். பேரறிஞர் கா. சுப்பிரமணியபிள்ளை ;பேராசிரியர் மு.வரதராசனார் முதலிய பலரும், அவ்வாறே உரை எழுதியிருக்கின்றனர். அதனாலேயே அவ்வாறு நான் துணிவாகத் தயங்காது கூறினேன். ஆனால் அடிகளாரோ, அங்கேயிருந்த பரிமேலழகர் உரைநூலை எடுத்து வரச்சொல்லி, அதில் அவ்வுரைப் பகுதியைப் படிக்குமாறு பணித்தருளினார்.

அதன்கண் 'கற்றபிறகு' என்று இல்லாமல், '**கற்றால்**' என்று உரை வரையப்பெற்றிருந்தது. 'கற்ற பிறகு' எனக் கொள்ளின், அஃது இருசொற்களாலாகிய பெயரெச்சம் என்றும்; 'கற்றபின்' என்பது அடுத்துள்ள 'நிற்க' என்னும் வினைச் சொல்லைக் கொண்டு முடிந்திருத்தலால், அஃது ஒருசொல் நீர்மைத்தாய வினையெச்சம் என்றும்; அடிகளார் விளக்கினார். 'கற்ற பிறகு' எனக் கொண்டால் உரையில் இருவகையான குற்றங்கள் நேரும். அவற்றை விலக்குவதற்கே, பரிமேலழகர் '**கற்றால்**' என வினையெச்சமாக வைத்து உரைசெய்தார். 'உண்ட பிறகு வருவேன்' என்றால், உண்ணுதலாகிய தொழில் முடிந்து, வருதல் ஆகிய தொழில் நிகழும். அதுபோலக் 'கற்றபிறகு நிற்க' என்றால், கற்றலாகிய தொழிலுக்கு ஒரு முடிவுளது போன்ற குறிப்பு அமையும். 'என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு?' என்று அருளிச் செய்திருப்பதனால், திருவள்ளுவரின் கருத்துப்படி, கல்விக்கு ஒரு முடிவு இல்லை. ஆதலின் அவர்தம் திருவுள்ளக் கருத்திற்கு மாறாகக், கல்விக்கு ஒரு முடிவுண்டுபோலும் என்னும் குறிப்பு அமையக் 'கற்றபிறகு' என உரை எழுதப் பரிமேலழகர் விரும்பிற்றிலர்.

மேலும் 'கற்றபிறகு நிற்க' என்றால், கற்கும்போது நிற்றல் வேண்டா; பல ஆண்டுகள் கற்றுக் கழித்துக் கல்வியை முடித்த பின்னரே நிற்றல் சாலும் எனவும், கருத்துக் கொள்ள இடம் அமையும். இவ்விரு காரணங்களுக்காகவே, 'கற்றால்' என வினையெச்சமாக வைத்துப் பரிமேலழகர் உரை வகுத்தார். இத்தகைய திட்ப நுட்பம் மிக்க, சிறந்த உரையாசிரியர் பரிமேலழகர்என்று அடிகளார் அறிவுறுத்தியருளினார்.

## கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார்

பிறிதொரு சமயம், வேறு ஏதோபொருள் பற்றி உரையாடிக் கொண்டிருந்த போது, ''நூலாசிரியன் வழங்கும் சொற்களுக்கு உரிய பொருள் தெரியாமலே உரைவரைபவர் சிலர்;' சொல்லுக்கு மட்டும் பொருள் வரைந்து செல்வோர் சிலர்; சொல்லையும் அதற்குரிய பொருளையும் கடந்து சென்று, அவற்றிற்கு அப்பாற்பட்டு நிற்கும் ஆசிரியனின் உள்ளக் கருத்தையும் ஊடுருவி உணர்ந்து உரைவகுப்போர் மிகவும் அரியர். பரிமேலழகர், வெறும் சொல்லுக்கு மட்டுமே பொருள் எழுதிச் செல்பவர் அல்லர்; சொல்லின் வழியாக ஆசிரியனின் உள்ளக் கருத்தினை உன்னி ஓர்ந்துணர்ந்து உரைசெய்பவர்'' என அடிகளார் குறிப்பிட்டார்.

அதற்கு மேற்கோளாகக் ''கற்று ஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர், மற்றுஈண்டு வாராநெறி,'' எனவரும் திருக்குறளில், 'கற்று' என்பதற்கு 'நூல்களைப் படித்து' என்று பொருள் எழுதாமல், பரிமேலழகர் ''உபதேச மொழிகளை அனுபவம் உடைய தேசிகர்பாற் கேட்டு'' என எழுதியிருப்பதன் நுட்பத்தினை விளக்கினார். 'கற்று' என்னும் சொல், 'கேட்டு' என நேரே பொருள்படாதாயினும் ,பரிமேலழகர் அங்ஙனம் எழுதியதற்கு ஆழ்ந்ததொரு காரணம் உண்டு. ''எத்துணைய வாயினும் கல்வி இடமறிந்து உய்த்துணர்வு இல்லெனின் இல்லாகும்'' என்றபடி, மூலத்தின் சொல் '**கற்று**' என்றிருப்பினும், அதற்குப்பொருள் 'கேட்டு' என்பதே என்று பரிமேலழகர் உய்த்துணர்ந்து எழுதினார். அங்ஙனம் அவர் உய்த்துணர்தற்குத் துணைபுரிந்தது ''மெய்யுணர்வு'' என்னும் அதிகாரத் தலைப்பேயாகும்.

மெய்யுணர்வானது, வெறும் நூற்கல்வியினால் வருவதன்று. ''கடல்நீரைப் பருகப் பருக நீர்வேட்கை மிகுமேயன்றித்

தணியாது; அதுபோல வறிதே நூல்களைக் கற்கக் கற்க, ஐயங்கள் பெருகுமேயன்றிக் குறையமாட்டா. நூல்கள் பலவற்றைக் கற்றும் தெளிய முடியாத ஐயப்பாடுகளை, நல்லாசிரியன் ஒருவன்கூறும் எளிய சிறிய சொல் ஒன்றே, இனிது போக்கிவிடக் கூடும்'' என்று திருக்களிற்றுப்படியார் என்னும் சிறந்தொரு, ஞானநூல் கூறுகின்றது. ஓதியோர்க்கு அகப்படாப் பொருளை ஓர்விப்பன, அருளாசிரியரின் உபதேச மொழிகளேயாகும். ''என்னை ஓர் வார்த்தையுட்படுத்திப் பற்றினாய்; காணாதன எல்லாம் கண்டேன்; கேளாதன எல்லாம் கேட்டேன்'' எனவரும் மணிவாசகர் போன்ற அருளாளர்களின் உரையால் இவ்வுண்மை வலியுறும்.

இதனாலேயே மெய்யுணர்வு என்னும் தலைப்பிற்கு ஏற்ப, ஆசிரியர் பரிமேலழகர், 'கற்று' என்னும் சொல்லுக்கு 'நூல்களைப் படித்து' என்று எழுதாமல், ''உபதேச மொழிகளைக்கேட்டு'' என்று உரை வரைந்தார். கேட்பன எல்லாம் மெய்யுணர்வு விளைவிக்காது ஆதலின், ''அனுபவம் உடைய தேசிகர்பால் கேட்டு'' என்று, கேட்பதற்கும் கேட்பிப்பதற்கும் உரிய தகுதியுடையவர்களையும் இத்தகையர் எனச் சுட்டி உணர்த்தினார். இதன்கண்ணும் 'அறிவுடையவர்கள்பால்' என்னாது, 'அனுபவம் உடையவர்பால்' என்றது உற்று நோக்கி உணரற்பாலது! மேலும் 'அனுபவம் உடைய அறிஞர்பால்' என்னாது 'தேசிகர்பால்' என்றது ஆழ்ந்து சிந்தித்தற்குரியது. அகத்தின் அழகு முகத்தில் தெரியவும், உள்ளத்தில் நிகழும் உண்மை ஒளி வாக்கில் திகழவும் தெய்விகத் தேசு மிக்க ஞானச் சான்றோர்களே, இங்குத் 'தேசிகர்' எனப்பட்டனர். அறிவே அனுபவமாகக் கைவரப்பெற்ற ஆன்றோர்கள்பால் பிறர் மாட்டுக் காணப்பெறாத தேசு (தேஜஸ்) என்னும் அருள்ஒளிநலம்மிக்குத் தோன்றுமாதலின், அவர்களையே அணுகிக் கேட்க என்று வலியுறுத்துதற்குத் 'தேசிகர் பால் கேட்டு' என்று எழுதியிருக்கும் மாட்சி பெரிதும் போற்றுதற்குரியது. மற்றும் இக்குறளில் 'ஈண்டு' என்னும் சொல் இருமுறை வந்துள்ளது. அவற்றுள் முதலதற்கு 'இம் மக்கட் பிறப்பின் கண்ணே' என்றும்; பின்னையதற்கு 'இப்பிறப்பின் கண்' என்றும் எழுதியுள்ள உரைநுட்பமும் உன்னித்து உணர்தற்குரியன.

''இறையியற் கல்லூரி ஒன்றில், மாணவர் குழு ஒன்று, மிகவும் கற்றுணர்ந்த சிறந்த பேராசிரியர் ஒருவரை விவிலிய நூலில் 'மேய்ப்பரின் பாடல்' (Psalms, 23) என்பதனைப் படிக்குமாறு வேண்டிக் கொண்டது. அவர் அதனை உணர்ச்சியோடும், அழகிய கருத்தழுத்தத்துடனும் படித்தார். பிறகு, ஓய்வுபெற்ற முதிய மதகுரு ஒருவரை, அதே பாடலை மீண்டும் படிக்குமாறு, யாரோ ஓர் அன்பர் வேண்டிக் கொண்டார். அதே பாடலின், அதேசொற்களை, அவர் மிகுந்த பக்தியுடனும், பொருளுணர்ச்சியுடனும் படித்தபோது, அவருடைய இனிய முகமானது உள்ளுணர்வு பொங்கப் பேரழகுடன் ஒளி வீசித் திகழ்ந்தது. அவர் அப்பாடலைப் படித்து முடித்தபோது, அந்த அறையில் இருந்த அனைவருடைய கண்களும் காதலாகிக் கண்ணீர் மல்கிக் கசிந்து நின்றன. அப்போது மாணவர்களில் ஒருவன் பேராசிரியரை அணுகி, 'தாங்கள் மிகப்பெரிதும் கற்றுணர்ந்த மேதையாக இருந்தும், இத்தகைய ஒரு சிறந்த பேருணர்ச்சியினைத் தங்களால் ஏன் விளைவிக்க முடியாமற் போயிற்று?' என்று பணிவுடன் வினவினான். அதற்கு அந்தப் பேராசிரியர், பின்வருமாறு விடையளித்தார்: ''ஆமாம்! என்னால் இயலவில்லைதான். காரணம் நான் நமது விவிலிய நூலைப் படித்திருக்கின்றேன்: நமது மேய்ப்பரைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் தெரிந்திருக்கின்றேன்; ஆனால் நமது நண்பரோ, நம்மேய்ப்பரையும் நன்கினிது நேரே தெரிந்துகொண்டிருப்பதுடன், அவருடன் பல்கால் பழகிப் பயின்றுணர்ந்தும் இருக்கின்றார் என்று, உண்மையாகவும், பணிவாகவும் விடைஅளித்தார்''.(7)

இச்செய்தி, பரிமேலழகர் ''அனுபவமுடைய தேசிகர்பால் கேட்டு'' என்று எழு

---

(7) A group of students in a Theological college asked a very learned professor to read the Shepherd's psalm (ps, 23). He read it with feeling and beautiful emphasis. Then some one called for a retired Minister to come up and repeat the 23rd psalm. His sweet face shone with an inner light as he said the same words with reverence and meaning. When he had finished, there was not a dry eye in the room. Afterwards one of his students asked the Professor why he, with his great learning, could not produce the profound effect. The Professor was honest and humble in his reply—'Well' he said to the young man 'I have studied the Bible and I know all about the shepherd, but you see, our friend knows the Shepherd.''

—Christianity and the Modern World,
The Hidden Wisdom in the Holy Bible, P. 21

(8) " Age cannot wither her: nor custom stale
Her infinite variety: other women cloy
The appetite they feed: but she makes hungry
Where most she satisfies ''

—William Shakespeare,
Antony and Cleopatra

திய அரிய பெரிய உரையின் சிறப்பினையும் பொருத்தத்தினையும், தெளிவுற உணர்த்துதல் காணலாம் என்றும், மறைமலை அடிகளார் மேலும் நுண்ணிதின் விளக்கியருளினார். இத்தகைய அரிய பெரிய நுண்ணிய உரை விளக்கங்கள் எல்லாம், திருக்குறள் ஓதற்கெளிதாய் ,உணர்தற்கு அருமையாக விளங்கி, உள்ளுதொறும் உள்ளுதொறும் உள்ளம் உருக்கும் சிறப்புடையதாதலை, விளக்கிநிற்கும் வியத்தகு சான்றுகள் ஆகும்.

### முடிவுரை

இங்ஙனமெல்லாம் மிகச் சிறந்த முறையில், தெய்வப்புலவர் திருவள்ளுவர் பெருமானால், இயற்றப்பெற்றமை பற்றியே, ஆழ்வார்கள் நாயன்மார்கள் போன்ற அருட்பெரும் சான்றோர்களும், அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப்போந்த அரும்பெரும் கவிஞர்களும் பிறருமெல்லாம், திருக்குறளின் கருத்துச் சொற்பொருட்சுவை நலங்களைப் பெரிதும் போற்றித் தத்தம் பாடல்களில் அமைத்து மகிழ்வாரா யினர். ஆழ்வார்களும் நாயன்மார்களுமே திருக்குறளை வியந்து போற்றியுள்ளனர்எனின், திருக்குறளின் பெருமையினையும், அதனை இயற்றியருளிய திருவள்ளுவரின் மாட்சிமையினையும், நாம் அளவிட்டுரைத்தல் இயலுமோ! திருவள்ளுவரின் மாட்சிமை உணர்ந்து, திருக்குறளைக் கற்று, அதன்வழி நின்று, நாம் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பெரும் பேறுகளையும் எய்தும் வகையில், வையகத்து வாழ்வாங்கு வாழ்ந்து நலமுற முயலுவோமாக!

(வெண்பா)

காலத்தால் வாடிக் கழியாது; பன்னலமார்
சீலத்தாற் குன்றாச் சுவைதிகழும்;-ஏலத்தான்
ஊட்டிப் பசிபெருக்கும்; ஓங்குதிரு வள்ளுவர்நூல்
மாட்சிக் கிணையுண்டோ? மற்று. 8

—ந. ரா. மு.

—oOo—

---

## திருவள்ளுவர்

திகழும் திருவள் ளுவர்தம் சிறந்த மதியின் இலச்சினையாய்,

நிகரின் றிலங்கு திருக்குறள் நூல், நின்று நிலவும் முழுதெனினும்,

பகவன் உண்மை நிறுவுதற்குப், பண்பின் ஆராய்ந் தவர்சொற்ற

அகர உவமை தான்ஒன்றே, அரிதின் அமைந்து சிறந்தோங்கும்!

## திருக்குறள்

திருக்குறள்போல் நீதிநூல், சிறந்துயர்தொல் காப்பியம்போல்

பொருத்தமிகும் இலக்கணநூல், சிவஞான போதம்போல்

சுருக்கமிகும் தத்துவநூல், தூயதிரு வாசகம்போல்

உருக்கமிகும் பக்திநூல், உலகினில்வேறு ஒன்றும்இல்லை!

—ந. ரா. முருகவேள்

---

# சக்தி தோத்திரங்கள்

(திரு. மு. அருணாசலம்)

தமிழில் மிகப் பழைய காலம் முதலாகத் தனியான சக்தி வழிபாடும் இருந்து வந்தது. பாலை நிலத்திற்குத் தெய்வம், கொற்றவை என்று பொருளிலக்கணம் வகுத்த காலத்தே, சக்தி வழிபாடுதான் இங்குக் கருதிச் சொல்லப்பட்டது. சிலப்பதிகாரத்தில், குன்றக்குரவை என்ற காதையிலுள்ள, 'ஆனைத்தோல்போர்த்து' என்பது முதலான வரிப்பாடல்கள், சக்தியின் துதிகளாக அமைந்தவை. திருமந்திரத்தில் நாலாம் தந்திரத்துள் பெரும்பகுதி சக்தியின் சிறப்பைக் கூறுவதாயிருப்பதும் அறியத்தக்கது. திருவெம்பாவையில் மாணிக்க வாசகர் ''பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை தன் பாதத் திறம் பாடி ஆடேலோர் எம்பாவாய்'' என்று பாடியிருத்தல், சிவபெருமான் சக்தியாக இருந்து அருள்புரியும் நிலையைத் தனியே குறித்துத் துதிப்பதாகும்.

இப்பாடல்களையன்றி, வேறுதனியே சக்தி தோத்திரமாக எந்தப் பண்டை நூலும் இல்லை. ஒன்பதாம் திருமுறையிலும், பதினோராம் திருமுறையிலும், முருகன் துதிகளும், விநாயகர் துதிகளும் காணப்படினும், சக்தி துதியாகத் தனிப் பிரபந்தங்கள் காணப்படவில்லை. பிற்காலத்தில் அம்பிகை தோத்திரமாக மிகப் பலவான நூல்கள் எழுந்திருக்கின்றன.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் இரண்டாம் குலோத்துங்க சோழனுக்குப் பிள்ளைத் தமிழ் பாடிய ஒட்டக்கூத்தர், அங்குக் காப்புப் பருவத்தில் காளிக்கும், சத்தமாதருக்கும் தனியான வணக்கம் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து சக்திக்குத் தனியாக வணக்கஞ் சொல்லுகின்ற மரபு புராணத்துள் எழலாயிற்று. சித்தாந்த சாத்திரமான சிவஞான சித்தியாரிலும், தனியான சத்தி வணக்கப் பாடல்கள் காணப்படுகின்றன. இன்னும் பிற்காலத்தில் குமரகுருபர சுவாமிகள், சிவப் பிரகாச சுவாமிகள், தாயுமானவர், சிதம்பர சுவாமிகள் போன்றோர் பிள்ளைத் தமிழ், இரட்டைமணிமாலை, பதிகம், கலிவெண்பா முதலான தனிப் பிரபந்தங்களைப் பாடி இருக்கிறார்கள். இவ்வாறு எழுந்த பிரபந்தங்கள் கணக்கில்லாதன.

எனினும், சிறப்பான தேவி தோத்திரப் பிரபந்தங்கள் பதினாறாம் நூற்றாண்டு தொடங்கியே எழுந்திருக்கின்றன. இந்த நூற்றாண்டில் பாண்டி நாட்டில் வீரசோழன் என்ற ஊரில் கவிராச பண்டிதர் என்ற பெரும் புலவர் ஒருவர் இருந்தார். இவர் வடமொழியில் ஆதி சங்கரர் செய்த சௌந்தரிய லகரி என்ற நூலைத் தமிழில் நூற்றுக்கு மேற்பட்ட விருத்தப்பாக்களால் மொழி பெயர்த்தார். இந்த நூல் தோன்றிய காலம் பதினாறாம் நூற்றாண்டின் இடைப்பகுதி, இதன் பின்னர் தமிழில் மிகப் பலவான நூல்கள் அம்பிகையின் தோத்திரமாகப் பாடப் பெற்றிருக்கின்றன.

**சௌந்தரிய லகரி :**

இப்பெயர் கொண்ட நூல், வடமொழியில் ஆதிசங்கரர் நூறு சுலோகங்களாகப் பாடியது. இத்தொடரின் பொருள், 'அழகின் பெருக்கு' என்பதாகும். அத்வைத நிரூபணம் செய்த சங்கரர் பிற்காலத்தில் உருவ வழிபாட்டின் அவசியத்தை உணர்ந்து பாடிய பல தோத்திர நூல்களில் இதுவும் ஒன்று. இவர் குழந்தையாக இருந்து சத்தியின் திருவுருவ அழகின் வெள்ளத்திலேயே தோய்ந்து பாடுகின்றார். இந்நூலை வீரைக்கவிராச பண்டிதர் என்பவர் சுமார் கி. பி. 1550இல் தமிழில் விருத்த யாப்பால் மொழிபெயர்த்தார். இது இரு பாகங்களாகி, முதல் பாகம் பாயிரம் ஆறுபாடல்களும், நூல் 40 பாடல்களும் கொண்டது. பிற்பகுதி 64பாடல்கள் கொண்டது. முற்பகுதி ஆனந்தலகரி என்றும், பிற்பகுதி சௌந்தரியலகரி என்றும் தமிழில் பெயர் வழங்கும். சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்நூலை அச்சிட்டோர் சௌந்தரிய லகரி என்ற ஒரு நூலாகவே இதைத் தமிழில் அச்சிட்டார்கள். தமிழ் நூல் இனிய செய்யுள் நடையில் அமைந்தது. இனிமையான சந்தச் சுவையும் பொருந்தியது. படிக்கப் படிக்க மனத்தை அம்பிகையின் திருவடியினிடத்து ஈர்த்துச் செல்வது; பாயிரப் பகுதியில் பண்டிதர் தமக்குப் பிரமாதிராயர் என்பவர், மொழி பெயர்க்கத்துணை செய்தார் என்று கூறுகிறார். நூலின் தொடக்கத்திலும் இறுதிப்பாடலிலும் ஆசிரியர் தமது பெயரைக் குறிப்பிடுகின்றார்.

முதற்பாகம் முழுமையும் தேவியின் பெருமையையும், அருளையும், அவள் இயல்பையும், அவளைத் தியானிக்க வேண்டிய முறைகளையும், ஆறாதாரத்துள் அவள் காட்சி கொடுக்கும் தன்மையினையும் விரித்துரைப்பது. 'சௌந்தரிய லகரி என்ற பெயருக்கு ஏற்ப, விநாயகர் வணக்கத்தில் தேவியை இவர் அபிராமி என்றே கூறுவது குறிப்பிடத்தக்கது. இரண்டாம் பாகத்தில் தேவியை 60 பாடல்களிலும் கேசாதிபாதமாகத் துதித்து, பலச் சுருதியோடு முடிக்கிறார்.

வசியம், மோகனம் முதலிய பொருள்களும் இதனுள் சொல்லப்பட்டுள்ளன என்பர். ஓரளவு சாக்த சமயத் தத்துவங்கள் இதனுள் காணப்படும். இந்நூலின் பாடல்கள் எண்சீர் விருத்தங்கள், எழுசீர், அறுசீர் விருத்தங்கள், கலிவிருத்தம், கொச்சகக் கலிப்பா முதலிய பலவகை யாப்பினால் அமைந்தவை.

பண்டிதர் மொழி பெயர்ப்பில் மூலத்தின் கருத்தை மனத்தில் வாங்கிப் புதிதாகப் பாடியிருக்கிறார். ஆகவே சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பாக இவர் நூலைக் கருத முடியாது. தமிழ் மரபுக்குரிய நயங்கள் பலவும் இவர் பாடல்களில் காணப்படும்.

பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல புராணங்களும், பிரபந்தங்களும் பாடிப் புகழ்பெற்றிருந்த சைவ எல்லப்ப நாவலர், இந்நூலுக்குச் சிறப்பான உரை எழுதியிருக்கிறார்.

**ஆனந்த மாலை :**

இந்த நூலும் சௌந்தரிய லகரி பாடிய கவிராச பண்டிதரே பாடியதாகப் பிரதிகளில் காணப்படுகிறது. பின்வரும் பாடல் ஆசிரியர் பெயரைக் குறிப்பிடும்.

கானம்பயிலாரக் கவிராச பண்டிதன்சொல்
ஆனந்த மாலைபடித்து ஆனந்த வாழ்வறி
வார்
வானம் புடைசூழ்ந்த வாரிநில மேழுலகும்
ஞானம் பரமகுரு நாதரிடத் தெய்துவரே

இந்நூல் 30 பாடல்கள்; கொச்சகக் கலிப்பா; பாடல் ஒவ்வொன்றும் 'ஆனந்த நாயகமே' என்று முடிவது. நூல் இறுதியில் 30 பாடல்களுக்கும் அடிவரவு கூறும் ஒரு தனிப்பாடல் உள்ளது. இந்நூல் முழுமையும் தோத்திரப் பாடல்களாக உள்ளது.

**வராகி மாலை :**

சத்தமாதரில் ஒருத்தியும் தேவியின் அம்சமும் ஆகிய வராகியைத் துதிக்கின்ற பழைய சிறு நூல். இதையும் கவிராச பண்டிதரே செய்தார் என்றும் சொல்வர். அது பொருந்தாது. இந்நூல் முப்பத்திரண்டு கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் கொண்டதாக அச்சிடப்பட்டுள்ளது. ஏட்டுப் பிரதியில் பின்னும் பல பாடல்கள் காணப்படுகின்றன. இவற்றை வசியம் முதலான அட்ட கருமங்களுக்குரிய மந்திரங்களாக அனேகர் மனப்பாடஞ் செய்து உச்சரிக்கும் பழக்கமுடையவர்களாக இருக்கின்றார்கள். அட்டகருமங்களாவன —வசியம், ஆகருஷணம், மோகனம், உச்சாடனம், தம்பனம், வித்துவேஷணம், பேதனம், மாரணம்.

இவை ஒவ்வொன்றுக்கும் பல பாடல்கள் இங்கு உள்ளன. பாடல்கள் நல்ல நடையில் அமைந்துள்ளன; எனினும் பகைவரை வீழ்த்துவதே நோக்கமாய்க் கொண்டவை. பாடல்கள் பலவற்றில் வராகி என்ற பெயர் பயில்கின்றது. பல பாடல்களில் 'வராகி குலதெய்வமே' என்ற முடிபையும் காணலாம். அபிராமி என்ற பெயரும் பாடல்களில் காணப்படுகிறது. சிறப்பான இலக்கியம் பாடிய கவிராச பண்டிதர், வசிய மந்திரம் ஒத்த இந்நூற் பாடல்களைப் பாடினார் என்பது ஏற்க ஒண்ணாதது.

**சக்தி கவசம் :**

நெடுங்காலமாக, விநாயகரகவல் முதலான சில சிறு துதிப்பிரபந்தங்கள் ஒரு தொகுப்பாக வழங்கி வருகின்றன. அவை கந்தர் கலிவெண்பா, சிவகவசம், சத்தி கவசம், இலக்குமிதோத்திரம் முதலாயின. அவற்றுள் சத்தி கவசமொன்றும் இங்குக் கருதத்தக்கது. சத்தி கவசம் என்ற பெயரால் வழங்குவது, அதிவீரராம பாண்டியர் பாடிய காசிகாண்டத்துள் எழுபத்திரண்டாம் அத்தியாயத்தின் தொடக்கப் பகுதி 12 பாடல்கள். இது துர்க்கன் என்ற அசுரனது எருமைக்கடா வடிவையழித்து, அவனைத் தேவியார் கொன்றபோது, முகுந்தன் முதலான அமரர்கள் பாடித் துதித்தது. உடலின் ஒவ்வொரு பாகத்தை யும் அம்பிகையின் ஒவ்வொரு கூறு காப்பதாக என்று கூறித் துதிப்பது.

அங்கையிற் கரகந் தாங்கும்
பிரமாணி அருளி னோடும்
துங்கமென் சென்னி காக்க;
வயிணவி துகளி லாகம்
எங்கணும் காக்க; செய்ய
ஏந்தெழில் உருத்தி ராக்கம்
தங்குமெண் திசையும் அன்பு
தழைத்திட இனிது காக்க'

என்பது முதல்பாட்டு. இதுபோல 12 பாடல்களிலும் சத்திகள் சொல்லப்பட்டுள்ளனர். இப்பாடல்கள் மிகப் பெரிதாகிய புராணத்தில் ஒரு பகுதி என்பது நினைவில் இருக்கத்தக்கது. இதுபோல சிவன் விநாயகர் முருகன் **ஆகியோர்க்கும் கவச**

நூல்கள் உள்ளன. சத்திகவச ஆசிரியர் அதிவீரராம பாண்டியர், காலம் கி. பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.

அம்பிகை மாலை :

மதுரை மீனாட்சியம்மையை 'மதுரா புரியம்பிகையே' என்று சொல்லித் துதிக் கின்ற 32 கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் கொண்டது. செய்தவர் குல சேகர பாண்டியன் என்று, சிறு துதிப் பாடல் கூறும். குலசேகர பாண்டியன் என்ற பெயர் 16ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் தென்காசியில் இருந்து ஆட்சி புரிந்த அதிவீரராமனும், அவன் தமை யன் புதல்வர்களான வரகுணராமனும், வரதுங்க வாமனும் தரித்துக் கொண்ட பொதுவான பட்டப் பெயராகும். இப் பெயர் இவ்விடத்தில் பிரமோத்தர காண் டத்தைத் தமிழில் பாடிய வரதுங்க ராம னுக்கு உரியது என்று கருதலாம். இவன் பட்டமேற்றது கி. பி. 1588. ஆகவே அம்பிகை மாலையின் காலம் 16-ஆம் நூற் றாண்டின் இறுதியாகும்.

அபிராமியம்மை பதிகம் :

அபிராமி அந்தாதி பாடிய அபிராமி பட்டர் பாடியனவாகச் சில பதிகங்கள் வழங்குகின்றன. அவை விநாயகர், பதிகம், அமுதகடேசுவரர் பதிகம், காலசம்மார மூர்த்தி பதிகம், அபிராமியம்மை பதிகம், காலசம்மாரமூர்த்தி பின்முடுகுவெண்பா என்பன. இவையாவும் திருக்கடவூர்த் தலத் துக்குரியவை. இவற்றுள் அபிராமியம்மை பதிகம் இரண்டு. ஒவ்வொன்றும் 14 சீர் ஆசிரிய விருத்தம் பத்துக் கொண்டது.

கலைஞான தீபம் :

புவனாம்பிகை கலைஞான தீபம் என்று வழங்குவது, 10 கட்டளைக் கலித் துறைப் பாடலைக் கொண்டது. ஆசிரி யர் கவிராச சுந்தரன் என்று தெரிகிறது. புவனாம்பிகை, உலகம்மை, உலகீன்றவள் என்று பாடுகின்றார். சுவையுடைய பாடல்கள்; நூல் முழுமையும் வாமமார்க் கம் எனப்படும் தந்திரமார்க்கச் செய்திகள் பொதிந்துள்ளன. இனிய தமிழில் இயன் றவை. பல இடங்களில் தேவியை அபி ராமவல்லி என்றே வருணிக்கிறார். மிகப் பல தொடர்கள் அபிராமி அந்தாதித் தொடர்களாயுள்ளன. மந்திரம், சக்கரம், கலாந்தம் முதலான ஆறந்தம் முதலிய பொருள்கள் சொல்லப்பட்டுள்ளன.

சவுந்தரி அந்தாதி :

பலவகை விருத்தங்களாலும் சந்தப் பாக்களாலும் ஆன 100 பாடல்கொண்ட பிரபந்தம் ; பவளக்கொடியடிகள் பாடிய தாக அச்சிடப் பெற்றுள்ளது. அந்தாதி யாக மண்டலித்து வருவது; பெரும் பான்மை ஏழுசீர், அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்கள்; சிறுபான்மை கொச் சகக் கலிப்பாவும், பதினான்கு சீர் விருத்தம் வரையும் உள்ளன. இனிமையான சந்தம். பல பாடல்கள் திருப்புகழ் போன்ற சந்தக் குழிப்புக் கொண்டவை. மிகப் பல பாடல் களில் உமையென்று கூறி அம்மையைத் துதிக்கின்றார். தலச்சார்பின்றிச் சவுந்தரி யென்று சில பாடல்களில் அம்பிகையைத் துதிக்கின்றார். சம்பந்தர் வரலாறு இடையே குறிப்பிடப்பட்டுள்ளது. நூலுக் குக் காப்புச் செய்யுளோ, சிறப்புப் பாயிர மோ, பலச் சுருதிப்பாடலோ இல்லை. ஆசிரியர் பற்றி ஒன்றும் தெரியவில்லை. இதன் காலத்தை அறிவதற்கான எக் குறிப்புக்களும் நூலில் காணப்படவில்லை. 18-ஆம் நூற்றாண்டாயிருக்கலாமென்று தோன்றுகிறது.

—oOo—

## திருக்குறள்

இன்பொளிர் வேனிற் காலத்
தெழில்மலர், கனிகள், மற்றும்,
மன்பெருங் கவர்ச்சி மிக்க
மகிழ்ச்சிநல் விருந்தூண், மண்விண்,
என்பவை எலாம்சேர்ந் தொன்றைத்
'திருக்குறள்' எனும்ஓர் பேரால்,
நன்றுற நவில்வேன்! யாவும்
நனிஅதில் அடங்கும் நன்றே!

—ந.ரா. முருகவேள்

## சாகுந்தலம்

"Would'st thou the young years blossoms
and the fruits of its decline,
And all by which the soul is charmed,
enraptured, feasted, fed,
Would'st thou the Earth and Heaven itself
in one sole name combine?
I name thee, O Sakuntala! and all
at once is said".

—GOETHE.

# தமிழ் மருத்துவ மாண்பு

திரு. டாக்டர் சிற்சபை, காஞ்சிபுரம்

காட்டில் வாழும் மிருகங்களும் பறவைகளும் உண்பதற்கேற்ற உணவு இவையென்பதையும், உண்ணத்தகாதன இவையென்பதையும் அறியும் ஓர் இயற்கை உணர்ச்சியைப் பெற்றிருக்கின்றன. அவற்றிற்கு நோய் வந்தால் அதனை நீக்கிக் கொள்ளும் திறன் அவைகளிடம் உண்டென்பது யாவரும் அறிந்ததே.

அவ்வாறே மனிதரிடமும் தம் நோய்களைத் தீர்த்துக்கொள்வதற்கு வேண்டிய அறிவு இயற்கையாக உண்டு. மக்களின் கல்வி, நாகரிக அறிவு பெருகப் பெருக, மருத்துவ அறிவும் பெருகிற்றென்றே கொள்ளல் வேண்டும். தமிழ்நாட்டு மக்களது கலைப்பெருக்கத்தில் சிறப்பாக மருத்துவக்கலை மிகவும் சிறப்பெய்தியிருக்கிறது.

நோய்வராமல் தடுத்துக்கொள்ளும் இயற்கைமுறை. நோய்வந்தபின் தீர்க்கும் ஆற்றல், உடம்பை நெடுநாள் அழியாமல் காப்பாற்றும் திறன், இவை அனைத்தும் தமிழ் மருத்துவத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளன. இப்போது விந்திய மலைக்குத் தெற்கே கன்னியாகுமரி வரையில் உள்ள நாட்டு மக்களின் மருத்துவத்தைத் தமிழ் மருத்துவம் எனவும், சித்த மருத்துவம் எனவும் கூறுவர். தமிழ் மக்களது மருத்துவ மாதலால் இதைத் தமிழ் மருத்துவமெனவும், பல்வேறு சித்திகளில் வல்ல அறிஞர்களான சித்தர்கள் தம் உள்ளொளியினால் வரையறுக்கப்பட்டு ஏற்றமுறையில் அமைக்கப்பெற்றதும், பதினெண் சித்தர்கள் கொண்ட மருத்துவ அவையினரால் அவ்வப்போது ஏற்கப்பெற்றதுமான மருத்துவமானதால் சித்த மருத்துவமெனவும் கூறப்படுகிறது.

தமிழ் மருத்துவமெனும் சித்த மருத்துவத்தைப் பயில்பவர்கள் சரநூல் பயிற்சி பெற்றவர்களாகவும் இருந்திருக்கின்றனர். அதனால்தான் அவர்கட்குத் தசநாடிகளின் பண்பு அறிவது சுலபமாக இருந்திருக்கிறது. மனித உடம்பின் அமைப்பைச் சித்த மருத்துவர் நுண்ணிய முறையில் அறிந்திருந்தனர். ஐம்புலன்கட்கு எட்டிய இவ்வுடலைக் கூறிட்டு, ஒவ்வொரு பாகத்தையும் கருவிகளையும் விவரித்து, அவ்வவற்றின் எடைகளையும் தந்திருக்கின்றனர். அவர்கள் வேண்டியபோதெல்லாம் உடலை அறுத்துச் சந்தேகமின்றி நேரே கண்ணாரக் கண்டும் வந்தனர்.

அந்தக் காலத்தில் மேல்நாட்டினர், பன்றி குரங்கு, நாய், மாடு இவற்றின் உறுப்புக்களைப்பற்றியே அறிந்திருந்தனர். 1543 ஆம் ஆண்டுதான் வெசலிஸ் (Vesalis) என்னும் பெல்சிய மகனார், முதன் முதலில் மனித உடலை அறுத்து, அதன் உள்ளுறுப்புகளைச் செவ்வனே பார்த்து, மனிதனின் அமைப்பு, மிருகத்தின் அமைப்பைப் போன்றது அன்று என்பதை எடுத்துக் காட்டினார்.

தமிழ் மருத்துவர்கள் உடலுறுப்புக்களின் அமைப்பினை அறிவதுமன்றி, அவ்வுடலில் அடர்ந்து கிடக்கும் எழுபத்தீராயிரம் நரம்புகளின் தன்மைகளையும், அந்த நரம்புகள் முடிச்சுறும் இடங்களையும் தெரிந்திருந்தனர். அவ்விடங்களில் காயங்கள் ஏற்படின் உயிருக்கு ஏற்படக்கூடிய தீமைகளையும் அறிந்து, அவற்றை நீக்கும் வகைகளையும் சித்தர்கள் தமது தர்ம நூலில் கூறியுள்ளனர்.

மனித உடலில் அமிர்தம் உண்டென்றும், அது தலைமுதல் பாதம் வரையில் சுழன்று வருகிறதென்றும் அறிவித்தனர். சூரிய வெப்பத்தினால் கொதிப்பெய்திய மத்திய ரேகையை அடுத்த கடல்நீர் நீரோட்டமாக வடதுருவம் நோக்கி அமிர்தம் போன்ற கொதிப்பைக் கொண்டுபோய்ச் சேர்ப்பது போலவும், சந்திரனது கவர்ச்சியினால் கடலில் அலைப்பெருக்கு நிகழ்வது போன்றும், உடலில் அமிர்தப் பெருக்கு நிகழ்கின்றது என்பதையும் கண்டறிந்திருக்கின்றனர்.

மாறுமிகள் நீரோட்டங்களையும் அலைப்பெருக்கையும் படகோட்டும்போது கவனிப்பதுபோல், அறுவைச் சிகிச்சை, அட்டைவிடல், கோடாரிஇடல், சுட்டிகை முதலிய சிகிச்சைகளைச் செய்கையில், மருத்துவர் அமிர்தநிலையைக் கவனிக்க வேண்டுவது சித்த மருத்துவத்தில் உண்டு.

அண்டத்தை ஒரு சக்தி இருந்து இயங்க வைப்பதுபோல், மனித உடமைப்பயும் ஓர் சக்தி இருந்து அதனை இயங்க வைக்கின்றது. அண்டத்தில் உள்ள அமைப்பும் இடையறா இயக்கமும் பிண்டத்திலும் உண்டு. அண்டத்தில் மண், நீர், நெருப்பு காற்று, வான் ஆகியவையும், நவக்கிரகங்களும், நட்சத்திரங்களும் இருப்பனபோல் பிண்டத்திலும் அவை போன்றவை உள்ளன. அண்டத்தில் உண்டாகும் தட்ப வெப்ப மாறுபாட்டாலும், நவக்கிரகங்கள் இடம்விட்டு இடம் மாறுகையில் ஏற்படும் மாற்றங்களாலும், பூமிநடுக்கம் (மண்), வெள்ளப்பெருக்கு (நீர்), எரிமலைக்குழப்பங்கள்(நெருப்பு), புயல் அடித்தல்(காற்று), இடிமுழக்கங்கள்(வான்), உண்டாகும்.

அதுபோல் பிண்டத்திலும் ஐம்பூதங்களால் மாறுபாடுகள் ஏற்படுகின்றன. அப்போது வாத பித்த கபங்கள் தம்நிலையில் புரண்டு கோளாறுகளை உண்டாக்குகின்றன என்பதை அறிந்த சித்தர் சட்டமுனி என்பவர்,

''அண்டத்தில் உள்ளதே பிண்டம்
பிண்டத்திலுள்ளதே அண்டம்
அண்டமும் பிண்டமும் ஒன்றே
அறிந்துதான் பார்க்கும் போதே''

என்று தன் ஞானத்தில் கண்டனர். இவ்வாறு சித்தர்கள் கண்ட உண்மையை உபயோகப் படுத்திய மருத்துவ ஆய்வாளர், மேஜர்-ஜெனரல் சர் லியனாட் ரோஜர்ஸ் என்பவர். வெப்பநிலை, மழை, ஊதைக் காற்று இவற்றிற்கும் நோய்கள் உண்டாவதற்கும் தொடர்பு இருத்தலையறிந்தனர்.

இதன்வழி இந்திய நாட்டில் தோன்றும் கொள்ளை நோய்களாகிய வாந்திபேதி, அம்மை ஆகியவை எப்பருவத்தே, எவ்விடத்தே உண்டாகும் என்பதை முன்னரே கூறும் பெருமையைத் தமிழ் மருத்துவர்கள் பெற்றனர்.

புலனுக்கு எட்டிய உடலின் அமைப்பையும் அதன் இயற்கைத் தொழில்களையும் அறிவதுடன் நின்றுவிடாது, தமிழர் புலனுக்கு எட்டாத சூக்கும சரீரத்தின் அமைப்பையும் அதன் தொழில்களையும் அச் சடலத்தே குடிகொண்டு உலாவும் உயிரின் பண்பையும் அறிந்து, உடலுக்கும் உயிருக்கும் உள்ள ஒற்றுமையைக் கண்டனர். இவ்வாறு கண்ட சித்த மருத்துவப் பெரியோர் மனித அமைப்பு, தொண்ணூற்றாறு தத்துவங்களுடன் கூடியது எனத் தீர்மானித்தனர்.

''முப்பதும் முப்பதும் முப்பத் தறுவருஞ்
செப்ப மதிளுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிளுடைக் கோயில் சிதைந்தபின்
ஒப்ப அனைவரும் ஒட்டெடுத் தார்களே''
—திருமந்திரம்154

கரு உற்பத்தி, கரு வளரும் முறை, ஆண் பெண் அலியாக அமையும் வரலாறு, கருப்பையில் கருத் தங்கக் கூடிய நாள்கள், ஆண் பெண் எந்தெந்த நாள்களில் கூடினால் கருத்தரிக்கும், எந்தெந்த நாள்களில் கூடினால் கருத்தரிக்காது, ஆண் பிள்ளையையோ, பெண் பிள்ளையையோ விரும்பியவாறு பெறுவதற்கு ஏற்ற வழிகள், இவை யாவும் சித்த மருத்துவத்தில் கூறப்பட்டுள்ளன. கரு நன்கு வளர்வதற்கு ஏற்ற மருத்துவங்களையும் கூறியுள்ளனர்.

ஆறாதாரத்தின் இயல்பையறிந்து, அதன் வழி வாசியை எழுப்பி, உடலில் இயற்கையாக நிகழும் நிகழ்ச்சிகளை மாற்றியமைக்குந் திறனும் பெற்றிருந்தனர்.

''போவதாம் மெய்யின் மூலச்
சுழியினிற் பொலிபி ராணன்
ஆவதாம் வாயுவைக் கும்பித்
தரியநேத் திரமை யத்தில்
தூவிரு நாசி பாயுஞ்
சுவாசமூன் றொன்றைக் கட்டின்
சாவதில் லாமல் என்றுந்
சகத்திற்சஞ் சரிக்க லாமே''
—(பரராச சேகரம்)

நிமிடத்திற்கு எழுபத்திரண்டு தரம் குவிந்து விரியும் இரத்தாசயத்தைச் செயலற்று நிற்கச் செய்யவும், நாளொன்றுக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு தரம் இடைகலை பிங்கலையாகப் பாயுஞ் சுவாசத்தைச் சுழிமுனையில் நிறுத்தி, ஆயுளைப் பெருக்கும் திறமையையும், பூமியில் புதைக்கப்பட்டால் உயிர் துறவாது இருக்கும் வல்லமையையும், இவை போன்ற ஏனைய பிற செயற்கரிய சித்திகளையும் பெற்றனர் தமிழ்நாட்டுச் சித்தர்கள். இவையன்றி, சதாவதானம் செய்யும் திறனும் பெற்றிருந்தனர்.

மனிதர்க்கு உண்டாகும் நோய்கள் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டென அறிந்து, அவற்றை யுண்டாக்கும் காரணங்களையும், அக் காரணங்கள் எவ்வாறு உடலில் அக்கினி, வாயு, கபம் இவற்றின் ஏற்றத் தாழ்வை யுண்டாக்குகின்றன என்பனவற்றையும் விரிவாகக் கூறியிருக்கின்றனர். நோய் ஏற்பட்டபின் அதை அறிதற்கு ஏற்ற வழிகளையும் கூறியிருக்கின்றனர். கை நாடி பார்த்து நோயைக் கண்டறியும் நாடிநூல் சித்த மருத்துவத்தில் சிறப்புப் பெற்றுள்ளது.

நோய்க்கூறுகளின் வன்மைக்குத் தக்கவாறு மூலிகைகள், இரச, உபரச, உப்பு, பாடாணங்கள், உலோகங்களைக் கொண்டு மருந்துகள் தயாரித்து வியாதிகட்குக் கொடுத்து அவற்றைப் பற்றறப் போக்கும் ஆற்றல் சித்த மருந்துகளுக்கே சிறப்பாக அமைந்துள்ளன. இரச, உபரசபாடாணங்களைச் சேர்த்துச் செய்யும் மருந்துகள் தயாரிப்பின்போது அப்பொருள்களின் பஞ்சபூத வகைப்படி முறையாகச் சேர்த்துச் செய்யப்படும் மருந்துகளே, சிறந்த சித்த மருந்துகளாகும்.

இதுவன்றி, இம் மருந்துகளைச் சேர்த்து அரைப்பதற்கு வேண்டிய செயநீர், திராவகம், உருக்கினம் என்பவற்றைச் செய்யப்புகும்போது மருந்துப் பொருள்களின் சத்துரு மித்துரு அறிந்து, உப்புப் புளி நாத விந்து தெரிந்து, கைபாகம் செய்பாகம் தவறாமல் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. சித்த மருந்து செய்கையில் கையாளும் முறைகள், நசுக்கல், கசக்கல், பிழிதல் முதலாக முப்பத்தெட்டு வகைப்படும்.

ஓர்மருந்தையே பல்வேறு நோய்கட்கும் அனுபானங்களை மாற்றிக்கொடுக்கும் முறை, தமிழ் மருந்தெனும் சித்த மருந்துகட்கே சிறப்பானதாகும்.

மருந்துகளிற் சிலவற்றை உண்ணுங் காலத்தில், உண்டி, உடை, குளிப்பு, முழுக்கு முதலியவற்றை ஏற்ற வகையில் அமைத்துப் பத்தியங் கொள்ளும் வழக்கம் சித்த மருத்துவத்தில்தான் அதிகமாகக் கையாளப்படுகிறது. இரச பாடாணங்களாலாகிய மருந்துகளை உபயோகிக்கும்போது கடும் பத்தியம் மேற்கொள்வர். பத்திய உணவு வகைகள் விரிவாகக் கூறப்பட்டிருப்பதைப் பதார்த்தகுண சிந்தாமணி என்னும் நூலில் காணலாம்.

**மனநோய்க்கு மருத்துவம்:**

உடலில் ஏற்படும் நோய்களன்றி, மனத்தினை வாட்டும் பிணிகளையும் அறிந்து, அவை மனிதனைச் சாராவண்ணம் மனத்தையுறுதிப்படுத்தக்கூடிய ஞானநூல்களையும், நீதி நெறிகளைப் போதிக்கும் நூல்களையும் ஏற்படுத்தினர் சித்தர்கள். மனம் நோயுற்றபோது அதனை நீக்குவதற்கு மணிமந்திர தந்திரங்களையும் ஔடதங்களையும் உபயோகித்து அந்நோயைப் போக்கும் வகைகளை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

**விஷ மருத்துவம்:**

உயிரை உடனே போக்கக்கூடிய பாம்புக்கடி விஷத்திற்கு மணிமந்திர தந்திரங்களை உபயோகித்து உயிர் பிழைக்கவைக்கும் சித்தர்களின் ஆற்றல் இக்காலத்திலும் பல கிராமங்களில் நிகழ்வதைக்காணலாம். உடலில் எவ்வகை விஷக்கிருமிகள் தீண்டினாலும் விஷம் உடலில் தீங்கு செய்யாமல், தீண்டிய விஷக்கிருமிகளையே மாளச் செய்யும் உடற் பக்குவத்தைப் பெறுவதற்கு வெள்ளைப் பாஷாணத்தைக் கடுகில் நான்கில் ஒன்றாகிய சிறு அளவில் உட்கொண்டு பழகி, ஆண்டுகள் செல்லச் செல்ல 2 கிராம் நிறையளவில் பருகிக் கொண்டிருக்கின்றனர், சித்த மருத்துவத்தைப் பின்பற்றுபவர்கள்.

**புற்று நோய்க்கு மருத்துவம்:**

சில காலமாகப் புற்றுநோயைப் பற்றிய ஆய்வு அனைத்து நாடுகளிலும் தீவிரமாக நடைபெற்று வருகின்றது. இன்னமும் முடிவான மருந்து வெளிவரவில்லை. சமீப காலமாகச் சேராங்கொட்டையினால் தயாரிக்கப்பட்ட மருந்துகளினால் புற்று நோய் குணமடைகின்றன என்ற உண்மையை வடநாட்டில் ஆயுர்வேதம் பயின்ற நவீன மருத்துவர்கள் கண்டறிந்திருக்கின்றனர். அவர்கள் ஓர் சிறந்த மருந்தைச் சேராங்கொட்டையைக் கொண்டு தயாரிக்கின்றனர்.

புற்றுநோய்க்குத் தனிப்பட்ட முறையில் சிகிச்சையளிக்கும் நவீன மருத்துவர்களில் சிலர் இதைப் பெருஞ் சஞ்சீவியாகக் கருதி நோயாளிகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர். இம் மருந்து எளிதில் பலர்க்குக் கிடைக்காத அளவில் விற்பனையாகின்றது

சேராங்கொட்டையினால் தயாரிக்கப்படும் சித்த மருந்துகளுக்கு வல்லாதி என்று பெயர். மேகவல்லாதி, இடிவல்லாதி, சிறுவல்லாதி, இராமபாறைவல்லாதி, சித்தர் வல்லாதி, கலிவல்லாதி, இலகுவல்லாதி, பால்வல்லாதி என்ற பல பெயர்களில் தயாரிப்புகள் உள்ளன.

இவை அனைத்தும் புற்று நோய்களைக் குணப்படுத்தவல்லன. பல சித்த மருத்துவர்கள் இப்பொழுதும் இம் மருந்துகளைத் தயாரித்துக் கொடிய புற்றுநோய்களைக் குணப்படுத்தி வருகின்றனர், விளம்பரமில்லாமல்! சித்தமருத்துவத்தில் தலைசிறந்த நிபுணராக விளங்கிய பண்டிட் எஸ்.எஸ். ஆனந்தம் அவர்கள் சேராங்கொட்டையில் தயாரித்த அற்புத மருந்தினைக் கொண்டு பல புற்றுநோய்களைக் குணப்படுத்தியதை நான் நேரில் கண்டிருக்கிறேன்.

அவரைப் பின்பற்றி அவரது புதல்வர் டாக்டர் ஆனந்தகுமார் அவர்கள், தற்போது மத்திய அரசாங்கச் சித்த மருத்துவ ஆய்வுக்கூடத்தில், புற்று நோயாளர்களுக்குச் சேராங்கொட்டையினால் தயாரிக்கப்

பட்ட மருந்துகளைக் கொடுத்துச் சிகிச்சை செய்து வருவதாக அறிகின்றோம். உலகிலுள்ள புற்றுநோய் ஆய்வாளர்கள் தமிழகத்திலுள்ள தமிழ் மருத்துவமென்னும் சித்த மருத்துவத்தில் சிலகாலம் தங்கள் கவனத்தைத் திருப்பினால் உலகிற்கே பயன்படத்தக்க சஞ்சீவியைக் காணமுடியும்

**இரச, உபரச உபயோகம்:**

நெருப்பில் புகைந்தோடும் பாதரசத்தை நெருப்புக்கு ஓடாமல் கட்டி, அதனை மணியாக்கி உடலில் அணிந்து நோய் வராமல் தடுக்கவும், வீரியத்தைக் கூட்டவும் ஆற்றல் பெற்றிருக்கின்றனர், சித்த மருத்துவர்கள். நோய்களைப் போக்குவதில் மூலிகைகளால் செய்யப்பட்ட மருந்துகளைப் பார்க்கிலும் இரசம், கெந்தகம், தாதுப் பொருள்களாலாகிய மருந்துகளே வீரியமுடையன என்பது சித்த மருத்துவத்தின் கோட்பாடு ஆகும். இரச பாடாணக்கட்டுகள், களங்குகள், குரு குளிகைகள் சிறந்த மருந்துகள்.

**கற்ப உபயோகம்:**

மனிதருக்கு ஏற்படும் நோய்களை வாராது தடுப்பதும், நோய் ஏற்பட்ட போது நீக்குவதும், உடல் நலிவுற்றபோது அதை நீக்கி உடலைப் பொலிவுற அமைப்பதும் போன்றவற்றுடன், சித்தர்கள் திருப்தியடைந்தார்களில்லை. இயற்கையாக ஏற்படும் நரை, திரை, மூப்பை நீக்கும் வழிவகைகளையும் அமைத்தனர். அதற்காகக் கற்பங்களை உபயோகித்தனர்.

''அஞ்சி யூதி யழியாமல் காயந்தான்
மஞ்சிய் கற்பம் வழங்கினோம் நூற்றெட்டு
தஞ்ச முறவே தான்தின்ன வல்லார்க்குப்
பஞ்ச நரைபோய் பதின்கோடி வாழ்வரே''

**வகார வித்தை:**

வகார வித்தை யென்பது வேதை யென்றும், வாதம் என்றும் கூறப்படும். உலகில் உள்ள பொருள்கள் யாவும் தம் உருவில் நின்றும் மாறுவதற்கு இயற்கையால் தரப்பட்ட கருவிகள் வெடித்தல் (வான்), உராய்தல் (அனிலம்), உருக்கல்-புகைதல் (அனலம்), கசிதல்-கரைதல் (நீர்), துருப்பிடித்தல்-உளுத்தல் (மண்)என்பன.

இவற்றால் தம் உருவில் சிதைவுறா வகையில் பொருள்களை மாற்றியமைப்பதே வேதை. அதாவது உளுத்துப்போகும் பொருள்களை உளுக்காமலும், துருப்பிடிக்கும் பொருள்களைத் துருப்பிடிக்காமலும், கரையும் பொருள்களைக் கரையாமலும், கசிவுள்ள பொருள்களைக் கசியாமலும், உருகிப்புகையும் பொருள்களை உருகிப் புகையாமலும், உரையும் பொருள்களை உரைபடாமலும், வெடிக்கும் பொருள்களை வெடிக்காமலும் கட்டுவதே மாற்றியமைத்தல், வேதை எனப்படுவதாகும்.

தாம்பரத்தின் களிம்பை நீக்க அதற்குத் தகுந்த முறையில் இரசத்தைத் தாம்பரத்திற்கு ஊட்ட, அஃது ஊட்டம் பெற்றுப் பத்தரை மாற்றுத் தங்கமாகுமென்று சித்த நூல்கள் கூறுகின்றன. அமெரிக்கநாட்டு விஞ்ஞானி ஒருவர் பத்தரை மாற்றுத் தங்கத்திலிருந்து எடுத்த சுத்தமான பாதரசத்தை நமது பாரதநாட்டு விஞ்ஞானி சர். சி. வி. ராமன் அவர்கட்குக் கொடுத்ததாகச் செய்தி சில ஆண்டுகளுக்கு முன் வந்தது.

''வேதையா லுலகமெலாம் வேதிக்கபரிசவேதி
ஓதைநீ ருலகுவப்ப உண்ணின்மாமேருவென்ன
பூதலத்த வர்க்குப்பஞ்ச பூததேகம் பொன்னாகும்
காதைய தல்லகற்பங் காயசித்திக்கு மாமே''

—(திருமூலர்)

என்றபடி வேதையென்னும் வகார வித்தையால் உடல் அழியாது பொன்போல் காய கற்பம் பெறுமென்பதனால், மருத்துவர் வேதையை அறியவேண்டுமென ஏற்படுத்தியுள்ளது, சித்த மருத்துவம். இரசவாதம் என்பது பாதரசம் என்னும் பொருளின் மூலமாய்ச் செய்யப்படும் வித்தை, வேடிக்கை, விநோதம், மாரணம் முதலியவைகளுக்குப் பெயராகும்.

விஞ்ஞான வளர்ச்சி மிகவும் வளர்ந்து வரும் இக்காலத்திலும் காணவியலாதபல அற்புதச் சாதனைகளைப் பல நூற்றாண்டுகட்கு முன்னர், ஞானமுதிர்ச்சியால் கண்டறிந்து மக்களுக்கு எக்காலத்தும் பயன்படச் செய்திருப்பது தமிழ் மருத்துவத்துக்கே உரிய மாண்பாகும். இதனை ஆய்வாளர்கள் போற்றி, மேலும் ஆய்வு செய்தால் உலக மக்களுக்கு மிகப்பெரிய நன்மை ஏற்படும்.

# குறள் காட்டும் வாழ்வு

"முத்தமிழ்க் காவலர்" — "கலைமாமணி"
டாக்டர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், திருச்சி.

வாழ்வு பலவகை. குறள் காட்டும் வாழ்வு ஒரு தனிவகை. அதை உலக மக்களுக்குக் காட்டியவர் திருவள்ளுவர். திருவள்ளுவர் தமிழகத்துச் சான்றோர்களுள் ஒருவர். அவர் பிறந்து இன்றைக்கு 2011 ஆண்டுகளாயின. அவர் பிறந்தது வளர்ந்தது வாழ்ந்தது அனைத்தும் பாண்டிநாடு; மதுரை.

மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் மக்களாகவே வாழவேண்டும் என்பது அவரது பேராசை அல்ல, மிகப் பெரிய ஆசை. அதன் விளைவே திருக்குறள். அது காட்டும் வாழ்வே குறள் காட்டும் வாழ்வு. வாழ்வாங்கு வாழ்தல் என்று அது கூறுகிறது. இது வாழவேண்டிய முறைப்படி வாழ்தல் எனப் பொருள்படும். வாழவேண்டிய முறை என்பது தனக்காக, தன் குடும்பத்துக்காக என்று வாழாமல், பிறருக்காகவும் வாழவேண்டும் என்பதாகும். இவ்வாழ்வு முறையைத் திருக்குறள் கீழ்க்கண்டவாறு பல வகையாக நமக்குக் காட்டுகிறது.

### 1. எது மக்கள் வாழ்வு?

ஒருவரை ஒருவர் அடித்துத் துன்புறுத்தி வாழ்வது விலங்கு வாழ்வு. தன்னலங்கொண்டு உயரப்பறப்பது பறவை வாழ்வு. தீமை செய்தவருக்குத் தீமை செய்து வாழ்வது தேள், பாம்புகளின் வாழ்வு. தீமை செய்யாதவர்க்கும் தீமை செய்வது பேய்களின் வாழ்வு. தீமை செய்யாதவர்களை மன்னித்துவிடுவது மட்டுமன்று அவர்களுக்கு நன்மையைச் செய்தும் வாழ்வதே மக்கள் வாழ்வு எனக் குறள் கூறுகிறது.

### 2. வாழ்வுக்குப் பத்து உடைமைகள்:

உடலுக்குச் சில உடைமைகளை அணிவது போல, உள்ளத்திற்கும் சில உடைமைகளை அணிந்து வாழ்வதே குறள்காட்டும் வாழ்வு ஆகும். அவை அன்புடைமை, அறிவுடைமை, அருளுடைமை, அடக்கமுடைமை, ஆள்வினையுடைமை, ஒழுக்கமுடைமை, ஊக்கமுடைமை, நாணமுடைமை, பொறையுடைமை, பண்புடைமை என்பன. இப் பத்து உடைமைகளையும் பத்துத் தலைப்புகளில், நூறு குறள்களாக்கி மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் இவற்றைத் தம் உள்ளத்தில் அணிந்து வாழ்ந்தாக வேண்டும் எனக் குறள் நல்வாழ்வுக்கு வழிகாட்டுகிறது.

### 3. பத்துக் கட்டளைகள் :

பொய்யைச் சொல்லாதே! புலாலை உண்ணாதே! கள்ளைக் குடியாதே! களவை நினையாதே! காமங் கொள்ளாதே! கொலையைச் செய்யாதே! சூதை விரும்பாதே! புறங்கூறாதே! பொறாமையடையாதே! பேராசை கொள்ளாதே! என்ற பத்துக் கட்டளைகளும் நல்வாழ்வு வாழக் குறள் இடும் கட்டளைகளாகும்.

### 4. பழிக்கு அஞ்சி வாழ்தல் :

நம் முன்னோர்களாகிய நூலோர்கள் தொகுத்துக் கூறியவற்றுள் எல்லாம் தலையாய அறங்கள் இரண்டு. அவை பகுத்து உண்ணல் ஒன்று. பல்லுயிர் ஓம்புதல் மற்றொன்று, ஆனால், வாழ்வாங்கு வாழ அவை இரண்டு மட்டும் போதாது. ஒழுக்கமாகவும் நடந்தாக வேண்டும் எனக்குறள் ஒரு புதுவழியைக் காட்டுகிறது. இதைப் ''பழியஞ்சு! பகுத்துண்!'' என்ற குறள் நமக்கு விளக்கிக் காட்டுகிறது.

### 5. விரும்பி வாழ நான்கு:

நகை, ஈகை, இன்சொல், இகழாமை ஆகிய நான்கையும் விரும்பிக் கைக்கொள். அது உன் வாழ்வை வளமாக்கும் என்பதே குறள் காட்டும் வாழ்வு. இந்த நான்கை வரிசைப்படுத்தி யிருப்பதிலும் ஒரு அழகு தோன்றுகிறது. அவை நல்வாழ்வுக்கு எப்போதும் இனிய முகத்தோடு இருத்தல் வேண்டும். அது முடியாவிட்டால் இயன்றவரை ஏதாவது கொடுத்து அனுப்பிவிட வேண்டும். அதுவும் முடியாவிட்டால் அவர்களை இனிய சொற்களையாவது சொல்லி அனுப்பிவிடவேண்டும். அதுவும் முடியாவிடில் அவர்களை இகழ்ந்து கூறாமலாவது இருக்கவேண்டும் என்பது. எப்படி குறள் காட்டும் வாழ்வு?

## 6. வெறுத்து வாழ நான்கு :

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் என்பன அவை. பிறரைக் கண்டு பொறாமைப்படாதே! பிறர் பொருளின் மீது ஆசை வைக்காதே! எவர்மீதும் சினம் கொள்ளாதே! எப்போதும் கடும் சொற்களைச் சொல்லாதே! இந்நான்கும் நம் வாழ்வுக்கு ஒளிவீசும் எனக் குறள்கூறுகிறது.

## 7. வழங்கி வாழ நான்கு:

அன்பு உள்ளம் கொண்ட சான்றோர்கள் தம் தசையை, நரம்பை, தோலை மட்டுமல்ல, தம் எலும்பையும் பிறருக்கு வழங்கி வாழ்வர் என்ற கருத்தை 'என்பும் உரியர் பிறர்க்கு' என்ற குறட் சொற்றொடர் கூறிக்கொண்டிருக்கிறது.

## 8. வாழ்வுக்கு வேண்டிய நட்பு:

நட்பு நல்வாழ்வுக்குத் தேவை. ஆகவே, நட்பைக் கைக்கொள், அதையும் ஆராய்ந்து கொள்! தீ நட்பு கொள்ளாதே! பழமையைத் தள்ளாதே! கூடா நட்பு கூடாதே! சிற்றினம் சேராதே! பெரியோரை வெறுக்காதே! என்ற ஏழு தலைப்புகளில் எழுபது குறள்களைக் கூறி, வாழ்வுக்கு வழி காட்டுகிறது குறள்.

## 9. கற்றபடி நிற்றல் :

படி! எல்லாவற்றையும் படிக்காதே! படிக்கவேண்டியவற்றைப் படி! அதையும் பிழையறப் படி! மனதில் உள்ள கசடு அறும்படி படி! கற்றிலன் ஆயினும் கேள்! கற்றவற்றையும் கேட்டவற்றையும் சிந்தித்து உணர்! அந்த அளவோடு விட்டு விடாதே. அதன்படி நட! எனக் குறள் நல்வாழ்வுக்கு வழிகாட்டுகிறது.

## 10. உள்ளத்தை உயர்த்தி வாழ் :

நல்வாழ்வு வாழவேண்டுமானால் உள்ளத்தை உயர்த்தி வாழ். சிறியன சிந்தியாதே. எப்போதும் பெரியதையே எண்ணு. அழுத்தமாக எண்ணு. ஆழமாக எண்ணு. அப்படியே ஆவாய்! வெள்ளம் உயரஉயர மலர் உயர்வதுபோல உன் உள்ளம் உயர உயர நீ உயர்வாய்! நல்வாழ்வு வாழ உள்ளத்தை உயர்த்து! எனக் கூறுகிறது குறள்.

## 11. யார் பெரியர் ?

நாம் ஒரு காலத்தில் பணக்காரர், நிலக்காரர், முதல்காரர் ஆகியவர்களைப் பெரியர் என நினைத்திருந்தோம். அடுத்து, படித்தவர், பட்டம்பெற்றவர், பதவியிலிருப்பவர் பெரியர் என எண்ணினோம். பின், வயதில் முதிர்ந்தோர் பெரியோர் எனக் கருதினோம். இப்பொழுது எழுத்தர்களையும் பேச்சர்களையும் பெரியோர் என எண்ணுகிறோம். குறள் இவற்றை ஒப்பவில்லை. யார் பெரியர்? என்ற கேள்விக்கு-குறள்கூறும் விடை எழுத்தரல்ல, பேச்சரல்ல. 'செய்வர் பெரியர்' என்பதே. இதிலிருந்து மலையளவு பேசுவதைவிடக் கடுகளவு செய்து வாழ்வதே நல்லது எனத் தெரிகிறது.

## 12. நா நலம் என்னும் நலமுடைமை :

''நா நலம் என்னும் நலமுடைமை'' என்பது அரைக்குறள். அடுத்து அரைக் குறளும்கூட 'அந்த நலம், வேறு எந்த நலத்திலும் இல்லை' என்பதே. அதுமட்டுமன்று, 'நாநலம்' என்பதே 'நலமுடைமை' என்பதுதான். இதுதான் அதன் உண்மையான பெயர் என்றும் குறள் கூறிக்கொண்டிருக்கிறது. அளவோடு பேசுதல், ஆராய்ந்து கூறுதல், எவரையும் வையாதிருத்தல் ஆகியவை அனைத்தும் நாநலத்தின்பாற்பட்டவை என்று குறள் கூறுகிறது. இதையே, கண்டு ஒன்று சொல்லேல்! சுளிக்கச் சொல்லேல்! சொற்சோர்வுபடேல், பழிப்பன பகரேல், மிகைபடச் சொல்லேல், வெட்டெனப் பேசேல், வாது முற்கூறேல், ஒரஞ் சொல்லேல் என ஔவையும் கூறுகிறார். இவற்றால் நல்வாழ்வுக்கு ஏற்றது நா நலமே என்று குறள் கூறுகிறது.

## 13. தோற்றத்தைக் கண்டு மயங்காதே :

கருப்பாக இருக்கிறது, கோணலாக இருக்கிறது, நாரும் நரம்புமாக இருக்கிறது என்று வெறுத்து விடாதே 'வீணை'யை. நீ இன்பத்தை இழந்து விடுவாய்! சிவப்பாக இருக்கிறது, அழகாக இருக்கிறது, நேராக ஒழுங்காக இருக்கிறது என்று நெஞ்சில் வைத்துவிடாதே 'அம்பை'. அது உன்னைக் கொன்று விடும். இவை இரண்டு மட்டுமல்ல, வேறு எதனையும் தோற்றத்தைக் கண்டே மயங்கிவிடாதே, வாழ்வு பாழாகிவிடும் என எச்சரிக்கை செய்கிறது குறள்.

## 14. பொருள் தேடும் வழி:

பெற்ற தாயின் வயிறு பசிக்கக் காண்பது, பிறந்த மகனுக்கு இழிவு. எப்பாடுபட்டேனும் அத் தாயின் வயிற்றுப் பசியைப் போக்க வேண்டியது பிறந்த மகனின் கடமை. ஏனெனில், அது அவன் குடியிருந்த கோயில். என்றாலும், அந்த நிலையிலும் ஒருவன் தவறான வழியில் பொருளைத் தேடிவந்து தாயின் பசியைப் போக்க எண்ணுவது தவறு. எண்ணினால் அத்தகையவரைச் சான்றோர் பழித்து ஒதுக்கிவிடுவர் எனப் பிறந்த மகனின் வாழ்வுக்கும் வழிகூறுகிறது குறள்.

## 15. வினைத் திட்பம்:

ஒரு நல்ல செயலைச் செய்வதற்கு வேண்டியது பொருளுதவி அல்ல. நண்பர்களின் துணை அல்ல. மனைவி மக்களின் ஒத்துழைப்பல்ல, அரசாங்கத்தின் ஆதரவு

அல்ல, வேறு எதுவுமே அல்ல. அவனுக்கு வேண்டியது மனஉறுதி ஒன்றே. இதை 'வினைத் திட்பம் என்பது ஒருவன் மனத் திட்பம்' என்ற குறள் காட்டுகிறது.

### 16. மேன்மையடைய வழி:

'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை' என்பது அரைக்குறள். இதற்குமூன்று பொருள்கள் உள்ளன. ஆடை, அணி, பொன், மணி பட்டம், பதவி முதலியவற்றால் எவரும் மேன்மையடைய முடியாது; ஒழுக்கம் ஒன்றினாலேயே அதை அடைய முடியும் என்பது ஒன்று. ஒழுக்கத்தினாலேயே உயர்ந்துவிட்ட ஒருவன், பின் தெரிந்தோ தெரியாமலோ தவறு செய்ய நேர்ந்தாலும் உலகம் அதை நம்பாது. அப்போதும் அவன் மேன்மையையே அடைவான் என்பது மற்றொன்று. ஒழுக்கத்தினால் உயர்ந்த ஒருவர் பின் வறுமையால் தாழ்ந்து போனாலும் கண்டோர் அவரை 'நன்றாக வாழ்ந்தவர்' என்றே உயர்வாகக் கூறி மகிழ்வர் என்பது மூன்று.

'இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி' என்பது மறுபாதிக் குறள். இதற்கும்மூன்று பொருள்கள் உள்ளன. ஒன்று, ஒழுக்கம் தவறியவன் எல்லோராலும் பழிக்கப்படுவான் என்பது. மற்றொன்று, ஒழுக்கம் தவறியவன் பின்பு திருந்தி நல்ல காரியங்களைச் செய்தாலும் உலகம் நம்பாது. அவன் முன்செய்த பாவங்களைப் போக்கவே இவற்றைச் செய்கிறான், எனக்கூறிப் பலரும் பழி தூற்றுவர் என்பது. இன்னொன்று, அவன் செய்யாத-பிறர் செய்த தவறுக்கும் பழி ஏற்கநேரிட்டு விடும் என்பது. இந்த மூன்றாவது கருத்தை இக் குறளிலுள்ள 'எய்தாப் பழியையும் எய்துவர்' என்ற சொற்றொடர் நமக்கு விளக்குகிறது. எப்படி, குறள் காட்டும் வாழ்வு?

### 17. செயல் திட்டம்:

நல்வாழ்வுக்கு வழி 'நற்செயல்களைச் செய்வது' என்பது திருக்குறளின் கருத்து. இதற்கு 120 குறள்களைப் பன்னிரண்டு தலைப்புகளின்கீழ்க் கூறுகிறார் வள்ளுவர். அவை: ஆள்வினையுடைமை, இடுக்கண் அழியாமை, ஊக்கமுடைமை என அடிப்படை மூன்று, அடுத்து இடமறிந்து செய்தல், காலமறிந்து செய்தல், வலியறிந்து செய்தல் என அரைப்பகுதியில் மூன்று: தெரிந்து செயல்வகை, தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல் என முக்காற் பகுதியில் மூன்று; வினை செயல்வகை, வினைத் திட்பம், வினைத்தூய்மை என இறுதியில் மூன்று: ஆகப் பன்னிரண்டு. இவை அனைத்தும் நல்லவற்றைச் செய்து நல்வாழ்வு வாழக் காட்டும் வழிகள். இதை அந்த அளவோடு அவர் விட்டுவிடவில்லை. 'செய்ய வேண்டியவற்றைச் செய்யாவிடினும் வாழ்வு கெடும். செய்யத்தகாதவற்றைச் செய்தாலும் வாழ்வு கெடும்' என எச்சரிக்கையும் செய்கிறது குறள்.

### 18. மேலல்லார் மேலல்லர்:

ஒருவன் மேலேயிருக்கிறான் நாம் பார்க்கிறோம். மற்றொருவன் கீழேயிருக்கிறான் நாம் பார்க்கிறோம். குறள் இதை ஒப்புக்கொள்ளவில்லை, மறுக்கிறது. உள்ளபடியே மேலேயும் கீழேயும் பார்க்கின்ற நாம் இதை எப்படி நம்புவது? நம்பாத நம்மையும் நம்ப வைக்கிறது குறள். ஒரு தராசை எடுத்து, இடது தட்டில் ஒரு படிக்கல்லைப் போட்டுத் தராசைத் தூக்கிக் காட்டுகிறார் வள்ளுவர். ஒரு தட்டு தாழ்ந்தும் ஒரு தட்டு உயர்ந்தும் காணப்படுகிறது .வள்ளுவர் நம்மை நோக்கிக் கேட்கிறார், ஏன் இந்தத் தட்டு உயரத்தில் இருக்கிறது? அதில் ஒன்றுமே இல்லை; அதனால் உயரத்தில் இருக்கிறது. இன்னொரு தட்டில் சரக்கிருக்கிறது. அதனால் தாழ்ந்து இருக்கிறது. இப்போது குறள் கேட்கிறது, நம்மை. 'உயரத்தில் இருப்பதெல்லாம் உயர்ந்ததா?' என்று. இக் கருத்தை 'மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர், கீழிருந்தும் கீழல்லார் கீழல்லவர்' என்ற குறள் விளக்குகிறது. இதனால் உலகிலுள்ள மக்களுள் அறிவில்லாத சிலரும் மேலே இருப்பர், அறிவுடைய சிலரும் கீழே இருப்பர் என அறிந்து வாழ்வதே வாழ்வு என அறிவுறுத்துகிறது இக் குறள்.

### 19. குன்றின் அனையாரும் குன்றுவர்:

திருக்குறளில் ஒரு சொற் குறள்கள் எனப் பல உள. அவற்றில் ஒன்று இது. இக் குறளில் நான்கு குன்றுகளைக் காணலாம். முதல் குன்று மலை. இரண்டாவது குன்று குறுகுதல். மூன்றாவது குன்று இழிசெயல். நான்காவது குன்று குண்டுமணி. குறள் இதுதான். ''குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ குன்றி அனைய செயின்''. மலைபோன்று உயர்ந்திருக்கும் மக்களும் கூடப் பழிக்கத் தகுந்த இழிசெயல்களைக் குண்டுமணி அளவு செய்தாலும்கூடக் குறுகிக் குன்றிப் போய்விடுவர் என்பது இதன் பொருள். நல்வாழ்வு வாழ விரும்புகிறவர்களுக்கு இக்குறள் காட்டும் எச்சரிக்கை மிகப் பெரியதாகும்.

### 20. சிதைவிடத்து ஒல்கார் உரவோர்:

நற்செயல்களைச் செய்து நல்வாழ்வு வாழ முன்வருபவருக்கு மிகுந்த ஆற்றல் வேண்டும். அதற்குச் சில இடையூறுகளும் வரும். சிலர் தூற்றுவர். சிலர் துன்புறுத்துவர். இவற்றைக் கண்டு கலங்கிவிடக் கூடாது. காட்டில் வாழும் யானை யானது தன் உடல் முழுவதும் வேடர்களின் அம்புகளால் தாக்கப்பெற்றுக் குருதி ஒழுகிக் கொண்டிருந்தபோதிலும் அஞ்சி நடுங்காமல், பீடு நடை நடந்து தன் பெருமையை நிலை நிறுத்தும். அதைப்போலவே 'மன உரம் படைத்த மக்களும் துன்பம் வந்த காலத்துச் சோர்வு அடையமாட்டார்கள்' என்ற கருத்தை, ''புதை யம்பிற்பட்டுப் பாடுன்றும் களிறு'' எனக் காட்டானை

யைக் காட்டி, நம்மை நிமிர்ந்து வாழச் செய்கிறது இக்குறள்.

21. மனிதனா? தெய்வமா?

வாழ வேண்டிய முறைப்படி வாழ்பவனே மனிதன் எனவும், அவன் மனிதனாயினும் மற்றவர்களால் தெய்வமாகக் கருதப்படுவான் எனவும், அவன் இம் மண்ணுலகில் வாழ்ந்தாலும் அது விண்ணுலகாகக் கருதப்படும் எனவும் ஒரு குறள் கூறுகிறது, அது,

''வையத்து வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''

என்பது. இவ்வாறு வாழ முடியாதவர்கள் வாழ்வதை விடச் சாவது நல்லது என, வாழ்வுக்கு வழிகாட்டிய குறள் சாவுக்கும் வழி காட்டுகிறது. அவை:

(1) விருந்தினர் வீட்டில் வந்திருக்க அவருக்கு வழங்காமல் நீ மட்டும் உண்ணாதே. அது சாவா மருந்தாக இருப்பினும் நீ அதை உண்டு வாழ்வதைவிட உண்ணாமல் சாவது நல்லது.

(2) உன்மீது அன்புள்ளவர்கள் உன் நிலையைப் பார்த்து நஞ்சைக் கொடுத்து உண்ணச் சொன்னாலும் அதை மறுக்காது உண்டு சாவதே நல்லது.

(3) 'மானத்தை இழப்பதா உயிரை இழப்பதா' என்ற நிலை உனக்கு வந்துவிட்டால், மானத்தை இழவாமல் உயிரை இழந்து மடிவது நல்லது.

(3) உன்னைப் புரந்தவர்களும், உன்னால் புரக்கப்பெற்றவர்களும் கலங்கிக் கண்ணீர் வடித்துக் கதறி அழும்படியான ஒரு சாவு உனக்கு வருமானால் அதை அன்போடு ஏற்று மடி. அத்தகைய சாவு ஒன்று, தானே வராவிடில், அதைப் பிச்சை எடுத்தும் ஏற்று மடிவது நல்லது.

(5) பொய் பேசியும் புறங்கூறியும் வாழாதே. இவ்விரண்டையும் எப்போதும் செய்ய எண்ணாதே. 'பொய் பேசித்தான் வாழவேண்டும், புறங்கூறித்தான் வாழவேண்டும்' என்ற ஒரு நிலை வந்து விட்டால், நீ உயிர் வாழாமல் இறந்துவிடுவதே நல்லது. அது அறங்கூறும் ஆக்கம் தரும்.

(6) சாவைப் போலத் துன்பம் தருவது எதுவும் இல்லை. என்றாலும் இரப்போர்க்கு எதுவும் ஈயமுடியாதபோது வாழ்ந்து துன்பப்படுவதைவிட இறந்து போவதே இனிதாக இருக்கும்.

(7) வாழ முடியாதவர்கள் சாவதற்குப் பயப்படவேண்டியதில்லை. இறப்பதும் பிறப்பதும் உறங்குவதையும் விழிப்பதைதையும் போன்றது.

இதில் அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை எனக் கூறுகிறது ஒரு குறள். வாழ முடியாதவர்களுக்கு இந்த ஏழு குறள்களும் சாவுக்கு வழி காட்டுகின்றன. இவை தமிழ் வாழ்வும், தமிழரின் வாழ்வும், தமிழகத்தின் வாழ்வுமாகும். இவையும் இவைபோன்ற பிறவும் மக்களாய்ப் பிறந்தவர்கள், மக்களாக வாழ, குறள் காட்டும் நெறிகளாகும். இவற்றைப் படித்து மகிழ்வதைவிடப் பயன்படுத்தி வாழ்வது நல்லது.

வாழட்டும் தமிழகம்!

வளரட்டும் குறள்நெறி!!

---

# அதிகாரிகள் நியமனம்

1959-ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டம் 22, இந்து சமய அறநிலையச் சட்டத்தின் 45(1) பிரிவின்கீழ், பின்வரும் கோயில்களுக்கு நிர்வாக அதிகாரிகள் நியமனம் செய்யப்பெற்றுள்ளனர்.

(1) தஞ்சாவூர் மாவட்டம் நன்னிலம் குத்தாலம் அருள்மிகு ஆபத்சகாயசுவாமி கோயில், தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம்வட்டம், திருமருகல் அருள்மிகு இரத்தினகிரீசுவரர் கோயிலுடன் இணைக்கப்பட்டு, ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். (ந. க. எண். 78011/80-பி6, நாள் 29—1—81).

(2) திருநெல்வேலி மாவட்டம், வட்டம், நாயினார்குளம் அருள்மிகு குளத்து நாயன் சாஸ்தாகோயில், திருநெல்வேலிச் சந்திப்பு கயிலாசபுரம் அருள்மிகு கயிலாசநாதசுவாமி கோயிலுடன் இணைக்கப்பெற்று, ஒரு நிர்வாக அதிகாரி நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ந.க.எண்.78011/80-பி6/29-1-81).

(3) பெரியார் மாவட்டம், தாராபுரம் வட்டம், முத்தூர் கிராமம், சின்ன முத்தூர் அருள்மிகு செல்வக்குமாரசுவாமி கோயில், பெரியார் மாவட்டம், தாராபுரம் வட்டம், வெள்ளக்கோயில் அருள்மிகு வீரகுமாரசுவாமி கோயில் முதலியவற்றுடன் இணைக்கப்பட்டு, ஒரு நிர்வாக அதிகாரி நியமனம் செய்யப் பட்டுள்ளார். (ந.க. எண்.59845/80-பி6/30-1-81).

(4) பெரியார் மாவட்டம், தாராபுரம் வட்டம், முத்தூர் அருள்மிகு ஆதனூரம்மன் மற்றும் குப்பியண்ணசுவாமி கோயில்கள், பெரியார் மாவட்டம், தாராபுரம் வட்டம், வெள்ளக்கோயில் அருள்மிகு வீரகுமாரசுவாமி கோயில் முதலியவைகளுடன் இணைக்கப்பட்டு, ஒரு நிர்வாக அதிகாரி நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ந. க. எண். 59845/80-பி6 / 30-1-81).

# பௌத்த மதத்தின் அடிப்படைப் போதனைகள்

பேரறிஞர் திரு. அ. லெ. நடராஜன், சென்னை.

பௌத்த சமயத்துக்கு அடிப்படைக் கோட்பாடுகளாக அமைந்திருப்பவை உன்னதமான நான்கு வாய்மைகள் ஆகும். அந்த நான்கு வாய்மைகளும் வருமாறு: துக்கம், துக்ககாரணம், துக்கநிவர்த்தி, துக்கநிவர்த்தி மார்க்கம்.

மனித வாழ்க்கையையும், பிற உயிர்களின் வாழ்க்கையையும் ஊன்றிக் கவனித்துப் பார்த்தால், அது துக்கம் நிறைந்ததாக இருப்பது தெரியவரும்.

1. பிறப்பது துக்கம்: இறப்பது துக்கம்; நரை திரை மூப்பு முதலியன துக்கம்; உடல்நோயும் மனநோயும் துக்கம்; விரும்பியவை கிடைக்காது போனால் துக்கம்; விருப்பமில்லாதவற்றுடன் சேர்ந்து வாழ்வது துக்கம்; அன்பர்களையும் நண்பர்களையும் நாம் உயிருக்கு உயிராய் நேசிக்கும் மனைவி மக்களையும், விட்டுப் பிரிவதும், பிரிய நேருவதும் அளவில்லாத துக்கம். இப்படித் துக்கம் என்பது எந்தக் காலத்திலும் எந்த இடத்திலும் தொடர்ந்திருந்துகொண்டே இருக்கிறது.

2. மனித வாழ்வில் துக்கம் ஏற்படுவதற்கு ஏதாவது காரணம் உண்டா? ஆம், உண்டு. முக்கிய காரணங்கள் திரிஷ்ணையும் வேதனையும் ஆகும். தனித்து வாழ்ந்து, அனுபவித்து, மகிழ ஆசைப்படுவது திரிஷ்ணையாகும். சுற்றுப்புறச் சூழ்நிலையால் பாதிக்கப்பட்டு, தான் தனிப்பட்டவன் என்னும் மயக்க நிலையால் ஏற்படும் உணர்வுகளே வேதனையாகும். நான் என்னும் இந்த மயக்கநிலை, தனித்து இன்பத்தை அனுபவிக்கத் தூண்டித் துன்பங்களிலும் ஒருவனைச் சிக்க வைத்துவிடுகிறது. இன்பத்தைத் தேடி அலையும் மனிதன் ஏமாந்து, துன்பவலையில் சிக்கிக் கொண்டு அவதிப்படுகிறான்.

3. இப்படித் துக்கத்துக்குக் காரணமாக இருக்கும் திரிஷ்ணையிலிருந்தும் வேதனையிலிருந்தும் ஒருவன் தன்னை விடுவித்துக் கொள்ள முடியுமா என்பது மூன்றாவது கேள்வி. ஆம். முடியும் என்று பௌத்த சமயம் கூறுகிறது. சுயநலப்பற்றை எவன் துறந்துவிடுகிறானோ, அவனுக்குத் துக்கத்திலிருந்து விடுதலை ஏற்படுகிறது. சுயநலப் பற்றை அறவே ஒழித்துவிடுவோமாயின், அதன் விளைவாக மனிதனுக்குத் துக்கமே இல்லாமற் போகிறது. தேவையின் விளைவாக, சுயநல உணர்வு உண்டாகிறது. அந்தத் தேவை நிறைவேறாத வரையில் திருப்தி உண்டாவதில்லை. திருப்தியின்மையால், துக்கம் ஏற்படுகிறது. திருப்தி ஏற்பட்டாலும் அந்தத் திருப்தி நீடிப்பதில்லை. ஆனதால் புதியதேவைகள் உண்டாகிப் புதிய துயரங்கள் ஏற்படுகின்றன, தேவைகள் பெருகப் பெருக, மனிதனுடைய வேட்கையும் தணியாமல் நீடிக்கிறது. தேவைகளை வேண்டாம் என்று தள்ளிவிட்டால் அவற்றால் ஏற்படும் வேதனையும் இல்லாமற் போகிறது.

4. துக்கத்துக்கு உரிய காரணங்களை அகற்றிவிட்டால் துக்கமும் இல்லாது போய்விடும். துக்க காரணங்களை அகற்றுவதற்கு, எட்டு நெறிகள் அதாவது எட்டு ஒழுக்கங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றை ஒருவன் வாழ்க்கையில் கடைப்பிடிப்பானாயின், துக்க காரணங்களை அகற்றி விடலாம்.

இந்த நான்கு உன்னதமான வாய்மைகளைப் பௌத்த நூலோர் 'சத்வாரி ஆரிய ஸத்தியானி' என்று பாளிமொழியில் கூறுவர்.

மேன்மையான எட்டு நெறிகள்: துக்கத்துக்குக் காரணமாக இருப்பவற்றை அகற்ற, புத்தர்பெருமான் எட்டு நெறிகளைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று கூறியுள்ளார். இவற்றைப் பாளிமொழியில் 'ஆரிய அஷ்டாங்க மார்க்கம்' என்று குறிப்பிடுவர். இவை வருமாறு: 1. நற்காட்சி, 2. நல்லூற்றம், 3. நல்வாய்மை, 4. நற்செய்கை, 5. நல்வாழ்க்கை, 5. நன்முயற்சி 7. நற்கடைப்பிடி. 8. நல்அமைதி.

1. நற்காட்சி: துக்கத்தை அறிவது, துக்கத்தின் காரணத்தை அறிவது, துக்கத்தைப் போக்க வழிகளை அறிவது, துக்க நிவர்த்திக்கு உரிய எட்டு மார்க்கங்களைக் கடைப்பிடிப்பது. இவையே நற்காட்சி எனப்படும்.

2. நல்லூற்றம்: காம எண்ணங்களிலிருந்து விடுபட்டிருத்தல். தீய எண்ணங்களிலிருந்து விடுபட்டிருத்தல்; கொடிய

எண்ணங்களிலிருந்து விடுபட்டிருத்தல். இவையே நல்லூற்றம் எனப்படும்.

3. நல்வாய்மை: பொய்பேசாது உண்மையை மட்டுமே பேசுதல், நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருத்தல், மனிதர்களை ஏமாற்றாது இருத்தல், உறவினர்களிடத்தில், சமூகத்தில், அரசு அவைகளில் பொய் சாட்சி கூறாதிருத்தல், கொடுமையாகப் பேசாமை, வீண் பேச்சுப் பேசாமை, காதுக்கும் மனத்துக்கும் இனிமையானவற்றைப் பேசுதல், கட்டுக்கதைகளைப் பேசாமை, சச்சரவு முதலியன ஏற்படும் வகையில் பேசாமை ஆகியவையே நல்வாய்மையாகும்.

4. நற்செய்கை-உயிர்களைக் கொல்லாமை, கொல்லும் செயல்களிலிருந்து விலகியிருத்தல், உயிரினங்களின் நன்மையில் நாட்டமுடன் இருத்தல். திருடாமை, திருட்டுச் சம்பந்தமானவற்றில் தொடர்பு கொள்ளாமை, சட்டத்துக்குப் புறம்பாக மாதர்களுடன் உறவு கொள்ளாமை, இவை நற்செய்கைகள் ஆகும்.

5. நல்வாழ்க்கை - தீய நெறிகளில் பொருள் ஈட்டி வாழ்க்கை நடத்தாமல், நல்ல நெறியில் நியாயமான நெறியில் பொருள் ஈட்டி வாழ்க்கை நடத்துவது நல்வாழ்க்கை எனப்படும்.

6. நன்முயற்சி-தவிர்க்கவேண்டியதில் முயற்சி, சமாளிக்க வேண்டியதில் முயற்சி, அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டியதில் முயற்சி, நிலைநிறுத்திக்கொள்ள வேண்டியதில் முயற்சி என நான்கு வகைப்படும்.

காமம், குரோதம் போன்ற தீய எண்ணங்கள் மனதில் தோன்றாதபடி தவிர்க்க வேண்டும். மீறித் தோன்றிவிட்டால் அவற்றைச் சாமாளிக்க முயல வேண்டும். மேன்மையான சூழ்நிலைகள் உருவாக முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். ஆர்வத்துடன் செயலில் இறங்கவேண்டும். உருவாக்கப்பட்ட மேன்மையான சூழ்நிலைகள் நீடித்து நிலைத்து நிற்க முயல வேண்டும்.

7. நற்கடைப்பிடி-எண்ணம், பேச்சு, செயல் ஆகிய மூன்றையும் பரிசுத்தமாக வைத்துக் கொள்வதில் அதிக கவனத்துடன் இருத்தல்.

8. நல்அமைதி-மனதை ஒருநிலையில் நிறுத்தித் தியானம் செய்தல், கிளைக்குக் கிளை தாவும் குரங்கைப்போல மனதை அங்கும் இங்கும் அலையவிடாமல், மனதைக் கட்டுப்படுத்தப் பழகிக்கொள்ளல். இதனால்மனம் நல்லமைதியைப் பெறும்.

இவையே பௌத்த சமயத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் ஆகும். தத்துவங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைவிட, நல்லொழுக்கங்களுக்குப் பௌத்த சமயம் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது என்று கூறலாம்.

உதாரணமாக, ‘உலகம் எவ்வாறு தோன்றிற்று? எப்படித் தோன்றிற்று? கடவுள் ஒருவர் உண்டா? இல்லையா?’ என்னும் விசாரணைகளில் கவனத்தைச் செலுத்தாமல், ஒருவருடன் ஒருவர் எப்படி ஒற்றுமையாகவும் அன்பாகவும் வாழலாம், வாழவேண்டும் என்பதற்குரிய நெறிகளில் அதிகக் கவனம் செலுத்துமாறு அது போதனை செய்கிறது.

இவ்வாறு ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்கும்போது, தீவிரமாகவோ மந்தமாகவோ செயற்படாமல் நிதானமாக நடுவழியில் ஒழுகுமாறு போதனை செய்கிறது. இதுவும் புத்த சமயத்தில் முக்கியமான ஒரு கோட்பாடு ஆகும்.

பெரியோராய் இருப்பவர்கள் உங்களுக்கு வழியைச் சொல்ல முடியுமேயன்றி, துன்பங்களிலிருந்து உங்களை விடுவிக்க, அதாவது நிர்வாணப்பேற்றை உங்களுக்கு நல்க அவர்களால் முடியாது. உங்களது சொந்த முயற்சியாலும் அனுபவத்தாலும் நீங்கள் நிர்வாணப் பேற்றைப் பெறவேண்டும். மற்றவர்கள் யாரும் உங்களுக்கு நிர்வாணப் பேற்றை நல்கி ஈடேற்றமுடியாது. இது முக்கியமான மூன்றாவது போதனை.

# செந்நின்ற மனப் பெரியார்

திரு. கா. அ. ச. ரகுநாயகன், எம். ஏ.
திருப்பத்தூர். (வ. ஆ. மா.)

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

சேக்கிழார் பெருமான் அடியார்கள் அறுபத்துமூவரின் வரலாற்றை வரைந்துள்ளார். அடியார்கள் பல்வேறு இனத்தினர்; பல்வேறு குலத்தினர். அவர்கள் தத்தமக்குரிய தொழிலில் ஈடுபட்டுப் பல்வேறு நிலையில் வாழ்ந்தவர்கள். அவர்கள் அனைவர்க்கும் பொதுவில் இருந்தது ஒன்றுதான். அது அவர்களின் மன நிலை. இறைவனிடம் இறவாத இன்ப அன்பு பூண்டு ஒழுகும் மனநிலை ஒன்றே அவர்கள் அனைவரிடமும் இருந்து விளங்கிய சிறப்பாகும். அதனைப் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடியருளினார் சேக்கிழார் பெருமான்.

ஆனாயர் புராணத்தில் குழலோசையின் மாண்பை விளக்கிச் செல்கிறார் சேக்கிழார். கண்ணன் குழல் ஊதும் சிறப்பைப் பெரியாழ்வார் கூறும் பகுதி, இதனோடு ஒப்புநோக்கத் தக்கதாய் உள்ளது.

ஆனாயர் என்னும் அடியார் தம் இசை ஞானத்தால் இறைவன் அருளுக்கு உரியவர் ஆகின்றார். மழநாட்டில் திருமங்கலம் என்னும் ஊரில் ஆயர் குலத்தில் தோன்றியவர் ஆனாயர். இவருடைய இயற்பெயர் தெரியவில்லை போலும்! ஆனிரைகளை மேய்த்து வாழும் ஆயர்குல மக்களின் தலைவனாக அவர் விளங்கினார். ஆனிரைகளோடு காட்டுக்குச் செல்லுவதும், அவைகள் அங்கே நறும்புல் மேய்ந்து தூநீர் அருந்துமாறு மேய்ப்பதும் அவர் தொழிலாக இருந்தன. ஆனிரைகளை மேய்த்தலோடு குழல் ஊதி மகிழ்தல் அவருடைய வழக்கம்.

ஆனாயர் சிவபெருமானிடம் அன்பு பூண்டவர். கார் காலத்தில் ஒரு நாள் வழக்கம் போல், இவர் ஆனிரைகளோடு காட்டுக்குச் சென்றார். அங்கே கொன்றை மரம் ஒன்று பூத்துக் குலுங்கி நின்றது. கண்ணைக் கவர்ந்த அக்காட்சி ஆனாயரின் கருத்துள்ளும் புகுந்தது. அவர்க்கு அப்போது சிவபெருமானுடையதிருக்கோலமே நினைவில் எழுந்தது. அன்பு பெருகியது; காதல் கசிந்தது. ஆனாயர் வேய்ங் குழலைத் தம் மணி வாயில் வைத்து இசை எழுப்புகிறார். அவர் உள்ளத்தில் தேங்கி நிற்கும் ஐந்தெழுத்து மந்திரம் இசையாய்ப் பொங்கி எழுகிறது. அந்த அமுத கீதம் எல்லா இடங்களிலும், எல்லா உலகங்களிலும் சென்று பாய்கிறது.

தேவருலகில் வளரும் கற்பகத் தருவின் தேனும், தேவர்கள் அருந்தும் அமுதமும் கலந்து வந்து செவியில் நிறைவது போல, எல்லா உயிர்களிடத்திலும் அந்த மதுரவொலி நிறைகின்றது.

அறுகம்புல்லைத் தின்னும் ஆனிரைகள் அசை போடுவதை விட்டு ஆனாயரின் அருகே வந்து தம்மை மறந்து நிற்கின்றன. தாயின் மடியில் வாய் வைத்துப் பாலுண்ணும் இளங் கன்றுகள் அதனை மறக்கின்றன. இவைகளே யன்றி ஆனேறுகளும் மான் முதலான காட்டு விலங்குகளும் அவருடைய இசையைக் கேட்டுத் தம் உடல் சிலிர்க்க அவரிடம் அணைகின்றன.

கார்கரலத்தில் களிநடம் செய்யும் மயில் கூட்டமும், வேறு பல புள்ளினமும் தம் செவியில் இசை நிறைந்து தம் உணர்வுகளை இழக்கின்றன. ஆனிரைகளைமேய்த்தற் பொருட்டு வந்த ஆயர்களும் தம் தொழிலை மறந்து ஆனாயரின் இசை வெள்ளத்தில் மூழ்கி விடுகின்றனர்.

நரகலோகத்தில் உள்ளவர்கள் பாதலம் வழியாக அந்தக் காட்டுக்கு வந்து சேர்கின்றனர். மலைகளில் வாழும் தெய்வ மகளிர் இசையில் மயங்கி அங்கே வருகின்றனர். ஒளி பொருந்திய வித்தியாதரர்களும், சாரணர், கின்னரர், அமரர் ஆகியோரும்

விமானம் ஏறி வான வெளியில் வந்து சேர்கின்றனர்.

கற்பகக் காவில் கிளிகளைத் தம் கையில் ஏந்தி அமுதூட்டும் தேவ மகளிர் அனைவரும் இசையைக் கேட்ட அளவில் தம் தலை முடிகளைச் சீவி முடிக்கவும் மறந்து விமானத்தில் ஏறி விரைந்து வருகின்றனர்.

ஆனாயரின் குழலோசையைச் செவி மடுத்த உயிர்கள் அனைத்தும் ஒருமை உணர்வில் நிலை பெற்றுத் தம்முள் நிலவும் பகைமையை மறக்கின்றன. மயிலைக் கண்டு அஞ்சும் அரவங்கள் அம் மயில்கள் மீது மருண்டு வீழ்கின்றன. மயில்கள் தம் அலகினால் அவைகளைக் கொத்திக்கிழிக்கவில்லை; மாறாக, நட்புணர்வில் அசையாமல் நிற்கின்றன. அது போலவே சிங்கமும் யானையும் ஒன்றாக இணைந்து வருகின்றன. இசையில் மயங்கி ஓடி வரும் மான் கணங்கள் புலிகளின் அருகே போய் நிற்கின்றன.

இயற்கை நியதிகளும் இசையின் வயப்பட்டுத் தம் இயல்பு மாறுகின்றன. காற்று அசையவில்லை. மரங்கள் தம் கிளைகளை ஆட்டவில்லை. மலையருவிகளும் காட்டாறுகளும் நீர் ஓடாமல் நிலை பெறுகின்றன. வானில் முகிற் கூட்டங்கள் புடை பெயர்வதில்லை. அவைகள் இடி முழக்கம் செய்யவில்லை. மழையைச் சொரியவுமில்லை. கடல்கள் ஏழும் தம் ஆரவாரத்தைநிறுத்தி விட்டு ஆனாயர் இசையை அமைதியாகக் கேட்கின்றன.

ஆனாயரின் இசை இவ்வாறு அண்ட சராசரங்கள் அனைத்திலும் நிறைந்து எல்லாவற்றையும் ஓர் உணர்வில் இணைக்கின்றது. இந்த இசை ஆனாயரின், அன்பின் விளைந்த ஆரமுதாகலின் வையம் முழுதும் நிறைந்து வானத்தையும் தன் மயமாக்கிவிடுகிறது. அதற்கு மேலும் சென்று இறைவனுடைய திருச் செவியை அடைகிறது. இந்த இசையின் பெருமையை,

''மெய்யன்பர் மனத்தன்பின்
விளைந்த இசைக் குழலோசை,
வையந்தன் னையும்நிறைத்து
வானம்தன் வயமாக்கிப்
பொய்யன்புக் கெட்டாத
பொற்பொதுவில் நடம்புரியும்
அய்யன்றன் திருச்செவியின்
அருகணையப் பெருகியதால்''

என்று ஆசிரியர் கூறுகின்றார்.

ஆனாயரின் குழலோசையைக் கேட்டருளிய இறைவன் இறைவியோடு கூடித் தம் விடைமேலேறி வானில் தோன்றினார்; குழலோசையின் வழி ஐந்தெழுத்தினால் தம்மைப் பரவும் ஆனாயர்முன்பாக இறைவன் எழுந்தருளினார். ஆனாயரின் குழலோசையை எப்போதும் கேட்பதற்கு விரும்பிய இறைவன் ''இந்நின்ற நிலையே நம்பால் அணைவாய்'' என்று அருளினார். 'செந்நின்ற மனப் பெரியோர்' ஆகிய ஆனாயரும் அவ்வாறே ஆண்டவன் அருகே சென்றணைந்தார். அவர் பிறப்பொழிந்தது; 'சாமீப' நிலையடைந்தார். தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர்; முனிவர்கள் வேதமுழக்கம் செய்தனர். ஆனாயர் குழலோசை எழுப்பியவாறே இறைவனுடன் செல்வாராயினர். இறைவன் பொன்னம்பலத்தே புகுந்து மறைந்தார்.

இறைவனுடைய ஐந்தெழுத்து மந்திரத்தைத் தம் நெஞ்சத்து நிறுத்தியவராதலினால், ஆனாயர் எழுப்பிய குழலோசை ஆருயிர்கட்கெல்லாம் அருமருந்தாய் நின்றது; மண்ணையும் விண்ணையும் கடந்து செல்லும் ஆற்றல் பெற்றது; பொய்யன்பர்க்கு எட்டாத ஐயனுடைய திருச்செவியையும் எட்டியது. அதற்கும் மேலாகத் தன்னை எழுப்பிய ஆனாயரையும் இறைவன்பால் அணைவித்தது.

''இறைவனுடைய புகழையன்றி வேறு எதனையும் பேசாதிருப்பேனாக'' என்னும் மொழியை விவிலிய நூலில் காண்கின்றோம். எல்லாப் புகழும் அவனுக்கே உரியது என்பதை நாம் உணர வேண்டும். இறைவனுடைய பெருமைகளையே இசைக்குரிய பொருளாக நாமும் கொள்வோமானால், அது எல்லோருக்கும் நலம்விளைவிக்கும். ஆனாயரின் வரலாறு நமக்கு உணர்த்தும் பொருண்மை இதுவேயாகும்.

# சேதுபதி சிலை திறப்பு விழா

8.2.81 அன்று பிற்பகல் 3.45 மணியளவில் இராமநாதபுரம் மாவட்டம் உத்தரகோசமங்கையிலுள்ள அருள்மிகு மங்களநாதசுவாமி ஆலயத்தின் சோபன மண்டபத்தையும், அதனுள் அமைக்கப்பட்டுள்ள மன்னர் எஸ். இராமநாத சேதுபதியின் திரு உருவச்சிலையையும், மாண்புமிகு தமிழ்நாடு அரசு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் திறந்து வைத்து ஆற்றிய உரை மற்றும் நிகழ்ச்சித் தொகுப்பு :

8.2.81 அன்று மாலை 3.45 மணியளவில் உத்தரகோசமங்கை அருள்மிகு மங்களநாதசுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற விழாவிற்கு, இந்து அறநிலையத் துறை ஆணையர் திரு. யு. சுப்பிரமணியன், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமை வகித்தார். அப்போது, செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் அவர்கள் கோவிலில் கட்டப்பட்டுள்ள பிராகார சோபன மண்டபத்தையும், மண்டபத்தினுள் அமைக்கப் பட்டுள்ள இராமநாதபுரம் மன்னர் எஸ். இராமநாத சேதுபதி அவர்களின் திரு உருவச்சிலையையும் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார்கள். விழாவிற்கு வந்திருந்தவர்களைச் சேதுபதி ராணி டி. இந்திராதேவி, பி.ஏ., அவர்கள் வரவேற்றார். விழாவில் கடலாடி தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு வி. சத்தியமூர்த்தி, இராமநாதபுரம் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. டி. இராமசாமி, மற்றும் மாநிலங்களைவை உறுப்பினர் திரு பொ. அன்பழகன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

காலம் சென்ற இராமநாதபுரம் மன்னர் இராமநாத சேதுபதி துவக்கிய இத் திருப்பணியை நேரில் காண மன்னர்முன்பு என்னை அழைத்தார். ஆனால் அவர் உயிருடன் இருந்த பொழுது சில சூழ்நிலைகளால் இங்கு வந்து இப்பணியைக் காண முடியாமல் போனதற்காக வருந்துகின்றேன். கடந்த 21 ஆண்டுகளுக்கு முன் திட்டமிடப்பட்ட இத்திருப்பணி செயற்படத்துவங்கி 3 ஆண்டுகளில் இவ்வளவு அற்புதமான பிராகார மண்டபம், இராமேசுவரம் கோவிலில் அமைக்கப்பட்டுள்ள மண்டபம் போல், அதே மாதிரி இங்கும் எழுப்பப்பட்டுள்ளது. இம்மண்டபத்திற்கு இதுவரை 14 லட்சத்திலிருந்து 16 லட்சம் வரை செலவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்கள். இன்னும் இம்மண்டபம் முற்றுப் பெற 15 லட்சம் செலவிடத் திட்டமிடப் பட்டுள்ளதாகவும் கூறினார்கள்.

இந்த ஆலய வரலாற்றைப்பற்றி மக்கள் தெரிந்திருக்கிறார்களா? என்பது பற்றி எனக்கு தெரியாது. நம் மண்ணின் வரலாறு தெரியாத மக்கள் வாழ்கின்ற துர்ப்பாக்கிய நிலையை நாம் ஆங்காங்கே காண்கின்றோம். இந்த ஆலயம் 1300 ஆண்டுகளுக்கு முன்பு எழுப்பப்பட்டது என்று தெரிகின்றது. இதனால் இது தொன்மைச் சிறப்பு பெற்றது என்பதையும் நாம் அறிய வேண்டும். இப்பகுதியில் உள்ள இராமேசுவரம் கோவில், திருப்புல்லாணியில் உள்ள கோவில், மற்றும் இந்த உத்தரகோச மங்கைக்கோவில் மூன்றும் பண்டைய காலச் சிறப்பு வாய்ந்தவை.

மாணிக்க வாசகரின் திருவாசகத்தில் சிறந்த பகுதி என்று கருதப்படுகின்ற பகுதியில், உத்தரகோசமங்கையைப் பாடிச் சிறப்பித்துள்ளார். மேலும் மாணிக்க வாசகரிடம் பாண்டிய மன்னன் குதிரை வாங்கக் கொடுத்தபணத்தைக் குதிரை வாங்காமல் செலவு செய்துவிட்டு இந்த உத்தரகோச மங்கைக்கோவிலில் பலபாடல்களைப் பாடி ஆண்டவனை வேண்டிநின்ற போது ஆண்டவனே நேரில் காட்சி தந்ததாக வரலாறு உள்ளது. மாணிக்க வாசகர் குதிரை வாங்கியிருந்தால் அது இன்று வரை இருக்காது; செத்திருக்கும். ஆனால் அவர் இந்த உத்தரகோசமங்கையைப் பற்றிப் பாடிய பாடல்கள் திருவாசகத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

தமிழக மக்கள் அந்தக் காலத்தில் வளமுடன் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதை இதுபோன்ற ஆலயங்கள்தான் பெருமையுடன் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. மேலை நாடுகளில் அமெரிக்கா ரஷ்யா ஜப்பான் போன்ற நாடுகள் விஞ்ஞானத்தில் முன்னேறியிருந்தாலும், நம் சிற்பக்கலையைப் போன்று அவர்களால் செய்ய முடியவில்லை. நம்முடைய சிற்பக்களைத்தான் அவர்கள் விரும்புகிறார்கள். இன்று அமெரிக்காவில் ஒரு கோவில் கட்டினால் நம் தமிழகச் சிற்பிதான் அங்குச் சென்று சிற்ப வேலையைச் செய்ய வேண்டியுள்ளது.

பண்டைய மன்னர்களால் போற்றப்பட்டு வளர்க்கப்பட்ட சிற்பக்கலைதான் இன்று நம்மிடம் எஞ்சி உள்ளது. இக்கலையை உலகம் முழுவதும் பார்த்து வியக்கின்றனர். இதுபோன்ற கலையை வளர்த்த மன்னர் பரம்பரையினர் கட்டிய இந்தக் கோவிலில் இன்றும் அந்த மன்னர் பரம்பரையினர் மேற்கொண்டு ஆரம்பித்துவைத்துள்ள பணிகளை நாம் முடித்தாக வேண்டும். இப்பகுதி மக்களும் அதற்கு உறுதுணை புரிய வேண்டும். இத்திருப்பணி முடிவதற்கு அரசும், அறநிலையத்துறையும் துணை நிற்கும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பகுதி மக்கள் இந்தக் கோயிலின் சிறப்பைப்பற்றித் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து அவர்கள் தங்கள் பங்கைச் செலுத்த வேண்டும்.

உலகத்தமிழ் மாநாட்டை ஒட்டி, பாண்டித்துரைத் தேவர் சிலை, மதுரையில் திறந்து வைக்கப்பட்டது. பாண்டித்துரைத் தேவரைப்பற்றி இந்தச் சீமையிலே வாழ்கிற எத்தனை பேர் தெரிந்துவைத்திருக்கிறார்கள். திருக்குறள் உரையைத் தயாரித்த பொன்னுச்சாமித் தேவரைப் பற்றி எவ்வளவு பேர் அறிந்திருக்கிறோம். இவர்களைப்பற்றி நாம் பிறருக்கும், உலகிற்கும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். இவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மதுரையில் அங்கயற்கண்ணி கோவிலில் தங்கத்தேர் உலா நடைபெற உள்ள இந்நாளில் தான், இம்மண்டபத் திறப்பு நிகழ்ச்சியையும் நீங்கள் நடத்திக் கொள்ள நேரிட்டது ஆண்டவன் சித்தம். தமிழ் மொழியும், மறைகளும், நூல்களும் தமிழ்நாட்டின் ஆலயங்களும் தான், தமிழ் இனத்திற்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கின்றன.

மன்னர் சேதுபதி அவர்களின் மகத்தான தொண்டிற்கு இன்றைய தலைமுறையினர் நன்றி காட்ட வேண்டுமானால், இத்திருப்பணி முடித்துக்காட்டப் படவேண்டும். சேதுபதிக்காக அல்ல, இம்மண்ணிற்காக, தமிழ் மொழிக்காக, தமிழ்நாட்டிற்காக, இந்தியத் துணைக்கண்டத்தின் புகழை வெளிநாட்டினர் அனைவரும் அறிந்து கொள்வதற்காக. இத்திருப்பணிக்காக எல்லாத் தரப்பினரும் உதவி செய்யவேண்டும் என்ற வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

இத்திருப்பணி, இந்த ஆலய நிர்வாகம் போன்றவற்றைப் பற்றியெல்லாம் சில குறிப்புக்களை என்னிடத்தில் அளித்திருக்கிறார்கள். இராணி சேதுபதி அவர்களோடு கலந்து பேசித் தக்க முடிவுகளை எடுக்க உள்ளேன்.

இராமேசுவரம் தீவைப் பற்றியும் குறிப்பிடப்பட்டது. புரட்சித்தலைவர் அரசு, ஏற்கனவே 28 கோடி ரூபாய் செலவில் மாபெரும் திட்டம் ஒன்றை, தீவை அழகு படுத்தும் திட்டத்தைத் தயாரித்துள்ளது. திட்டத்தை மத்திய அரசின் நிதி உதவிக்காக அனுப்புகிறோம். மத்திய அரசு உதவி செய்யவில்லையென்றால், உலக வங்கியை நிதி உதவி செய்யுமாறு கோர மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்வோம். அப்படி உதவி அளிக்கப்படவில்லை யென்றால், அனுமதி அளிக்கப்படவில்லையென்றால், புரட்சித் தலைவரின் அரசு திட்டங்களைத் தீட்டித் தீவை அழகுபடுத்தும் திட்டம் செயல்படுத்துவதற்கான வழி வகைகளைக் காணும்.

அப்படி சுற்றுலாச் சிறப்புமிக்க இடமாக ஆக்கப்பட்டால், இராமநாதபுரம் பகுதி அதைத் தொடர்ந்து இந்த உத்தரகோசமங்கைப் பகுதி போன்ற பகுதிகளினுடைய பெருமைகளெல்லாம் தெரியக்கூடிய வாய்ப்பினை நாம் ஏற்படுத்த இருக்கிறோம், என்பதைத் தெரிவிக்கக்கடமைப் பட்டுள்ளேன்.

இராமேசுவரம் தீவிற்குச் செல்லும் சாலைப் பால வேலை முடிந்து விட்டால், மின்னல் வேகத்தில் இந்தப் பகுதிகளெல்லாம் வளர்ச்சிபெறும் எனவும், பல்லாயிரக் கணக்கானவர் இப்பகுதிகளுக்கு வரும் நிலை வளர்ந்து இலட்சக் கணக்கான மக்கள் வருகின்ற நிலை ஏற்படும் எனவும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொண்டு எனக்கு இந்த நல்ல வாய்ப்பினைத் தந்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

விழா இறுதியில் திரு காசிநாததுரை அவர்கள் நன்றி கூறினார்.

# சோதிலிங்கத் தலங்கள்

இறைவன் அறிவுமயமாக, அறிவே உருவாக உள்ளவன். அறிவு ஒளிவடிவாக இருப்பது. ஆகவே, நம் ஆன்றோர்களும் சான்றோர்களும் சோதியாய்ச் சுடராய்ச் சூழொளி விளக்காய் இறைவனைக் கண்டு அநுபவித்தனர்; நமக்கும் அறிவித்துள்ளனர். ஆண்டவன், ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியாய்த் தோன்றிய நிகழ்ச்சியைச் சிவ மகா புராணமும், ஏனைச் சிவ புராணங்களும் கூறுகின்றன. இங்ஙனம் இறைவன் சோதிப் பிழம்பாய்த் தோன்றிய இடமே திருவண்ணாமலை. அவ்வண்ணாமலை இன்னும் செம்மை நிறத்துடன் செம்மாந்திருப்பதே சிறந்த சான்று. இதே வரலாற்றை அடிப்படையாகக்கொண்டு விளங்குபவை தாம், துவாதச சோதிலிங்கத் தலங்கள், துவாதசம்-பன்னிரண்டு, பன்னிரண்டு தலங்கள் என்பது இதன் பொருளாகும். சோமநாதம், மல்லிகார்ச்சுனம், உச்சயினி, மகாகாளம், ஓங்காரம், வைத்தியநாதம், பீமசங்காரம், இராமேசுவரம், நாகேசம், விசுவேசம், திரியம்பகம், கேதாரம், குசுமேசம் என்பன பன்னிரு சோதி லிங்கத் தலங்களாகும்.

1. சோமநாதம் :

சௌராட்டிரம் எனப்படும் பம்பாய் நகரத்தை அடுத்த குசராத் மாநிலத்தின் கத்தியவார்த் தீப கற்பத்தின் தென்கரையில் அமைந்த பட்டினமாக விளங்குவது சோமநாதம். பன்னிரு சோதிலிங்கத் தலங்களுள் முதன்மையாக வைத்து எண்ணப்படும் சிறப்பு மிக்கது; வரலாற்றுச் சிறப்பு மிக்கது. மொகலாய மன்னர்களால் பதினான்கு முறை கொள்ளையிடப்பெற்றும், அண்மைக் காலத்தில் பெரும் பொருட்செலவுசெய்து திருப்பணி செய்யப்பெற்றுப் பொலிவுடன் திகழ்கிறது. இக்கோயில் கோட்டை வடிவில் அமைந்துள்ளது. இத்தலத்தை வழிபட்டோர் முற்பிறப்பை உணர்வர். பிரதான லிங்கம் பூமிக்கடியில் மறைவாக உள்ளது. இரண்யா முதலிய ஐந்து நதிகள் சோமநாதத்திற்கு அருகில் பாய்கின்றன. முத்தியளிக்கும் ஏழு தலங்களுள் முக்கியமானது இது.

சோமன் எனப்படும் சந்திரன் ரோகிணியிடம் மட்டும் அன்பு செலுத்தியதனால் தட்சனால் சாபம் பெற்றான். சாப நீக்கம் பெறுவதற்குப் பிரமதேவன் கட்டளைப்படி இத்தலத்தில் சிவபெருமானைக் குறித்துப் பத்துக்கோடி முறை 'மிருத்யுஞ்சய' மந்திரத்தைச் செபித்தான். சிவபரம்பொருள் வெளிப்பட்டுச் சந்திரனாகிய சோமனுக்கு வளரவும் தேயவும் அருள் வழங்கினார். சோமன் அருள் பெற்ற தலமாதலின் சோமநாதம் எனப்பெற்றது. சோமவாரத்தில் வரும் அமாவாசை இரவும், சிவராத்திரியும் இத்தல வழிபாட்டிற்குச் சிறந்த காலமாகக் கருதப்படுகின்றன.

2. மல்லிகார்ச்சுனம்:

அர்ச்சுனம்-மருத மரம். குப்த பரம்பரையில் வந்த இளவரசி சந்திரவதி என்பவள், மல்லிகை மலர்கொண்டு இங்குள்ள இறைவனைப் பூசித்தமையாலும், அர்ச்சுன விருட்சம் (மருத மரம்) தல விருட்சமாக இருப்பதாலும், மல்லி கார்ச்சுனம் எனப்பெயர் பெற்றது இத்தலம். இது ஸ்ரீ சைலம், மல்லிகார்ச்சுனம் எனவும், தேவாரத்துள் திருப்பருப்பதம் எனவும் வழங்கப்படுகிறது. இது பாரத நாட்டின் நடுவிடமாகிய ஆந்திர மாநிலத்தில் உள்ளது. மருத மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்ட மூன்று தலங்களுள் இதுவடக்கில் உள்ளது. தெற்கில் நெல்லை மாவட்டத்தில் புடார்ச்சுனமும் (திருப்புடை மருதூர்), தஞ்சை மாவட்டத்தில் இவ்விரண்டிற்கும் நடுவிலிருப்பதாகிய மத்தியார்ச்சுனமும் (திரு இடை மருதூர்) உள்ளன. சோதி லிங்கத் தலங்களுள் மூவர் தேவாரமும் பெற்ற சிறப்புடையதலம் இது. ஞானசம்பந்தர் 'சுடுமணி உமிழ் நாகம்' எனத் தொடங்கும் பதிகத்தாலும், நாவரசர் 'கன்றினார் புரங்கள் மூன்றும்' என்னும் பதிகத்தாலும், சுந்தர மூர்த்தி சுவாமிகள் 'மானும் மரையினமும்' எனத் தொடங்கும் பதிகத்தாலும் போற்றி வழிபட்டு உள்ளனர்.

நந்தி எம்பெருமான் பர்வத (மலை) வடிவமாகிச் சிவபெருமானைத் தாங்குவதால் பருப்பதம் எனப்பெற்றது. உலகத்தை முதலில் சுற்றி வருபவருக்கே முதலில் திருமணம் என விநாயகருக்கும், முருகனுக்

னுக்கும், பெருமானும் பிராட்டியும் ஒரு போட்டி யமைத்தனர். விநாயகர் அம்மை யப்பரை 'அம்மையப்பரே உலகுக்கு அம் மையப்பர்' என்ற கருத்தோடு ஏழு முறை வலம் வந்து போட்டியில் வெற்றி பெற்றுச் சித்தி, புத்தி இருவரை யும் திருமணம் புரிந்துகொண்டார். உல கம் முழுவதும் சுற்றிவந்த முருகன் விநாய கர் வெற்றியுற்றது கண்டு சினமுற்றவராய்க் கிரவுஞ்சகிரிக்குச் சென்று பிரம்மச்சாரி யாய் வாழ்கின்றார். தாய் தந்தையர் தேடி வந்தனர். வருவதை அறிந்த முருகன் மேலும், அப்பாற் செல்ல, தேவர்களின் வேண்டுகோட்படி மூன்று யோசனை தூரத் தில் தங்கினார். இவரைத் தேடிவந்த அம்மையப்பர் தங்கிய இடமே ஸ்ரீசைலம் என வழங்கப்படுகிறது. இதுகயிலைமலைக் குச் சமமாக எண்ணப்படுகிறது. அமா வாசையில் சிவனும், பௌர்ணமியில் அம் மையும் குமரனைச் சென்று கண்டுமகிழ் கின்றனர் என்பது ஐதிகம். இலிங்காயத் துக்களான சைவர்கள் இத்தலத்தைப் பூகைலாசம் எனப் பெரிதும் போற்றுகின்ற னர். இது கிருஷ்ணா நதிக்கரையருகில் உள்ளது.

3. மகாகாளம்:

உச்சயினி என்பது ஏழு மோட்சத் தலங்களுள் ஒன்று. அஃது அவந்திகா எனப் படுவது. இது மத்தியப் பிரதேசத்தில் அமைந்துள்ள சோதிலிங்கத் தலமாகும். இத்தலம் பண்டைக் காலத்தில் அமராவதி அவந்திகா என வழங்கியது. மாளவதேயத் தின் தலைநகர். விக்கிரமாதித்தனும், அவ னுக்கு எதிரியாகிய சாலிவாகனனும்தோன் றிய இடம். இவ்விருவர் பெயராலும் சகாப்தங்கள் தோன்றியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. காளிதாசர், தண்டி முதலிய புலவர்கள் வாழ்ந்த இடம். இரு காளி கோயில்கள் இங்கே சிறப்புறத் திகழ் கின்றன. மகா காளருடைய திருக்கோயில் சிப்ரா நதிக்கரையில் அமைந்துள்ளது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் கும்பமேளா இங்கேதான் நடக்கிறது.

அவந்தி தேசத்தில் வேதப்பிரியன் என்ற அந்தணனுடைய குமாரர்கள் நால்வரும், சிவபூசைச் சிறப்பாலும் நல்லொழுக்கத் தாலும் அந்நாட்டை வளமுடைய தாக்கி னர். அப்பொழுது ,இரத்தினமாலா என் னும் மலையிலிருந்து வந்து தூஷணன் என்ற அரக்கன், எங்குமே நன்மை நடக்க வொட்டாது தடுத்தனன். பல ஊர்களி லும் உள்ள அந்தணர்கள் ஒன்றுகூடிவேதப் பிரியனின் குமாரர்களோடு சேர்ந்து, இவ் வரக்கனை அழிக்க இயலாது என்று கரு தியவர்களாய் நாள்தோறும் பார்த்திவ பூசை செய்துவந்தனர். அவர்கள் நாள் தோறும் பூசை செய்வதற்கு மண் எடுத்த இடம் பெரிய குளமாக ஆயிற்று. அந்தணர் கள் யாவரும் பூசை புரிந்து தியானத்தில் இருக்கும் போது, தூஷணன் என்னும் அரக்கன் அவர்களைத் துன்புறுத்தத் தொடங்கினான். அப்பொழுது அக்குளத்தி னின்றும் மகா காளேசுவரர் தோன்றி அரக்கனை அழித்து அவர்களைக் காத் தார். அவர்களின் வேண்டுகோளின்படி சிப்ரா நதிக்கரையில் பெருமான் எழுந் தருளினார்.

4. ஓங்காரம்:

நர்மதா நதியும் காவேரி எனப்படும்நதி யும் சங்கமமாகி ஓடிவரும் அமைப்பு ஓங் கார வடிவமாக உள்ளதால், இத்தலம் ஓங் காரம் எனப்பெற்றது. மத்தியப் பிரதேசத் தில் நர்மதை நதிக்கரையில் அமைந்துள் ளது. நர்மதா நதியில் பல நிறமுள்ள பாண லிங்கங்கள் கிடைக்கின்றன. கங்கை யாற்றின் இடக்கரை மட்டுமே புனிதமா னது என்பர். ஆனால் நர்மதையின் இரு கரைகளுமே புனிதமானவை யென்று கூறு வர். இப்புண்ணிய நதி, இத்தலத்தில் பிர ணவ வடிவமாக ஓடுவது சிறப்பாகும். விநாயகர் ஐந்து முகத்துடன் காட்சியளிக் கிறார். விந்தியமலை, மேருமலைபோல் சிறப்புற வேண்டி, நாரதர் சொற்படி சிவ பூசை செய்யக் கருதி, ஓங்கார ரூபமாய் ஓர் எந்திரம் அமைத்துப் பார்த்திவலிங்க பூசை ஆறுமாத காலம் இயற்றி வரம் பெற்றது. இதுவே ஓங்காரேசுவரம் ஆயிற்று என்பர்.

5. வைத்தியநாதம்:

இத்தலம் ஆந்திர மாநிலத்தில் (ஐதரா பாத்தில்),முற்காலத்திலிருந்தது. தற்போது மகாராஷ்டிரா மாநிலத்தில் விளங்குகிறது. மாபெருந் தூண்களுடன் மர வேலைப்பாடு மிக்கதாகச் சிறந்து விளங்குவது இக்கோ யில். தென்னாட்டில், தஞ்சை மாவட்டத் தில் உள்ள வைத்தியநாதர் ஆலயத்தைப் போலவே முடி இறக்குதல், மாவிளக்குப் போடுதல் முதலிய பிரார்த்தனைகளை மக்கள் இங்கே நிகழ்த்துகின்றனர். சாம கானம் இசைத்துச் சிவனருள் பெற்ற இராவணன், அவரிடமிருந்து ஆத்மலிங்கத் தைப் பெற்று இலங்கைக்குஎடுத்துச்செல்ல முற்பட்டான். இயலாமையினால் சிவபெரு மானிடம் முறையிட, அதனை அவர் இரு பிளப்பாக்கிக் காவடியில் வைத்துச் செல்ல அருளினார். அவ்வாறு தூக்கிச்சென்ற இராவணன் இத்தலத்திற்கு வந்தவுடன், சிறுநீர் கழிக்க வேண்டியிருந்ததால், அரு கில் நின்ற சிறுவனிடம் காவடியைக் கொடுக்க, சிறுவனாக வந்த விநாயகர் காவடியைக் கீழே வைத்து மறைந்தார். முற்பகுதிப் பிளப்பு கோகரணத்தலமாக வும், பிற்பகுதிப் பிளப்பு இத்தலமாகவும் விளங்கலாயின.

6. பீமசங்கரம்:

இத்தலம் மகாராட்டிர மாநிலத்தில் பம் பாயிலிருந்து 60 கல் தொலைவில் உள்

ளது. காட்டின் நடுவிடத்தில் உள்ளது. ஆலயம் இப்போது சிறிது சிதைந்துள்ள நிலையில் காணப்படுகிறது. ஆலயம் சிறியது. பீமாநதி இவ்வாலயத்தின் அருகில் உற்பத்தியாகிறது. இங்கே இலிங்கமூர்த்தி ஒரு முழ உயரத்தில் காட்சி தருகிறார். கும்பகர்ணனுக்கும் கற்கடி என்ற அரக்கிக்கும் பிறந்த பீமன் என்ற அசுரன், பிரியதர்மன் என்ற அரசனின் சிவபூசையைத் தடுத்து அவனைக் கொல்ல முயன்றபோது, சிவபெருமான் அவ்வரசன் பூசித்த மண்ணாலாகிய சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு, பீமனைச் சங்கரித்து, தேவர்கள் வேண்டுகோட்கிணங்கிச் சாந்தமூர்த்தியாகப் பீமசங்கரர் என்ற பெயரில் விளங்குகிறார். பீமனைச் சங்கரித்ததால் பீமசங்காரம் என்ற பெயர் பெற்றது இத்தலம்.

7. இராமேசுவரம் :

தமிழ்நாட்டின் தென் பகுதியில் வங்கக் கடலில் அமைந்த ஒரு சிறு தீவாக உள்ளது இத்தலம். கடல் நீராட்டு இத்தலத்திற் சிறப்பு மிக்கது. ஆலயத்துள் பதினான்கு தீர்த்தங்களுக்குமேல் உள்ளன. எல்லாவற்றிலும் கோடி தீர்த்தம் மிக்க சிறப்பு வாய்ந்தது. காசியாத்திரை செய்தவர்கள் இராமேசுவர யாத்திரை செய்தால்தான் யாத்திரை நிறைவு பெற்றுப் பயனடைகின்றனர் என்பது ஐதிகம். நமது தமிழ் நாட்டிலுள்ள சோதிலிங்கத்தலம் இது ஒன்றே என்பது குறிப்பிடத்தக்கது. ஞானசம்பந்தரும், நாவரசரும் பாடியுள்ள நன்மைமிக்க தலம். ஆலயம் மிகப் பெரியது. உலகிலேயே மிகப் பெரிய பிராகாரத்தை உடையது. இராவணனைக் கொன்ற பழி நீங்குவதற்குக் கழுவாயாக இராமன் மணலால் சிவலிங்கம் அமைத்து வழிபட்ட சிறப்புடைமையின் இராமேசுவரம் எனப் பெயர் பெற்றது. இராவணனை அழிப்பதற்கு முன்பு அவனை அழிப்பதற்காகவே இங்குள்ள இறைவனை இராமன் வழிபட்டு அருள் பெற்றார் என்பதும், மற்றொரு வரலாறாகும்.

8. நாகேசம் :

மகாராட்டிர மாநிலத்தில் கோண்டிரெயில் நிலையத்திலிருந்து 14 கல்தொலைவிலுள்ளது நாகேசமென்னும் இத்தலம். சிவலிங்கத்தின் கோமுகம் கிழக்கு முகமாக இத்தலத்தில் திரும்பியுள்ளது. நாமதேவ சுவாமிகளின் பெருமையை வெளிப்படுத்துவதற்காகச் சிவபிரான் இவ்வாறு திரும்பியுள்ளார் என்பது ஐதிகம். சிவலிங்கம் ஒரு மலைக் குகைக்குள் இடம் பெற்றுள்ளது. மோகினி வடிவங்கொண்ட திருமாலும், பிட்சாடனர் வடிவங் கொண்ட சிவபெருமானும், தாருகாவனம் சென்ற வரலாறு இத்தலத்தோடு தொடர்பு ஏற்படுத்திப் பேசப்படுகிறது. அயோத்திக்கருகிலுள்ள சரயூ நதிக்கரையில் நாகேசுவரர் என்ற பெயரோடு ஒரு சிவலிங்கம் உண்டு. இதனையே நாகேசம் எனச் சிலர் கூறுவர். ஆனால், வரலாற்றுப்படி ஔண்டாவில் உள்ள சிவலிங்கமே சோதிலிங்கம் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

9. விசுவேசம் :

வருணை, அசி என்ற இரு நதிகளின் சங்கமத்திற்கு இடையில் உள்ளதால் இத்தலம் வாரணாசி எனப்பட்டது. கர்மங்களைப் போக்குவதாலும், சிவஞானத்தால் உயிர்கள் ஒளிபெறுவதாலும், காசி என்று இது பெயர் பெற்றது. இது உத்தரப்பிரதேசத்தில் அமைந்துள்ளது. முத்தி தரும் தலங்களில் இதுவும் ஒன்று. கங்கை இத் தலத்தில் உத்தரவாகினியாக (வடக்கு நோக்கி)ச் செல்கிறது. இவ்வாறு செல்வது சிறப்புடையதாகும். கங்கையின் மேற்குக் கரையில் விசுவநாதர் ஆலயமும், கேதாரநாதர் ஆலயமும் சிறப்புடையவை. வருணை, அசி என்ற இரு நதிக்கும் இடையில் 64 தீர்த்தக் கட்டங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் மணிகர்ணிகா கட்டம் மிகச் சிறந்துள்ளது. அன்னபூரணி, விசாலாட்சி, காலபைரவர், துண்டிராச கணபதி முதலிய மூர்த்திகட்குத் தனித்தனியே கோயில்கள் உள்ளன. இத்தலத்தில் இறப்பவர்கள் முத்தி பெறுவர் என்பது வரலாறு.

10. திரியம்பகம்:

மகாராஷ்டிர மாநிலத்தில் நாசிக்கிலிருந்து தென் கிழக்கில் 18 கல் தொலைவில் உள்ளது இத்தலம். பிரமகிரி என்ற மலையைச் சார்ந்துள்ளது இத் தலம். அம்மலையில் கோதாவரி, அகல்யா, வைதர்ணா, மேற்கு நோக்கிச் செல்லும் கங்கை ஆகியவை உற்பத்தியாகின்றன. அங்குள்ள காட்டில் மூன்று லிங்கங்கள் மூன்று கண்போல் உள்ளன. இதனால் திரியம்பகம் எனப் பெயர் வந்ததென்பர். பிரமன் சிவபெருமானின் திருமுடியைக் கண்டதாகப் பொய் உரைத்ததால், அவனை மலையாகுமாறு சபித்தார் பெருமான். பிரமனது தவத்திற்கு இரங்கிப் பேத பாவனையின்றிப் பிரமகிரியியில் இருப்பதாக அருள் பாலித்தார். இது காரணமாகவே இம் மலைக்குப் பிரமகிரி எனப்பெயர் வந்ததென்பர். அஷ்ட பைரவர் முதலிய திருவுருவங்கள் இங்கே உள்ளன. மாக்கல்லாலான லிங்கத்திற்குரிய பீடம் மட்டுமே உள்ளது. பீடத்தின் நடுவில் ஒரு சிறு செம்பு கொள்ளக் கூடியதாக ஒரு குழி உண்டு; இதனுள் மூன்று சிவலிங்க வடிவங்கள் இருக்கின்றன. இக்குழியிலிருந்து கங்கை வெளிப்படுகிறது.

11. கேதாரம்:

உத்தரப் பிரதேசத்தில் இமயமலையில் உள்ளது திருக்கேதாரம். தெற்கு நோக்கிய சந்நிதி. திருஞான சம்பந்தர், சுந்தரர் ஆகிய இருவராலும் பாடப் பெற்ற சிறப்புடையது. அரித்துவாரம் வழியாக உருத்

திரப் பிரயாகை வரை நடந்து செல்ல வேண்டும். குப்த காசிவரை பேருந்து களில் செல்லலாம். கேதாரம் செல்லும் வழியில் இந்திர நீல பருப்பதம், அநேக தங்காவதம் ஆகிய பாடல் பெற்ற தலங் களையும் தரிசிக்கலாம். 'கேதார' என் னும் சொல், சிவபெருமான் கங்காதே வியை முடியில் வைத்திருக்கிறான் என் பதை உணர்த்தும். கேதார நாதர் ஆல யம், கடல் மட்டத்திலிருந்து 11,750 அடி உயரத்தில் உள்ளது, இங்குள்ள விஷ்ணுவைத் தரிசித்தால் பதரியிலுள்ள நாராயணனைத் தரிசித்த பலன் உண்டு. திருமால் நரநாராயண வடிவத்தில் இருந்து, பார்த்திவ லிங்கத்தில் சிவபெரு மானைப் பூசித்து, 'கேதார மலையில் தேவரீர் எழுந்தருளியிருக்க வேண்டும்' என்ற பிரார்த்தனைக்கு இணங்கச் சுவாமி இங்கு எழுந்தருளியுள்ளார் என்பது ஐதி கம். கேதார நாதர் ஏப்ரல் முதல் செப் டம்பர் முடிய மனிதர்களால் பூசிக்கப்படு கிறார். அக்டோபர் முதல் மார்ச்சு முடி யப் பனியால் மூடப்பட்ட நிலையில் சிவ பெருமானுக்குத் தேவ பூசை நிகழுகிறது.

12. குசுமேசம் :

ஆந்திர மாநிலத்தில் ஔரங்கபாத்தில் இறங்கி இத்தலத்திற்குச் செல்லவேண்டும். சுதர்மன் என்ற அந்தணனின் மனைவி யான குசுமையின் பெயரால் இறைவன் குசுமேசுவரன் எனப் பெயர் பெற்றான். இங்குள்ள சிவலிங்கம் செந்நிறம் உள்ளதா கக் காட்சி அளிக்கிறது. அம்பிகை குங்குமப் பூவால் வழிபட்ட சிறப்புடையது. சுதர் மனின் இரண்டாவது மனைவியான குசு மையின் புத்திரன் கொலை செய்யப் பட்டபோது, அவள் பூசைக்கிரங்கி இறை வன் அவளுக்கு மகனை எழுப்பியருளிய சிறப்புடையது. பின்னே சொல்லப்பட்ட இரண்டு சோதிலிங்கத் தலங்களிலும்உள்ள புண்ணிய தீர்த்தங்களில் நீராடுதல், சகல பாவங்களையும் போக்கி மனத்திற்கு அமைதியை அளித்து வீட்டுலகையும் நல் கும். இங்குள்ள இலிங்கங்களின் பெயர் களை நாடோறும் காலையில் நினைத்த மாத்திரத்தே பாபம் அகன்று, நினைத்த செயல் நிறைவேறும் என்பது ஆன்றோர் துணிபு.

## திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்)

மானும் மரைஇனமும் மயில்இனமும் கலந்தெங்கும்
தாமே மிகமேய்ந்து, தடஞ்சுனை நீர்களைப் பருகி,
பூமாமரம் உரிஞ்சிப் பொழில்ஊடே சென்று புக்குத்
தேமாம் பொழில் நீழல்துயில் சீபர்ப்பத மலையே!

—சுந்தரர்

## திருஇராமேசுவரம்

கோடி மாதவங்கள் செய்து குன்றினார் தம்மை எல்லாம்
வீடவே சக்க ரத்தால் எறிந்துபின், அன்பு கொண்டு
தேடிமால் செய்த கோயில் திருஇரா மேச்சு ரத்தை
நாடிவாழ் நெஞ்ச மே!நீ; நன்னெறி ஆகும் அன்றே!

—திருநாவுக்கரசர்

## திருக்கேதாரம்

தொண்டர் அஞ்சு களிறும் அடக்கிச், சுரும்பார்மலர்
இண்டை கட்டி வழிபாடு செய்யும்இடம் என்பரால்;
வண்டுபாட, மயில்ஆல, மான்கன்று துள்ள, வரிக்
கெண்டைபாயச், சுனைநீலம் மொட்டு அலரும் கேதாரமே!

—சம்பந்தர்

# ஆறுபடை வீடு

'செந்தமிழ்ச் செல்வர்'
திரு. கு. பழநிவேலு முதலியார்,
சிதம்பரம்.

தேவர்களின் துயர் தீர்க்கும்பொருட்டு, வடிவும் முடிவும் இல்லாத பரம்பொருள், மூவிரு முகங்களும், ஆறிரு புயங்களும், ஈராறு நயனங்களும் அமைந்த திருமேனி கொண்டு அருள்புரிந்தார். நமது கருமேனி போன்றது அன்று அத்திருமேனி. அது அருளேயாகும்.

ஆறு சமயங்கட்கும், ஆறு ஆதாரங்கட்கும், ஆறு அத்துவாக்களுக்கும், ஆறு படைவீடுகட்கும் அதிபன் ஆறுமுகப் பெருமான். அந்தப் பெயர் ஆறு பொருள்களைக் கொண்டது. தெய்வத்தன்மை, இனிமை, இளமை, மணம், மகிழ்ச்சி, அழகு என்ற ஆறு தன்மைகளையுடையவன் முருகன். மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களே ஆறு படை வீடுகளாம். திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்ற திருத்தலங்களே ஆறு படைவீடுகள்.

''ஆறு திருப்பதிகண் டாறெழுத்தை-
யன்புடனே
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே''
—கந்தர்கலிவெண்பா.

1. **திருப்பரங்குன்றம்** : *(செல்வம் தரும் படைவீடு)*

சூரபன்மாதியரை அழித்துத் தேவர்களுக்கு அருள்பாலித்துப் பிறகு தேவர்கள் புடைசூழப் பரங்கிரிவந்த முருகப்பெருமான், இந்திரனது புதல்வி தெய்வயானையைத் திருமணம் செய்துகொண்ட திருத்தலம் திருப்பரங்குன்றம். தெய்வயானையை மணந்தமையால், இது வாழ்வுச் செல்வமும், நக்கீரரைக் காத்து முக்தியளிக்க வழி செய்ததால் பரவாழ்வுச் செல்வமும் தருவது.

குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே
—நக்கீரர் (1)

போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோக மளிக்கும் முகமதி
—குமரகுருபரர் (2)

2. **திருச்செந்தூர்** : *(பகைவெல்லும் படை வீடு)*

தேவர்களை வதைத்துக் கொண்டிருந்த சூரபன்மனுக்கு, வீரவாகுத் தேவரைத் தூது அனுப்பி, முருகப்பெருமான் கொலுவீற்றிருந்த இடம் செந்திலம்பதி. பிறகு சூரபன்மனை இருகூறாகப் பிளந்து சேவலும், மயிலுமாக்கி அருள்புரிந்து, மீண்டும் வந்து அமர்ந்த இடம் திருச்செந்தூர். தேவதச்சனால் அமைக்கப்பட்டதுதான் அங்குள்ள திருக்கோயில். அங்கு முருகன் சிவலிங்கம் அமைத்துத் திருமஞ்சனம் செய்து பூசித்தார். தேவர்களை வதைத்த சூரபன்மாதியரை அழித்து அருள்புரிந்தமையால், வழிபடும் மற்றையோருக்கும் பகையைப் போக்கி அருளும் திருத்தலம் திருச்செந்தூர்.

செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முறுக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட்டன்றே
—நக்கீரர் (1)

வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூரனைத் தடிந்து
தெவ்வருயிர் சிந்தும் திருமுகம்
—குமரகுருபரர் (2)

3. **திருவாவினன்குடி** : *(பழநி—காலனை வெல்லும் படைவீடு)*

பிரும்ம தேவரிடம் நாரதர் பெற்ற தெய்வ மாங்கனியை, அவர் பரமசிவத்துக்கு அளிக்க, அதுகாலை விநாயகர், வேலவர் இருவரும் வேண்ட, உலகை ஒரு நொடியில் யார் முன்னதாக வலம் வருகிறாரோ அவர் பெற்றுக்கொள்ளட்டும் எனக் கணபதி; பரமசிவன் பார்வதியைச் சுற்றி வந்தால் உலகை வலம்வந்ததாகுமெனச் சுற்றி

வந்து கனியைப் பெற்றுக் கொண்டார். அதே நேரம் வேலவர் மயில்வாகனத்தில் உலகைச் சுற்றி வந்து பார்க்க, கனி கணபதி கையிலுள்ளதைக் கண்டு பிணக்குற்று, கோவணந் தரித்து வந்துதங்கிய இடம் தான், திருவாவினன்குடி. அதுகாலை பராசக்தி வந்து ஞானம் ஆகிய பழம் நீதான் எனக் கூறினாள்.

ஈசன் உருகி மடியினில் வைத்
தென்றும் இளையோய், அறிவுடைய
தேசு தரும்நம் வாணுதற் கண்
மணி நீ, சிறுவனோ? பெரியை!
வாச நறுமென் கனியுமொரு
கனியோ? மதுர மொழிவாயால்
பேச அரிய மறைஞானப்
பிள்ளை: பழம்நீ எனப்புகன்றார்

—பழநித் தலபுராணம்

4. திருவேரகம்: (கல்வியளிக்கும் படைவீடு, சுவாமிமலை)

சிவபெருமானை வணங்கச் செல்லும் வழியில் கொலுவீற்றிருந்த முருகக் கடவுளை, வணங்கியபின் எல்லோரும் சிவனிடம் சென்றனர். பிரம்மதேவர் மட்டும் சற்று அகங்காரத்துடன் வணக்கம் செய்யாமல் சென்றதைக் கண்ட கந்தக்கடவுள் அவரை ஓங்காரத்திற்குப் பொருள் சொல்லக் கேட்டுப் பிரம்மதேவருக்குப் பொருள் தெரியாததால், அவரைச் சிறையிலிட்டுச் சிருஷ்டித் தொழிலைத் தானே ஏற்று நடத்துங்காலை, சிவபெருமான் குமரனை அணுகி வினவ, நடந்ததை விவரிக்க, அப்படியாயின் ஓங்காரத்தின் உட்பொருளை நீ எனக்குச் சொல் என, அவரும் குரு சிஷ்ய பாவத்தில் இருந்தால்தான் முடியும்என, அவ்வாறே ஆகுக எனத் தன் திருத்தோளில் தனயனைச் சுமந்து, ஓங்காரத்தின் உட்பொருளைக் குமரன் சொல்லச் சிவன் கேட்ட தலமே சுவாமிமலை.

எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே
—நக்கீரர்

வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்கும் கமல முகம்.
—குமரகுருபரர்

5. குன்றுதோறாடல்: (முக்தியருளும்தலம்)

(திருத்தணிகை மற்றும் குமரன் குடி கொண்டுள்ள மலைக்கோயில்கள் எல்லாம், குன்றுதோறாடல் எனப் பெறும்)

ஆறுமுகப் பெருமான் முத்தியளிக்கும் மூர்த்தியாவர். வள்ளியம்மையாரைத் திருமணம் புரியக் குமரன் கைலையிலிருந்து புறப்பட்டு வந்து தங்கிய இடமே திருத்தணிகையாகும். அதுகாலை, நாரதரும் அவரிடம் சென்று வள்ளியம்மையை மணம் புரிந்து அருள்பாலிக்க வேண்டிக் கயிலையங்கிரிக்குச் சென்றுகொண்டிருக்கும் வழியில் இருவரும் சந்தித்த இடமே திருத்தணிகை. முருகனும் அவ்வாறேஆகுக என்று அங்கிருந்து புறப்பட்டு வள்ளியை மணம் புரிந்து யாவர்க்கும் அருள்புரிகின்றார். வள்ளி தெய்வயானை திருமணம் என்பது இச்சாசக்தி, கிரியாசக்தியின் மூலம் பரம் பொருள் அருள்பாலிப்பது என்பதாகும்.

மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க்குமே
—நக்கீரர்

அந்தண்மையும், பாச நீக்கமும் முக்திக்கு வித்துக்கள். ஆதலின் குன்றுதோறாடல் முத்திதரும் தலத்துக்கு எடுத்துக்காட்டாயிற்று.

6. பழமுதிர்சோலை: (அழகர்கோயில்)
(உடல்நலம் தரும் திருத்தலம்.)

உடல் நல்ல நிலையில் இருந்தால்தானே மற்றப் பேறு கிடைக்க ஏதுவாகும். ஆகவே, கேட்ட வரங்களை அருளுபவன் முருகன். இத்தலத்தில் பக்தர்கள் கேட்கும் குறையைப் பூர்த்தி செய்யும் முகமாக அருள்பாலிக்கின்றான் கந்தன்.


ஆர்வலர் ஏத்த அமர்ந்தினி தொழுகிக்
காதலின் உவந்து வரங்கொடுத் தன்றே
—நக்கீரர்


வந்தடியில் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளும் தெய்வமுகத் தாமரை
—குமரகுருபரர்

இசை பயில் சடாட்சர மதாலே
இகபர சௌபாக்கியம் அருள்வாயே
—அருணகிரிநாதர்.




திருவுத்தரகோச மங்கை அருள்மிகு மங்களநாதசுவாமி திருக்கோயில், திரு. எஸ். இராமநாதசேதுபதி அவர்களின் சிலைத் திறப்பு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களும், ஆணையர் திரு. யு. சுப்பிரமணியன் அவர்களும் உரைநிகழ்த்துதல் ( 8-2-81 ).





மதுரைத் தமுக்கம் மைதானத்தில் அமைந்துள்ள அறநிலையக் கலைக்கூடத்திற்குத் தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் வருகை தருதல். உடன் இருப்பவர் மதுரை மீனாட்சியம்மை கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. வி. என். சிதம்பரம் அவர்களும், அவர்தம் புதல்வன் கணேசன், புதல்வி ஆனந்தி ஆகியோரும். (5-1-81.)



ஃஅறநிலையக் கலைக் கூடத்திற்குக் கருநாடக முதல்வர் திரு. குண்டுராவ் அவர்கள் வருகை தந்து, கண்டு மகிழ்தல். உடனிருப் போர் ஆணையர் திரு. யு. சுப்பிரமணியம் அவர்களும், திரு. வி.என். சிதம்பரம், அவர்களும், பிறரும். (5-1-81)

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.